சிவமயம்

# குமரகுருபரன்



த. 3114

மலர் 25] ஆண்டு மலர் தை ௴ 1974-ஆ [இதழ் 1

ஆண்டு மலர் 50 பைசா வருடச் சந்தா ரூ 5-00

# குமரகுருபரன்

ஆசிரியர் குழு.

1. திரு. Dr. K. சிவராமன் அவர்கள், M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்.
காசிச் சர்வகலாசாலை, காசி.

2. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A., B.O.L.
ஓய்வுபெற்ற செந்தமிழ்க்கல்லூரி பிரின்ஸிபால், திருப்பனந்தாள்.

3. திரு. பி. செந்தில்நாயகம் பிள்ளை அவர்கள் B. A.
ஓய்வுபெற்ற மாவட்ட வருவாய் அதிகாரி, புளியங்குடி.

4. திரு. டி. எச் விவேகானந்தம்பிள்ளை அவர்கள் [J. P.]
B. A., L. T. ஓய்வுபெற்ற அசிஸ்ட்டண்டு கமிஷனர், சென்னை—85

5. திரு. Dr. T B, சித்தலிங்கம் அவர்கள் M. A. Phd.
அஞ்சல் வழிக்கல்வித்துறை, மதுரை பல்கலைக்கழகம், மதுரை-2

K. சுப்பிரமணிய பிள்ளை

கௌரவ நிர்வாக ஆசிரியர்

T-UN-439

உ

திருச்செந்திலாண்டவன் துணை



# குமரகுருபரசுவாமிகள்

உ

சிவ சிவ

திருச்செந்திலாண்டவன் துணை



திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் 20 ஆவது அதிபர்

**ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்**

(அருள் ஆட்சிக்காலம் 1941–1972)

உ

சிவ சிவ

திருச்செந்திலாண்டவன் துணை



திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் 21 ஆவது அதிபர்
ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்
சுவாமிகள் அவர்கள் [16-5-1972 முதல்]

# பொங்கல் வைப்போம்!

**திருமதி. வசந்தா ஏ. பி. எஸ். மணி அவர்கள்,**
அசோக்நகர், சென்னை–83.

எத்திசையும் புகழ்மணக்கும் இணையற்ற உழவருக்கு
எழில்மங்கை தைபிறந்த இன்பத்தை பொங்கலென்போம்
பக்திக்கு பொருள்சொல்லும் பண்புகண்டு பகைவிலகும்
பழந்தமிழர் பால்மணத்தை புகழ்ந்துள்ளம் பொங்கட்டும்

சத்தியத்தின் நிழல்பட்டு சக்திகொண்ட தமிழரினம்
தைத்திங்களுக்கு விருந்திட்டு வாழ்த்துசொல்லும்பொங்கலின்று
தித்திக்கும் செந்தமிழில் தெருவெங்கும் இசையொலிக்க
தென்றலுக்குள் நெய்மணத்தை அள்ளிவரும் பொங்கலின்று

கத்திக்கு நிகரான கற்புடைய பெண்கள் இங்கு
கரும்பாக இனிப்பதனால் கன்னித்தமிழ் பொங்கலென்போம்
முத்திரையாய் முத்தமிழ் முருகன்பெயர் நிலைத்திருக்க
முக்கனியும் முப்பாலும் மணங்கமழ்ந்து பொங்குமிங்கு

சாத்திரங்கள் சாற்றுமிந்த தொல்லுலகம் நல்லுழவர் கையில்
செல்லுகின்ற நெடுங்கதையை சொல்லவந்த பொங்கலின்று
புத்தியில்லா பிறவிகளை புரட்டாடும் பாவிகளை
பொங்கிவரும் பாலடுப்பின் தீயாக்கி பொங்கல் வைப்போம்!

உ
சிவமயம்
திருச்செந்திலாண்டவன் துணை




மலர் 25 | பிரமாதீச ௵ தை மீ 1௳ [14-1-74] | இதழ் 1

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே
திருச்சிற்றம்பலம்

# " குமரகுருபரன் "

## இருபத்தைந்தாவது ஆண்டுமலர்

## தோற்றுவாய்

பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் றிறைஞ்சிடுக
ஆங்கொன்றைக் கண்ணி யவர்.

—குமரகுருபரர்

''குமரகுருபரன்'' திங்கள் இதழ் இருபத்து நான்கு ஆண்டுகள் தமிழிலக்கியம், சைவ சமயம் சார்ந்த கட்டு

ரைகளைத் தாங்கி நின்று நன்கு வளர்ந்து, வாசகர்களுக்கு நல்விருந்து நல்கி பொங்கல் நன்னாளாகிய இன்று (14–1–1974) இருபத்தைந்தாவது ஆண்டுத்தொடக்கம் எய்திப் பேரெழிலுடன் போதருவதைக் கழிபேருவகையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகவாம் பேரறிவாளர்; ஒத்ததறிவார்; நயனுடையார்; பெருந்தகையார்; கடனறி காட்சியர் என்று போற்றத்தக்க அருட்பெருங் குணங்களுடன் திகழ்ந்து, ஊருணி நீர் நிறைந்தாற் போலவும், பயன் மரம் உள்ளூர்ப் பழுத்தாற் போலவும், மருந்தாகித் தப்பா மரம் போலவும் ஒப்புரவுகள் ஒல்லும் வகையான் ஓவாதே ஆற்றிப் பெருங் கொடையாளராக விளங்கியருளியவர்களும், முனிபுங்கவரும் ஆகிய பெருந்தவச் செல்வர். ஸ்ரீ காசி மடத்தின் 20-வது அதிபராக எழுந்தருளியிருந்து ''குமர குருபரனைத்'' தோற்றுவித்தும், பத்திரிகைக்கு ஒருஅச்சகம் இன்றியமையாததெனத் திருவுளங்கொண்டுஒரு அச்சகமும் நிறுவி, அச்சகத்திற்கு வேண்டிய இயந்திரக் சாதனங்களும், அச்செழுத்துக்கள் முதலான சகல தளவாடச் சாமான்களும் அமைத்துக் கொடுத்ததோடு ஷ அச்சகத்திற்கெனக் காலி நிலமும் வாங்கி, அதில் சகல வசதிகளுடன் கூடிய புதுக்கட்டிடமும் கட்டிக் கொடுத்தருளிய பேரன்பு என்றும் மறக்கற்பாலது அன்று. அம்மட்டோ! அச்சகம் தளரா வளர்ச்சியுடனும் சிறப்புடனும் விளங்கப் பன்னிரு திருமுறைப் பதிப்புநிதி அறக்கட்டளையும் ஏற்படுத்திஷநிறுவனங்களெல்லாம் நிரந்தரமாக வளர்ந்து வருவதற்கான சாஸ்வத நிதிகளும் தனித்தனி வகுத்தருளி பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து பல்லாற்றானும் பேணிப் புரந்தருளிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் சென்ற வைகாசித் திங்களில் வாரணசியில் பரிபூரணம் எய்தி, சுவாமிகள் திருவுளப் பாங்கின் வண்ணமே ஆதிகுமரகுருபர சுவாமிகளைப் பின்பற்றிக் கங்கையில் ஜல சமாதியானதும் அன்பர்கள் அனைவரும் அறிந்ததே.

அவர்கள் அருள்வழி நின்றொழுகும் ஸ்ரீ காசி மடத்தின் 21-வது அதிபரான ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் அரவணைப்பிற்கும் அருள் நோக்கிற்கும் இலக்கிய மாகியதற்கொப்பவே இத்திங்கள் இதழின் வளர்ச்சிக்கு ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்களும் ஆவன புரிந்தும், அறிவுரைகள் அவ்வப்போது வழங்கியும் அன்புடனும் ஆர்வத்தோடும் உதவிகள் பல புரிந்தும், அருட்செங்கோல் நடாத்தியருளும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் திருமுன்னர் இவ் இருபத்தைந்தாம் ஆண்டுமலரைப் பணிவன்பு மலராகத் திசை நோக்கிய வணக்கங்களுடனும் நன்றியறிதலுடனும் சமர்ப்பணம் செய்துகொள்கிறேன். ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்களும் ஸ்ரீலஸ்ரீ

அருள்நந்தி சுவாமிகளைப் போலவே அறக்கட்டளைகளை நிறுவுவதி லும், பேணுவதிலும், இலக்கிய சமய வளர்ச்சிகளைப் போற்றுவதி லும், ''குமரகுருபரன்'' வளர்ச்சியிலும் மிகுந்த ஈடுபாடும் பேரார்வ மும் உடையவர்களாய் ஆக்கமும் ஊக்கமும் அளித்துவருகின்றார்கள். அவர்கள் ஆட்சியில் முதல் அறக்கட்டளையாக ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் பரிபூரணம் எய்திய வைகாசித் திங்கள் சுக்கில பட்சம் பூசநட்சத்திரத்தில் ஸ்ரீ காசி குமாரசாமி மடத்தில் ஆண்டுதோறும் சாதுக்களுக்கு பண்டாரா நடத்துவதற் கான நிதி வகுத்தருளி அறக்கட்டளையும் நிறுவியுள்ளார்கள். அதனைத் தொடர்ந்து பற்பல அறக்கட்டளைகளும் நிறுவப்பெற்று வருவதும் அன்பர்களறிந்ததே.

இவர்கள் ஸ்ரீகாசி மடத்தின் அருளாட்சியை ஏற்றபின்பு சென்ற விஜயதசமி (17—10—1972) வெளியீடாகப் பதினோராம் திருமுறை யின் இரண்டாம் பதிப்பு வெளியிடப் பெற்றுள்ளது. இந்த நூற்றாண் டின் தொடக்கத்தில் வெளிவந்ததும், பல ஆண்டுகளாகப் பதிப்பில் இல்லாததும் ஆகிய திருக்குறள்-மணக்குடவர் உரை திருக்குறள் பதிப்பு நிதி வெளியீடாக 6—9—73உ வெளியாகியுள்ளது.

திங்கள் தோறும் 'குமரகுருபரனில்' வழக்கமாக வெளிவரும் இலக்கிய, சமயக் கட்டுரைகளோடு அருள் நூல்களின் நுண்ணிய நலங்களையெல்லாம் அன்பர்களுக்கு வாரி வழங்குதற் பொருட்டு பேராசிரியர்கள் திரு. கு. சுந்தரமூர்த்தி திரு. தா. ம. வெள்ளை வாரணம் ஆகியவர்களைக் கொண்டு தேவாரப் பதிகங்களுக்கு உரை யெழுதி வெளியிடச் செய்தருளியுள்ளார்கள்.

ஸ்ரீ ஆதிகுமரகுருபர சுவாமிகள் அருளிச் செய்த செய்யுட்கள் சொல்லின் பத்தை விளைவிப்பன; பொருட்செறிவு உடையன; கம்பீர மான நடையுடையன, இயற்கை வருணனைகள் செறிந்தன, அவற் றினூடே சிவபக்தி மிளிர்வன, படிக்கப் படிக்கத் தெவிட்டாத இன்ப மூட்டுவன. தமிழினிடத்தே தெய்வத்தன்மையைக் கண்ட குமர குருபர சுவாமிகள் அதனைத் தெய்வத் தமிழ் என்றும் பாராட்டுகின் றார். எனவே குமரகுருபர சுவாமிகளின் நூல்களை யாவரும் எளிதில் கற்று அறிப்து கொள்வதன் பொருட்டு, அவர் நூல்களைப் பற்றிய விளக்கவுரை, உரைநடை முதலியன வெளிவருவதை வாசகர்கள் நன்கு அறிவர்.

ஸ்ரீகுமர குருபர சுவாமிகள் அருளிய நூல்களை ஒவ்வொன்றாக எடுத்துப் பொழிப்புரை எழுதுபவர்கள் திரு. பாலகவி. வயினாகரம் வே. இராமனாதன்செட்டியார் அவர்கள் (தத்புருஷதேசிகர்) ஆவார், அவர்களுடைய உரைநடையும் தொடர்ந்து வரும்.

இம்மலருக்குக் கட்டுரைகள் எழுதிய, திருமுருக கிருபானந்த வாரியார், திரு. வே. இராமநாதன் செட்டியார், திரு. ஐ. கோ. இராமநாதன், திரு. ராமநாமப்பரதேசி, திரு. த. பி. ஆறுமுகம், திரு, ஆ. ஜானகிராமன். திரு. P.S. இராமமூர்த்தி, திரு. எ. மாணிக்கம், திருமதி. ப. உமாதேவி, திரு. வி. ஜி. சீனிவாசன், திரு. கு. சுந்தரமூர்த்தி, திரு. இரா. சுவாமிநாதன், திரு. மு. பரசுராமன், திரு. ர. வேங்கடரத்தினம், திரு. தெ. முருகசாமி. திரு. கு. சுந்தர மூர்த்தி, திரு. B. சீனிவாசன், திரு. பா. சொக்கலிங்கம், திரு. மு. வைத்தியநாதன், திரு, மா. வேங்கடேசன். திரு. சா. சந்துரு, திரு தா. ம. வெள்ளைவாரணம், திரு. ஜே வி. எஸ் சுவாமி, திரு. P.M. ஞானசேகர், திருமதி. வசந்தா ஏ. பி. எஸ். மணி, திரு. அரங்க முத்துமணி ஆகியவர்களுக்கும் செந்திலாண்டவன் திருவருள் மல்குக.

சந்தா நேயர்கள் தொடர்ந்து சந்தாவைச் செலுத்திக் குமரகுருபரனை வளர்க்கும் பணியில் பங்கு கொண்டு செந்திலாண்டவன் திருவருட் பேறடைவாராகுக.

குமரகுருபரன் திங்கள் தோறும் உரிய காலத்தில் வெளிவருவதற்கு எப்பொழுதும் உதவி வரும் அன்பர்களுக்கும், குமரகுருபரனின் வாசகர்கள் அவ்விதழைப் படித்துச் செம்மையான அறிவு பூத்துத்துலங்க வேண்டுமென்னும் நோக்கத்துடன், உதவும் ஆசிரியர் குழுவினருக்கும், உரிய காலத்தில் அச்சுப்பணியை நிறைவு செய்துவரும் குமரகுருபரன் அச்சகப் பணியாளர்களுக்கும் இதழ்களைக் குறித்த காலத்தில் அனுப்பி உதவி வரும் கலைக்கோவில் சிப்பந்திகளுக்கும், திருச்செந்திலாண்டவன் திருவருள் துணை முன்னிற்க!

வளர்க குமரகுருபரன்! வளர்க நற்சைவம்! வாழிய நற்செந்தமிழ்!

இங்ஙனம்,

ஸ்ரீவைகுண்டம்,
14—1—74

K. சுப்பிரமணிய பிள்ளை,
கௌரவ நிர்வாக ஆசிரியர்.

# உள்ளுரை


| வரிசைஎண் | கட்டுரையாளர் | பக்கம் |
|---|---|---|
| 1 | குமரகுருபரன் இருபத்தைந்தாவது ஆண்டுமலர் தோற்றுவாய் | i |
| 2 | திருவியலூர் உய்யவந்த தேவநாயனுர் அருளிய திருவுந்தியார் – உரைவிளக்கம்<br>சிவஸ்ரீ தத்புருஷதேசிகர், பாலகவி திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள் தேவகோட்டை. | 1 |
| 3 | ஸ்ரீ திருஞானசம்பந்த சுவாமிகள் பஞ்சரத்தினம்<br>திரு. ஐ. கோ. இராமநாதன் அவர்கள் சுண்டப்பாளையம் கோவை | 4 |
| 4 | அருள்மொழி அமுது<br>திரு. ஸ்ரீராமநாமப்பரதேசி அவர்கள்; 3119, கீழ இரண்டாம் வீதி புதுக்கோட்டை (திருச்சி மாவட்டம்) | 5 |
| 5 | இறைவனும் மனிதனும்<br>திரு. த. பி. ஆறுமுகம் எம். ஏ. அவர்கள் ம. தி. தா. இந்துக்கலாசாலை, திருநெல்வேலி 1. | 9 |
| 6 | அருள்வேண்டல்<br>திரு. வண்ணை. ஆ. ஜானகிராமன் அவர்கள் சென்னை–21 | 10 |
| 7 | வாழ்க! வாழ்க! வாழ்க!<br>திரு. அருணகிரிதாசன் P. S. இராமமூர்த்தி அவர்கள் டால்மியாபுரம் (திருச்சி மாவட்டம்) | 12 |
| 8 | கருணை<br>திருப்புகழமிர்தம் ஆசிரியர், பக்த திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் சென்னை | 18 |
| 9 | சீலமும் சிவப்பேறும்<br>திரு ஸ்ரீராமநாமப்பரதேசி அவர்கள் 3119, கீழ இரண்டாம் வீதி புதுக்கோட்டை–1 (திருச்சி மாவட்டம்) | 26 |
| 10 | இமயம் போல் நிற்க இனிது<br>அரங்க முத்துமணி ஆவனப்பதிவாளர் அரியலூர் திருச்சி மாவட்டம் | 31 |

11 **திருந்துக மானிட இனமே** 32
திரு. P. M. ஞானசேகர் III B, A. (தமிழ் இலக்கியம்)
மாநிலக்கல்லூரி சென்னை-5

12 **சுகக்குன்று** 33
புலவர், திரு. எ. மாணிக்கம் அவர்கள் (தமிழாசிரியர்)
முருகநிலையம் விசூர்.

13 **கலம்பகத்தில் ஓர் காட்சி** 37
திருமதி. ப. உமாதேவி அவர்கள் பாரதிதாசன்
மகளிர் கல்லூரி புதுவை-1

14 **முருகா, முருகா, முருகா!** 42
திரு. வி. ஜி, சீனிவாசன் அவர்கள் B. A. L. T. மதுரை-1

15 **திருக்குற்றாலத்தலபுராணம்** 46
(திருவாவடுதுறை ஆதீன வெளியீடு) மதிப்புரை
திரு. கு. சுந்தரமூர்த்தி எம் ஏ அவர்கள் செந்தமிழ்க் கல்லூரி
முதல்வர் திருப்பனந்தாள்

16 **கடவுளைக் காணலாம்** 48
புலவர். திரு. இரா சுவாமிநாதன் அவர்கள் திருப்பனந்தாள்.

17 **வாதவூர் அடிகள் உழைக்காது வேண்டும் ஊதியம்** 54
சைவப்புலவர் வித்துவான் திரு. மு. பரசுராமன் அவர்கள்
செஞ்சி (தெ. ஆ. மாவட்டம்)

18 **அண்ணல் பெருமை** 58
நுனிப்புல் திரு. ர. வேங்கடரத்தினம் அவர்கள்
E-168 அண்ணா ரோடு (ப்ளாக் 17) நெய்வேலி-1

19 **கலைமகள் பஞ்சரத்தினம்** 62
தேவிதாசன் திரு. ஐ, கோ. இராமநாதன் அவர்கள் கோவை-7

20 **கடமையும் உரிமையும்** 63
திரு. புலவர் தெ. முருகசாமி பி. ஓ. எல். அவர்கள்
இராமசாமி தமிழ்க்கல்லூரி காரைக்குடி

21 **திருத்தொண்டத்தொகையும் சேக்கிழாரும்** 67
பேராசிரியர், தொல்காப்பியச்செல்வர், பண்டிதவித்துவான்
சைவப்புலவர் திரு. கு. சுந்தரமூர்த்தி எம். ஏ. அவர்கள்
முதல்வர் செந்தமிழ்க்கல்லூரி திருப்பனந்தாள்,

22 முருகா! எப்படிப்பாடுவேன்? 71

திரு. B. சீனிவாசன் அவர்கள் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள்
தொடக்கப்பள்ளி (ஆசிரியர்) திருலோக்கி.

23 தெய்வப்புலவர் காணும் சமயம் 72

திரு. பா. சொக்கலிங்கம் அவர்கள் சென்னை 24.

24 தேனூறு கிளவிக்கு வாயூறி நின்றவன் 78

திரு மு: வைத்தியநாதன் B Sc B Ed அவர்கள்
அரசினர் ஆண்கள் உயர்நிலைப்பள்ளி திருக்கோவிலூர்
தெ. ஆ. மாவட்டம்

25 வாழ்க்கைத்துணை 82

செஞ்சொற் கவிமணி திரு புலவர் மா. வேங்கடேசன் அவர்கள்
தமிழாசிரியர். பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி காஞ்சிபுரம்–1

26 யாருக்கு அருள்? 89

திரு. புலவர் சா. சந்துரு அவர்கள் திருவானைக்கா

27 திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தில் ஆவணி மூலத்
திருநாள் உதவி நிதி-5000 91

28 மூன்றாம் திருமுறையின் முதற்பாடல்கள்-உரை 39,40

திரு. தா. மா. வெள்ளைவாரணம் அவர்கள்

உ

திருச்செந்திலாண்டவன் துணை

திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடம்

பன்னிருதிருமுறை பதிப்பு நிதி வெளியீடு எண்: 24

## ஓர் அறிவிப்பு

மாணிக்கவாசகர் அருளிய

# திருக்கோவையார்

(புதிய பதிப்பு)

(பேராசிரியர் உரையும் பழைய உரையும் கூடியது)

புதிய பதிப்பு, புதிய எழுத்து
உயர்ந்தரக வெள்ளைத்தாளில் 728 பக்கங்கள்
கொண்டது விலை ரூ. **3-50**

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் 28-ஆம்
நினைவு நாள் வெளியீடு
16—3—72

*ஒரே சமயத்தில் 20 பிரதிகளுக்கு மேல் பெறுவோருக்கு 20% கழிவு உண்டு.*
*பாக்கிங் செலவு, தபால், ரயில் கட்டணம் வேறு*

**கிடைக்கும் இடங்கள்:**

1. திரு. K. சுப்பிரமணிய பிள்ளை,
   கிரந்தரத் தலைவர், "குமரகுருபரன் சங்கம்"
   ஸ்ரீவைகுண்டம், திருநெல்வேலி ஜில்லா.
2. தியாகராச விலாசம்,
   53, பிள்ளையார்கோவில் தெரு,
   திருவல்லிக்கேணி, சென்னை-5.

# திருவியலூர் உய்ய வந்த தேவ நாயனுர்

அருளிய

# திருவுந்தியார் — உரைவிளக்கம்

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்
பாலகவி
திரு, வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை

ஆக்கிலங் கேயுண்டாய் அல்லதங் கில்லையாய்
பார்க்கில் பரமதன் றுந்தீபற
பாவனைக் கெய்தாதென் றுந்தீபற. (9)

மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை ஆகிய ஆறு ஆதாரங்களிலும், ஆன்ம போதம் கொண்டு தியானித்த வேளையில் உண்டு போலத் தோன்றியும், அவ்வாறு தியானிக்காதவேளையில் இல்லைபோல மறைந்தும் உள்ள தெய்வங்கள், உற்றுநோக்கும்போது பரம் பொருளாகா. அவ்வவ்விடங்களில் அவ்வம் மூர்த்திகளாய்த் தோன்றிப் பயனளிக்கின்ற சிவம், பாவனைக்கு எய்த வாராது.

மூலாதாரம் முதலாக வுள்ள இடங்களில், விநாயகர் முதலாக வுள்ள கடவுளரைத் தியானிப்பதற்குக் கருவியாக இருப்பது, ஆன்மபோதம். ஆன்மபோதத்தால் அறியப்படுபவை அனைத்தும், அசத்துப் பொருள்களே. சுத்த சத்தாகிய சிவம், ஆன்மபோத உணர்வுக்கு அப்பாற்பட்டு விளங்குவது. அதனாலேயே, சிவபரம்பொருளை, ''அவாங்மனகோசரம்'' என்று அருள்நூல்கள் ஏத்துகின்றன. ''மாற்றம் மனம் கழிய நின்ற மறையோன்'' என்பது திருவாசகம். ஆதாரயோகம், நிராதார யோகத்துக்குச் சாதனமாக அமைவதன்றி, நிராதார யோகத்தாற் பெறத்தக்க சிவசொரூப உணர்வை, ஆதார யோகம் ஒருபோதும் வழங்கமாட்டாது. ஆதாரயோகத்தில், ஆறு ஆதாரங்களிலும் விநாயகர் முதலிய கடவுளரை நிறுத்தித், தியானிக்கிற காலத்தில் அவ்வக் கடவுளர் வடிவத்தில் எழுந்தருளி யிருந்து அருள் புரிபவர், சிவபரம்பொருளேயா

வார். தடத்த நிலையில் வருகிற சிவத்தின் பேதங்களாகிய தெய்வங்கள், அவற்றை நிறுத்தித் தியானிக்கும் தேக ஆதாரங்களைப்போலப், போகத்திற்கு இடமாகிய அண்டங்களுக்குட்பட்ட பதங்களிலே சேர்ப்பிப்பதன்றிப், பரிபூரணமான பரமுத்தியாலே சேர்ப்பிக்கமாட்டா. ஆன்மபோதம், கீழ்நோக்கிலன்றிச் செல்லுவதில்லை. அதனாலேயே, அவ்வான்ம போதத்தாற் கற்பிக்கப்படுபவை அனைத்தும், அநாதியே வாதனை பண்ணி வருகின்ற மாயாரூபமாய் இருக்கின்றன. சிவ சொரூபம் சிற்சொரூபமாதலின், அது சிவபோதம் ஒன்றினாலேயே உணரப்படுவதாயிருக்கும். ஆன்மாக்களது தியான பாவனைகள், இடையீடின்றி நிகழ்வனவல்ல. தியான வேளையில் பாவனை பற்றி விளக்கம் பெற்றும், மற்ற வேளைகளில் பாவனையின்மை பற்றி மறைவு பெற்றும் நிற்கின்ற கடவுளர் அனைவரும், ஆன்மபோதம் நீங்கிய சிவபோதத்தால் அநந்நியமாய் நோக்கும்போது, சிவமாகவே தோன்றுவர். சிவம், பாவனைக்கு அப்பாற்பட்டது. கருவிகளைக் கொண்டு செய்யும் பாவனைக்கு அது எய்தாது. அதனாலேயே ஆதாரயோகம், நிராதார யோகத்துக்குச் சாதனமாயிருந்து பயன் தருவதன்றிப், பரமுத்தியாகிய பயனைத் தருவதாய் இருப்பதில்லை.

அஞ்சே அஞ்சாக அறிவே அறிவாகத்
துஞ்சா துணர்ந்திருந் துந்தீபற
துய்ய பொருளீதென் றுந்தீபற. (10)

பஞ்சபூத பரிணாமமாகிய உடம்பு, ஆன்மாவைக் கூடினாலன்றி இயங்காது. உயிர் உடம்பைக் கூடியதனால் உண்டாகிய தாழ்வை உணர்ந்து, அவ்வுடம்பை விட்டு நீங்கி நின்றால், உடம்பும் அண்டத்திலுள்ள ஐம்பூதங்கள் போல, ஆன்மாவுக்கு வேறாகி நிற்கும். அங்ஙனம் நீங்கி நிற்கும் ஆன்மாவின் இச்சாஞானக் கிரியைகள் ஒழிந்து, சிவத்தின் இச்சா ஞானக் கிரியைகளே, ஆன்மாவின் இச்சா ஞானக் கிரியைகளாகத் தலைப்பட்டு நிற்கும். தேக பஞ்ச பூதங்கள் அண்ட பஞ்ச பூதங்களாகவும், சார்ந்ததன் வண்ணமாகும் இயல்பையுடைய ஆன்மா, சிவம் தன்னிடத்தில் அத்துவிதமாய்க் கலந்திருந்தலால் ஆன்மபோதமே சிவபோதமாகவும் நிலைபெறு

வதைச், சலியாது மெய்ஞ்ஞான நிஷ்டை பொருந்தி உணர்தல் வேண்டும். வேத சிவாகமங்களில், முடிவாகக் கூறப்பட்ட உண்மைப் பொருள் இதுவேயாகும்.

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் ஆகிய ஐந்து பூதங்களும், மாற்றுருப்பெற்று நமது தேகமாக அமைந்திருக்கிறது. சடமாகிய உடம்பு, சித்தாகிய உயிர்ச்சேர்க்கையிஞலேயே தொழிற்பட்டுக் கொண்டிருக்கின்றது. உடற் கூட்டத்தால் உயிருக்கு வந்துள்ள தாழ்வு, மிகப்பெரியது. உடம்பின் இழிவைப்பற்றிப் பேசாத பெரியோர் ஒருவரும் இலர். "புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி, மலஞ் சோரும் ஒன்பது வாயிற் குடிலை" என்பது திருவாசகம். உடம்பின் இழிவை அறிந்து, அதனை வேருகக் கண்டு நீங்கி நின்ருல், அவ்வுடம்பும் அவனுக்கு வேருகி நிற்கும். உயிரும், சிவமும் அறிவு மயமான சித்துப்பொருள்கள். உயிர் சடத்தைக்கூடி நிற்கின்ற பொழுது அதன் தன்மையுடையதாகவும், சித்தைக்கூடி நிற்கின்றபொழுது அதன் தன்மை உடையதாகவும், சார்ந்ததன் வண்ணமாம் தன்மையைக் கொண்டிருப்பது. சடத்தைக் கூடி நிற்பதால் வரும் தாழ்வை அறிந்த உயிர், அதிலிருந்து நீங்கிச், சித்தாகிய சிவத்தைக்கூடி நிற்கும் பொழுது, சிவமாந் தன்மையை எய்திச் சிறப்புறும். இவ்வுண்மையைத் திருவருட்டுணை கொண்டு, அதில் சலியாது நின்று காணுதல் வேண்டும். உயிர்கள் உய்தி பெறுதற் பொருட்டாக, இறைவன் அருளிச் செய்த வேத சிவாகமங்களினுல் முடித்துக் காட்டப் பெற்ற உயர்ந்த பொருள், இதுவேயாகும்.

———

(தொடரும்)

[சிவ சிவ

# ஸ்ரீ திருஞானசம்பந்த சுவாமிகள் பஞ்சரத்தினம்

திரு. ஐ. கோ. இராமநாதன் அவர்கள்,
சுண்டப்பாளையம், கோவை–7

[கட்டளைக்கலித்துறை]

1 ஊழி முதல்வன் ஒருபங் குறையும் உமைமுலைப்பால்
மாழை மணிவள்ளம் மாந்தித்தே வார மழைபொழியும்
காழி யுதித்த கவுணியர் தெய்வக் கருப்பமுகில்
வாழி திருஞான சம்பந்த வள்ளல் மலரடியே.

2 சங்கத் தமிழொடு சைவமு நீறுந் தழைக்கவுமை
பங்கிற் றிகழும் பரமன் விருப்புறப் பண்ணிசைக்கும்
பொங்குற் றபொழில் புடைசூழ் புகலிவாழ் புண்ணியனே
எங்கட் கொருதுணை யாயெப் பொழுதும் எழுந்தருளே

3 புனலிட்ட ஏடு பொருதெதிர்த் தோடப் புரிந்தனையே
கனலிட்ட ஏடு கருகாது நிற்கக் கருதினையே
எனதிட்ட நாதன் உனையன்றி யாரும் இலையையவென்
மனதிட்ட நின்பா மறலி வழியை மறித்திடுமே.

4 மாண்டவர் சுட்டவெற் புத்துகள் மீண்டுமம் மங்கையுருப்
பூண்டெழச் செய்தவா பூழியன் வெற்புநோய் போக்கியவா
மூண்டெழும் தீவினை மூர்க்கனேன் துன்ப மொழித்துதவ
வேண்டினேன் சம்பந்த வேளே யருள்வாய்விரைவினிலே

5 வெம்பந்த வல்வினை வீயப் பலநெறி மேவுகிற்பார்
எம்புந்தி தேர்ந்த எளிதான மார்க்கம் இதுவொன்றுமே
எம்பந்த மேக இணையிலாப் பேரின்ப மீயுஞான
சம்பந்த தேவன் சரணமெஞ் ஞான்றும் தலைக்கொள்வதே

———

# அருள் மொழி அமுது

திரு. ஸ்ரீ ராமநாமப்பரதேசி அவர்கள்.
*3119, கீழ இரண்டாம் வீதி.*
புதுக்கோட்டை-1, திருச்சி மாவட்டம்.

## 7. யார் தொடர்வார்?

திருமுனைப்பாடி நாட்டிலே திருநாவலூர் என்னும் திருப்பதியிலே வாய்மைகுன்றாத வேதியர் குலத்திலே சடையனார் என்ற தந்தைக்கும் இசைஞானியார் என்ற தாய்க்கும் தோன்றினார் நாவலூரார். வேதம் பாடும் நாவில் பொய் வராது என்று வேதியரைச் சிறப்பித்து "வாய்மைகுன்ற வேதியர்" என்றார். வேதம் வழிபாடு செய்யும் வகையைக்கூறும். ஆகமம் கோயில் கட்டும் வகை கூறும். குருக்கள் ஆகம வழிபாடு செய்யும் உரிமைபெற்றவர்கள். பிரமதேவர் முகத்தினின்று தோன்றிய வேதியர் வேறு. இவர்கள் சிவபெருமானது ஐந்து திருமுகங்களினின்று தோன்றிய பேறு பெற்றவர். வேதியர்களிலேயே உயர்ந்தவர். பாசநீக்கம் பெற்று உலகத்தவர் வீடுபேறடையச் செய்வதற்காக நாவலூரார் அவதரித்தார்.

மாதொரு பாகனார்க்கு வழிவழி அடிமை செய்யும்
வேதியர் குலத்துள் தோன்றி மேம்படு சடையனார்க்கும்
ஏதமில் கற்பின் வாழ்க்கை மனை இசை ஞானியார்பால்
தீதகன்று உலகம் உய்யத் திருவவதாரம் செய்தார்.

சைவத்தில் இறைவன் பிறந்ததாகக் கிடையாது பக்தர் பிறப்பதை அவதாரம் என்பர். வைணவத்தில் இறைவன் பிறப்பான். ஆனால் ஆழ்வார்கள் அவதரிப்பார்கள். சிவனடியார்கள் ஈசனுக்குச் சேவை செய்வதற்காக அருள் வசத்தால் சிவலோகத்திலிருந்து இறங்கி வருவர். சுவர்க்கம் முதலான இடங்களிலிருந்து பிறப்பவர் அவரவர் பாவ புண்ணியங்கள் தீர்ந்து இறங்கிவருவர்.

தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

என்பது தமிழ்மறை. புகழுக்கு ஏதுவான குணத்தொடு பிறக்க வேண்டும். இச்சைப்படும் சுதந்திரம் இறைவன் தந்தது. அதை நல்வழியில் பயன்படுத்த வேண்டும். அதனுலேயே "அறஞ்செய விரும்பு" எனக்கூறுகிறது நீதிநூல். நற்குணத்துடன் பிறந்த நாவலூராருக்கு நம்பியாரூரர் எனப் பெயரிட்டனர். நாம் மக்களுக்கு சிதம்பரம் அண்ணுமலை முதலான க்ஷேத்திரங்களின் பெயரிட்டு அழைப்பதுபோன்று ஆண்களின் சிறந்து விளங்கிய (நம்பி) அவருக்கு, ஆரூர்க் கோயில் இறைவனுக்கு வழிவழி அடிமை ஆதலாலும், இவரது பாட்டனுர் பெயர் ஆரூரர் என்றதாலும் நம்பியாரூர் எனப்பெயரிட்டனர். அழகின் உருவாக வளர்ந்த அக்குழந்தையை அக்காலத்து திருமுனைப்பாடி நாட்டை ஆண்ட அரசரான நரசிங்கமுனையர் என்பவர் அன்பினுல் மகனுகக்கொண்டார். அரசகுமாரன் போன்று வளர்ந்தபோது சகல கலைகளையும் ஆய்ந்து அறிந்தார். வைணவத்தில் இறைவன் அவதரித்து குருகுலவாசம் செய்து பாடம் கேட்பார். இராமாவதாரத்தில் வசிட்டரிடம் பாடம் கேட்டதுபோல, சைவத்தில் அடியார்கள் ஓதாதுணர்ந்துவிடுவர். நம்பியாரூரர் வளர்ந்து திருமணப்பருவம் அடைந்தார்.

திருநாவலூருக்கு அருகிலிருந்த புத்தூர் என்ற ஊரிலிருந்த சடங்கவியார் என்பவருடைய மகளை நாவலூராருக்கு மணமகளாகத் தரவேணுமென்று செய்தியனுப்பினர். பண்டைய காலத்தில் பெண் தேடுவது வழக்கமே தவிர மாப்பிள்ளை தேடுவது வழக்கமில்லை. கந்தபுராணத்தில் இறைவனுக்கு மணமகளாக பார்வதி தேவியைக் கேட்டு சப்தரிஷிகளான ஏழு முனிவர்கள் அனுப்பப்பட்டனர் என்பதே இதற்குச் சான்ருகும். சடங்கவியாரும் ஒப்புக்கொண்டதால் திருமணம் நிச்சயிக்கப்பட்டது, தக்கதொரு நாளத்திலே திருமண மாப்பிள்ளையான நாவலூரார் நல்ல குதிரையில் ஏறி புத்தூர் நோக்கி வந்து சேர்ந்தார். அரசரால் வளர்க்கப்பட்டதால் அரசர்களுக்கான கலன்களணிந்து, தங்களது குலத்துக்கேற்ற முந்நூல் பவித்திரம் முதலியன அணிந்து, இறைவன் திருவடியை வணங்கி திருநீறு புனைந்து வந்தார். ஏனைய அலங்காரங்கள் பிறர் செய்ய, எவற்றுக்கும் மேலான திருநீற்

றைத்தாமே அணிந்து புரவியிலேறிப் புறப்பட்டு வந்தார் என்பது குறிப்பு.

மன்னவர் திருவும் தங்கள் வைதிகத்திருவும் பொங்க-
நன்னகர் விழவு கொள்ள; நம்பி ஆரூரர் நாதன்
தன்னடி மனத்துட் கொண்டு தகுந்திருநீறு சாத்திப்
பொன்னணி மணியார் யோகப்புரவிமேற் கொண்டு போந்தார்.

நாவலூ ரார் வரும் அழகு கண்டு புத்தூர் மக்கள் "இம் மணமகனைக்காண ஆயிரம் கண்கள் வேண்டும்" நமது சடங்கவியார் மகள் பெரும் பேறு பெற்றவள்" என்றும், "இவர் தரிசனத்தால் அருள் வெள்ளத்தில் நீந்துகிறோம்" என்று பலவாறு பேசி மனமகிழ்ந்தனர். புத்தூரில்மணமேடையில்நம்பியாரூர அமர்ந்தார். அப்போது ஒரு பெரியவர் அங்கு தோன்றினர். வேதத்தின் ஒலி சூழ்ந்த கைலை மலையிலே, ஆலால சுந்தரரைத் தடுத்தாட்கொண்டு காப்பதாகக் கூறிய பெருமானே வந்தார். ஒருவர் என்பது சிவபெருமானே. "நீல மாமணி மிடற்று ஒருவன்" என்று "ஒருவன் என்னும் ஒருவன் காண்க" என்று மாணிக்கவாசகரும்

ஒளிமணி வண்ணன் என்கோ? ஒருவனென்று ஏத்தநின்ற
நளிர்மதிச்சடையன் என்கோ? நான்முகக் கடவுளென்கோ?
அளமகிழ்ந்துலகமெல்லாம் படைத்தவை யேத்தநின்ற
களிமலர்த்துளவனெம்மான் கண்ணனை மாயனையே.

என்று நம்மாழ்வாரும் சிவபெருமானை "ஒருவன்" என்றே குறித்தனர். வேதத்தை ஒலியுடன் பாடவேண்டும். மௌனமாகக் கூறக்கூடாது என்பதை "ஆலுமறை" என்ற சொல்லால் குறிப்பிட்டார்.

ஆலுமறை சூழ்கயிலையின்கண் அருள்செய்த
சாலுமொழியால் வழிதடுத்தடிமை கொள்வான்
மேலுற எழுந்து மிகு கீழுற அகழ்ந்து
மாலும் அயனுக்கும் அரியார் ஒருவர் வந்தார்.

அவரது நெற்றிக்கண்ணை மறைத்த திரைமாதிரி வெண்ணீறணிந்திருந்தார் அவரது திருமுடியிலிருந்த சந்திரன் முதிர்ந்து சாய்ந்த மாதிரி நரைமயிர் காட்சி கொடுத்தது. காதிலே கண்டிகை. மார்பிலே பூணூல். வெண்மையான மேலாடை. அவர் கையில் ஒரு ஆதபமறைக்குடையுடன்

வந்தார். இது மழையை மறைக்கும் குடையன்று. வெயிலை மறைக்கும் குடை. அருள்மழை பொழிய வந்தவர். பிறவியான வெப்பத்தைத் தடுக்க வந்தார். எனவே தன் குடையில்லாத ஆதபமறைக்குடையுடன் வந்தார். கிழவனாக வந்த இறைவனின் வடிவழகில் சேக்கிழார் தன் மனத்தையே பறிகொடுத்துவிடுகிறார் ''மூப்பினால் அழகு குறைவது வழக்கம். ஆனால் இவ்வழகே முதிர்ந்து வந்ததுபோல் உள்ளதே! அழகுக்கு மூப்பே கிடையாது என்றால் இது மூப்பென்பதின் அழகிய வடிவமோ? வைதிக நெறியை உலகிற்கு அளித்த மூல முதல்வரோ'' எனப் பாடுகின்றார்.

மொய்த்து வளர்பேரழகு மூத்தவடி வேயோ?
அத்தகைய மூப்பெனும் அதன் படிவமேயோ?
மெய்த்தநெறி வைதிகம் விளைத்த முதலேயோ?
இத்தகைய வேடமென ஐயமுறஎய்தி.

அவ்வாறு வந்த பெரியோன் ''நான் சொல்லப் போவதை எல்லோரும் கேளுங்கள்'' என்றான். கலியாண வீட்டில் அனைவரும் அப்பெரியோனை எதிர்கொண்டழைத்து அவரது சொல் கேட்க இணங்கினர். வந்தவர் நாவலூராரை நோக்கி ''எனக்கும் உனக்கும் உள்ள ஒப்பந்தத்தால் ஒரு வழக்கைத் தீர்த்துக்கொண்டு திருமணத்தை முடித்துக்கொள்'' என நாவலூராரும் அதற்கு இணங்கினார். தேவர்கள் திருமால் அயன் முதலோரைத் தனக்கு அடிமையாகக்கொண்ட பெருமான் ''இந்த நாவலூரான் எனக்கு அடிமை'' என்றான். ''கிழவன் என்ன நினைத்திருக்கிறான்'' எனச் சிலர் வெகுண்டனர், ''ஆகா! கிழவர் மொழிந்த வார்த்தை அழகுதான்'' என்று சிரித்தார், கிழவரோ ''ஏனப்பா சிரிக்கிறாய்? உன்பாட்டன் அம்மாதிரி எனக்கு எழுதித்தந்த ஓலை இதோ பார்?'' என்றார். ''அந்தணனுக்கு அந்தணன் அடிமையானது இதுவரை கேட்டதில்லை, நீதான் சொல்லுகிறாய்? நீ ஒரு பித்தனோ?'' என்றார் நாவலூரார், ''பித்தனோ பேயனோ! நீ என்ன சொன்னாலும் சரி. நீ ரொம்ப அறிந்தவன் மாதிரி பேசுகிறாய்! பணி செய்ய வேண்டியது உன் கடமை'' என்றார். அந்த உருவத்தைக்கண்டால் நாவலூராருக்குத் தன்னை அறியாமல் அன்பு உண்டாகிறது. அவரது வார்த்தையோ கோபத்தை உண்டாக்குகின்றது. ''அந்த ஓலையைக் காட்டும்'' என்றார். உலகத்துக்கும் தனக்கும் துணையாயுள்ள இறைவனை துணைவனார்

எனக் குறிப்பிடுகிறார் கவிஞர். ''ஓலை உனக்கு எதற்காகக் காட்டவேணும்? ஒழுங்காக அடிமையாகிவிடு'' என்று கூறிய கிழவர்மீது கோபங்கொண்ட நாவலூரார் கிழவரைத் துரத் திப்பிடிக்கலானார். கிழவர் நாவலூராரின் கையிலகப்படாமல் கலியாணப்பந்தலில் ஓட, பின் தொடர்ந்து ஓடினார் நாவலூ ரார். பூவும் மணமும் பிரிவின்றி வியாபித்த அப்பெருமானை நாவலூராரைப் போன்ற பாக்கிய சாலிகளைத்தவிர எவர் தொடர்ந்து எட்டமுடியும்?''

ஆவணம் பறிக்கச்சென்ற அளவினில் அந்தணாளன்
காவணத்திடையே ஓடக் கடிதுபின்தொடர்ந்து நம்பி
பூவணத்தவரை உற்றார்; அவரலாற் புரங்கள் செற்ற
ஏவணச் சிலையினாரை யார்தொடர்ந்து எட்டவல்லார்?

திருச்சிற்றம்பலம்

---

# இறைவனும் மனிதனும்

திரு. த. பி. ஆறுமுகம், எம். ஏ அவர்கள்,
(ம. தி. தா. இந்துக்கலாசாலை, திருநெல்வேலி-1)

கல்லைப் படைத்தவன் இறைவன்
கலையாய்ச் செய்தவன் மனிதன்! 1

மண்ணைப் படைத்தவன் இறைவன்
மணம் பெறச்செய்தவன் மனிதன்! 2

உயிரைப் படைத்தவன் இறைவன்
உலைக்களம் படைப்பவன் மனிதன்! 3

பாதை வகுத்தவன் இறைவன்
பயணம் செய்பவன் மனிதன்! 4

இன்பம் ஈந்தவன் இறைவன்
இன்னல் இழைப்பவன் மனிதன்! 5

அறிவைத் தந்தவன் இறைவன்
அறிவால் சிறந்தவன் மனிதன்! 6

சட்டம் செய்தவன் இறைவன்
சண்டை செய்பவன் மனிதன்! 7

மாண்பு கொண்டவன் இறைவன்
மமதை கொள்பவன் மனிதன்! 8

நிலையே யுற்றவன் இறைவன்
நிலையே யற்றவன் மனிதன்! 9

அனைத்தும் அளித்தவன் இறைவன்
அனைத்தும் அழிப்பவன் மனிதன்! 10

# ★ அருள் வேண்டல் ★

திரு: வண்ணை; ஆ - ஜானகிராமன் அவர்கள்,
சென்னை–21.

அமரர்குலத் தலைவனாகி அசுரர்குல வைரியாகி
நமனையும் நடுங்க வைத்து நான்முகனைச் சிறையி லிட்டுச்
சமணரைக் கழுவி லேற்றிச் சைவமதம் தழைக்க வைத்த
குமரகுரு பரனே என்றன் குறையெலாந் தீர்ப்பாய் வேலா!

ஆவினன் குடியில் வாழும் ஆனைமுகன் தம்பி யேயென்
நாவினி லமர்ந்து வேத ஞானமே பொழிந்து மிந்தப்
பாவியின் வினையைத் தீர்த்துப் பன்னிரு கையால் காத்தே
தேவியர் இருவரோடு சேர்ந்தெனக் கருள்வாய் வேலா!

இப்பிறவி எனக்க ளித்தே இனியதமிழ் பொருளும் செப்பி
ஒப்பரிய கவிநயத்தின் உட்பொருளாய் நீயே நின்று
செப்பரிய செயல் புரிந்த செந்தில்வாழ் எம்பி ரானே;
எப்பிறவி எடுத்த போதும் என்றுமுனை மறவே னையா!

ஈகையே உடைய யென்றன் ஈசனின் குருவே உன்றன்
மாகையா லருளல் வேண்டும் மதிநுட்பங் கல்வி வெற்றி
வாகையே சூடுகின்ற வல்லமை பெறவே நாளும்
தோகையே அழைத்து வாயென் சுவாமிமலை நாத வேலே!

உண்மையின் உயிருமாகி ஓதிடும் வேத மாகி
தண்ணொளிச் சுடருமாகி தனிப் பெருஞ் சக்தியாகி
புண்டரிகன் மருகனாகி புவியேத்தும் தெய்வமாகி
கண்ணீரைத் துடைக்கு மென்றுங் கனியுதிர் சோலை யோனே!

ஊக்கமாய் கலைகள் யாவும் ஓதிடும் யுக்தி வேண்டும்!
ஆக்கமு மருளு மன்பும் அஞ்சாமை துணிவு வேண்டும்!
நீக்கமில் செல்வத் தோடு நிலைத்திடும் பேறு வேண்டும்!
ஏக்கமில் தூய்மை வாய்மை எந்தையே அருள வேண்டும்!

எத்திக்கும் புகழ்மணக்க இளமையெ ழிலேற்றத் தோடு
தித்திக்கும் தமிழு மாகித் தெவிட்டாத அமுது மாகி
முத்திக்கு வித்து மாகி மூவர்க்கும் முதல்வ னாகி
தத்துவப் பொருளாய் நின்ற சரவண பவனே வேலா!

ஏங்கிடு மடியார்க் கென்றும் இதமொடு வாழ்வு தந்தே
ஓங்கிடு முள்ளங் கொண்டே உவந்துநீ அன்பு காட்டித்
தாங்கிடும் சக்தி வேலா! சஞ்சலம் தன்னைச் சாய்த்தே
தீங்கினை அறுக்க இன்றே திருத்தணி முருகா வாவா!

ஐந்தெழுத்தான் பெற்றபிள்ளை ஆறெழுத்துக் கொண்டபிள்ளை
பொய்கையிலே பிறந்த பிள்ளை புலவர்நா தவழ்ந்த பிள்ளை
மையில்லா ஞானப் பிள்ளை மாசக்தி பெற்ற பிள்ளை
தெய்வானை யணைத்த பிள்ளை தென்பரங் குன்றுள் ளோனே!

ஒழுக்கமேஉயிராய்ப் பூண்டே உயர்ந்தோரின் நட்புவேண்டும்
அழுக்க றவாவி னோடு அறியாமை யகல வேண்டும்
இழுக்கான செயலை நீக்கி இனியசொ லியம்ப வேண்டும்
பழுத்ததமிழ் பாவால் நின்தாள் பணிந்திட அருள்வாய் கந்தா!

ஓம்மெனும் மந்திரத்தின் உறுபொரு ளான தேவ!
சோம்பலை யகற்றி யென்றன் சுணக்கமே யின்றி யென்றும்
ஆம்பல்போல் உறவு கொண்டே அடியார்கள் வினையைத்
ஓம்பிடும் ஞானவேலே உறைவாய்நீ யென்னகத்தே! [தீர்த்தே

ஔடதமாய்ப் பிணிய றுத்து அகங்காரச் சினமறுத்து
கௌவிடும் வினைய றுத்துக் கயவர்கள் உறவ றுத்து
மௌனியர் அன்பைப் பெற்று மதிநலம் வழங்கி வாழ
சௌபாக்கி யமெந்த னுக்குச் சண்முகா அருள்வாய் நீயே!

அஃகமும் கொழிக்க அன்பாய் ஆருயிர்க் கூட்டும் கையே!
எஃகொடு மஞ்ஞை யேறி ஏழையர்க் குதவும் கையே!
வெஃகிடும் சிந்தை சாய்த்து வினைதனை அறுக்கும் கையே!
இஃதெலாம் அருளும் கையே எங்குறை தீர்ப்பாய் வேலே!

முற்றும்

# வாழ்க! வாழ்க! வாழ்க!

திரு. அருணகிரிதாசன் P. S இராமமூர்த்தி அவர்கள்,
டால்மியாபுரம்.
[திருச்சி மாவட்டம்]

நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான்தாள் வாழ்க!
கோகழி ஆண்ட குருமணிதன்தாள் வாழ்க!
ஆகமமாகிநின்று அண்ணிப்பான்தாள் வாழ்க!
ஏகன்அநேகன் இறைவனடி வாழ்க!

-மாணிக்கவாசகசுவாமிகள் (சிவபுராணம்)

'வாழ்க! வாழ்க!' எனும் மங்கலஒலி நாடெங்கணும் ஒலிக்கவேண்டும். அசத்தெல்லாம் உயர் சத்தாக மாற, அன்பும் அமைதியும் எங்கும் நிலவ, உலக மாந்தரிடையே நீதி, நேர்மை, தர்மம் தெய்வநெறி குன்றாது தழைத்து வளர, எல்லோரும் எல்லா நலன்களும் எய்த, இன்பத்தை நல்கும் பொங்கல் பெரும் திருவிழா நன்னாளாகிய இன்று, வாழ்க! வாழ்க! வாழ்க! என்று எல்லாம் வல்ல இறைவனும் கலியுக வரதன் கந்தப்பெருமானை உளங்குளிர வாழ்த்தி, எம்பெருமான் திருவடிகளைச் சிக்கெனப்பிடித்துக்கொள்வோம் இறைவனை நாம் வாழ்த்தினால், இறைவன் கருணைகொண்டு, நம்மை வாழ்த்துவான்.

ஆறிரு தடந்தோள் வாழ்க! அறுமுகம் வாழ்க! வெற்பைக்
கூறுசெய்தனிவேல் வாழ்க! குக்குடம் வாழ்க! செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க! யானை தன்னணங்கு வாழ்க!
மாறிலா வள்ளிவாழ்க! வாழ்க சீரடியாரெலாம்! —கந்தபுராணம்

பருவமழை தவறாதுபெய்து தானியங்களெல்லாம் நன்கு விளைந்து நாட்டுமக்கள் வறுமைப் பிடியிலிருந்து விடுதலை பெறவும், அரசியல் செவ்வனே செயல்படவும், இறைபணிகள் மறைநெறிகள் எங்கும் விரிந்து வளரவும் அருள் புரியு

வேண்டுமென பொங்கல் புனிதத்திருநாளாகிய இன்று, அகில புவன நாயகனுகிய ஆறுமுகப்பெருமானை வேண்டிநிற்போம்.

வான்முகில் வழாதுபெய்க! மலிவளம் சுரக்க! மன்னன்
கோன்முறை அரசுசெய்க! குறைவிலாது உயிர்கள் வாழ்க!
நான்மறை அறங்கள் ஓங்க! நற்றவம் வேள்வி மல்க!
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!

—கந்தபுராணம்

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகத் தமிழ் நாட்டை வட்டமிட்டு அதிபாதக, அநாகரீகச் செயல்களில் ஈடுபட்டு, நம் மக்களுக்கு அவமானத்தைத் தேடித்தருவதுமன்றி. நம் கலாச்சாரத்துக்கே களங்கம் கற்பிக்கும் நாத்திகப் பிரசாரப் புலிகள், கரடிகள், பூனைகளின் புன்செயல்களைக் கண்டு தளர்ச்சியடையாமல் பல இடர்ப்பாடுகளுக்கும் ஈடுகொடுத்து வீரநடைபோட்டு, வெற்றிச்சங்கு ஒலித்து நம் சமயத்திற்கும் தமிழ்ச் சமுதாயத்திற்கும் அரும்பெரும் பணிகள் பலவற்றினை அயராது ஆற்றி இருபத்தைந்தாவது வருடத்தை, மங்கல நன்னுளாகிய பொங்கல் பெரும் திருவிழா இன்னுளில், எட்டிப்பிடிக்கும் நமது 'குமரகுருபரன்' இதழ், வாழ்க! வாழ்க! வாழ்க! என்று வாழ்த்தி நம் பேராதரவைத் தெரிவித்துக் கொள்வோம். அதன் சமய நற்பணிகள் மேலும் மேலும் வளர்க! வளர்க! வளர்க! என மீண்டும் மீண்டும் வாழ்த்தி ஆதரிப்போம்.

நாத்திகப் பிரசாரப் பேய்கள் தலைவிரித்தாடும் இக்காலச் சூழ்நிலையில், பேயாட்டத்தை அடக்கியொடுக்க, இறைபணிகள் சிறக்க 'குமரகுருபரன்' இதழின் புனிதச்சேவை மக்களுக்கு மிக மிகத்தேவை. குறைவு யாதுமின்றி, மக்கள் விருப்பத்தை உன்னி 'குமரகுருபரன்' இதழை செவ்வனே வளர்த்துவரும் அதன் ஆசிரியப் பெருமக்களையும் மற்றும் இப்புனிதச் சேவையில் பங்குபெறும் 'குமரகுருப ன்' இதழ் பணியாளர்களையும் "நீங்கா நலன்கள் யாவும் என்றும் பெற்று வாழ்க! வாழ்க! வாழ்க! என, குகப்பெருமானை நினைத்து வாழ்த்துவோம்.

நிற்க, ஆணவமும் அகங்காரமும் குடிகொண்ட அவுணர்கள் அரசன் சூரபத்மனுக்கும் அமரர்களுக்கும் ஆறுமுகப்

பெருமான் கருணை பாலித்த தன்மையை, பொங்கல் திரு விழா நாளாகிய இன்று தெளிந்து, ஐயனின் அளப்பருங் கருணைக்கு நாமும் கொடுத்து வைத்தவர்களாவோம்.

விழிக்குத்துணைதிருமென் மலர்ப்பாதங்கள்
மெய்மை குன்று
மொழிக்குத்துணை முருகாவெனு நாமங்கள்
முன்பு செய்த
பழிக்குத்துணை யவன் பன்னிருதோளும்
பயந்த தனி
வழிக்குத் துணை வடிவேலும் செங்கோடன்
மயூரமுமே

—அருணகிரிநாதசுவாமிகள்

ஆயிரத்தெட்டு அண்டங்களை நூற்றெட்டுயுகங்கள் எவ் வித எதிர்ப்புமின்றி அரசாட்சி நடத்தும் படியானவரத்தை, அரிய தவமியற்றி, ஆலமுண்ட கண்டனிடம் பெற்றான் அவு ணர்களுக்கு அரசனாகிய சூரபத்மன். சிங்கமுகாசுரன், தார காசுரன் எனும் இரு சகோதரர்கள் அவனுக்குண்டு. படை பலமும், பொருட்பலமும் தவ வலிமையும் மிகப்பெற்ற சூர பத்மன் செருக்கடைந்து, இறைவனை மறந்து, நீதிநெறி தவறி ஆட்சிசெய்யத் துணிந்தான். அமரர்கள்மீது தீராதவிரோதம் கொண்ட அவன், அவர்களையெல்லாம் சிறையில் தள்ளி கொடுமைப் படுத்தினான்.

அமரர்கள் மீது இரக்கங்கொண்டு அவர்களுக்குக்கருணை பாலிக்கத் திருவுளம் கொண்ட வீரவேல் பெருமான், தாரகா சுரனையும் சிங்கமுகாசுரனையும் அழித்த பின்னர், வீரமகேந்திர புரியடைந்து யுத்த களத்தில் சூரபத்மனை சந்தித்தார். முருகப் பெருமானை சிறுபாலன் என்று எண்ணினான் சூரபத்மன்!

காற்றில் தள்ளுண்டு நெருப்பினில் சூடுண்டு கங்கை
யாற்றில் தாக்குண்டு சரவணம் புக்கலைப்புண்டு
வேற்றுப்பேர்முலையுண்டு அழுதே விளையாடும்
நேற்றைய பாலனையோ பரம்பொருளென நினைந்தாய்

—கந்தபுராணம்

அகில உலக நாயகனும் அமரர்களின் தலைவனுமாகிய ஆறுமுகப் பெருமானுக்கும் அவுணர்கள் குலத்தலைவன் சூர

பத்மனுக்கும் இடையே பயங்கரப்போர் மூண்டது! சூரபத்மனின் போர்த்திறமை கண்டு அஞ்சி, திருமால், நான்முகன், அமரர்கள், முனிவர்கள், பூதப்படைகள் யாவரும் நடுங்கினர். அழிக்கப்பட்ட அவுணப்படைகளெல்லாம் மீண்டும் மீண்டும் உயிர்பெற்று வந்து போர்புரியத் தொடங்கின. பலப்பல மாய உருவங்கள் கொண்டு சூரபத்மன், கதிர்வேல் பெருமானோடு போர் தொடுத்தான். ருத்திரராகவும், நான்முகராகவும், திருமாலாகவும் இயமனாகவும் உருக்கள்கொண்டு சூரபத்மன், குமரப்பெருமானை வெற்றிகொள்ள எத்தனித்தான்.

தேங்கிய அண்டத்து இமையோர் சிறைவிடச் சிற்றடிக்கே
பூங்கழல் கட்டும் பெருமான் கலாபப் புரவிமிசை
தாங்கி நடப்ப முறிந்தது சூரன்தளம் தனிவேல்
வாங்கியனுப்பிடக் குன்றங்கள் எட்டும் வழிவிட்டனவே

—அருணகிரிநாதர்.

இந்த அலங்காரச் செய்யுளிலே அருணகிரிநாத சுவாமிகள், முருகப் பெருமானின் போர் வல்லமையைக் கண்டு மகிழ்வெய்துகிறார் சூரபத்மனின் மாய ரூபங்களையெல்லாம் அழித்தொழிக்கக் கருதிய ஆறுமுகப்பெருமான் ஆயிரங்கோடி கணைகளைத் தொடுத்தார். இக்கணைகள், பல ஆயிரங்கோடிக் கணைகளாகப் பெருகி எங்கும் பரவி, சூரபத்மனின் மாய உருவங்களை யெல்லாம் அழித்தன. அனைத்து அவுணப்படைகளும் அழிந்தன. எல்லாவற்றையும் இழந்து. சூரபத்மன் ஒருவனே யுத்தகளத்தில் கோபக்கனல் வீச நின்றிருந்தான். "உன்னுடன் போர்புரிந்த இந்தக்குமரன், நீ நினைத்ததுபோல் சிறுபாலன் அல்லன்; யார் என்பதை இப்பொழுதே அறிந்து கொள்வாய்; நீ செய்த தவத்தின் பயனே இது!" என்று திருவாய் மலர்ந்தருளிய சண்முகப்பெருமான் தனது பேருருவத்தை (விசுவரூபதரிசனம்) சூரபத்மனுக்குக் காட்டியருளினார். குகப்பெருமானின் விசுவரூபதரிசனம் கண்டு நாமும் இன்றைய பொங்கல் நாளில் நலம் பெறுவோம்.

முருகப் பெருமானின் திருமேனியிலே சகல உலகங்களும், மலைகளும், பெருங்கடல்களும் அமரர்களும், திருமால், நான்முகன், இயமன், இந்திரன் வருணன், வாயு, குபேரன் ஆகிய கடவுளர்களும் மற்றும் சூரிய சந்திரன்கள், நட்சத்தி

ரங்கள், சகல முனிவர்கள், அசுரர்கள், மந்திரங்களும், வேதங்களும், அனைத்து உயிர் வர்க்கங்களும் இருப்பதைக்கண்டான் சூரபத்மன், ஆயிரங்கோடி சூரியர்களின் ஒளியெல்லாம் ஒன்றுதிரண்டு ஓர் உருப்பெற்றார்போல் சண்முகப்பெருமான் நின்றருளிய கோலத்தைக் கண்ட சூரபத்மன் வியப்புற்றான். தேவர்களுக்கும் கிடைக்கவொண்ணா பெரும்பேறு பெற்றதாக பெருமிதம் கொண்டான்.

கந்தப்பெருமான் பேருருவத்தை மறைத்து முன்புபோல் குமரனாகத் தோன்றினார். முருகப் பெருமானுக்கு அடிமையாக வேண்டுமெனக் கருதிய சூரபத்மன், சிதறிய சிந்தை கொண்டு மானமே பெரிதென மதித்து மீண்டும் மாய உருக்கள் பல கொண்டு, மயில்வாகனப் பெருமானை மடக்க முற்பட்டான்!

தோரணி யிட்டுப் புரமெரித்தான் மகன் செங்கையில் வேல்
கூரணி யிட்டு அணுவாகிக் கிரௌஞ்சம் குலைந்து அரக்கர்
நேரணி யிட்டு வளைந்த கடக நெளிந்தது சூர்ப்
பேரணி கெட்டது தேவேந்தர லோகம் பிழைத்ததுவே.

—கந்தரலங்காரம்.

கதிர்வேற் பெருமான் தன் திருக்கரவேலை நோக்கினார். தீப்பொறியைக் கக்கிக் கொண்டு மின்னல் வேகத்தில் கிளம்பிய வேற்படை சூரபத்மனின் சகலமாயங்களையும் அழித்தொழித்தது! பெருங் கடலில் மாமரமாக நின்று போர்புரியத் துவங்கிய சூரபத்மனை இருகூறுகளாகப்பிளந்தது வேற்படை! மேருமலையை யொத்தாற் போன்று மயிலும் சேவலுமாக உருக்கள் கொண்டு அவ்விரு கூறுகள் ஐயனைச் சுற்றிச்சுற்றி சீறி வந்தன.

சீறிய பறவைகளின் சினத்தைத் தொலைத்து மயிலைத் தன் வாகனமாகவும் சேவலைத் திருத்தேர்க் கொடியாகவும் கொண்டு சூரபத்மனுக்கு பெறற்கரிய பெரும் பதத்தினை அருளினார் ஆறுமுகப் பெருமான்!

வீரமகேந்திர புரிச்சிறைகளிலே பல இன்னல்களுக்காளான அமரர்களை விடுவித்து அல்லல்களைக் களைந்து, இழந்த வாழ்வை மீண்டும் அவர்களுக்கு வழங்கி கருணை காட்டினார் கந்தப் பெருமான். அனைத்து நலன்களும் மீண்டும் பெற்ற

அமரர்கள், முனிவர்கள் யாவரும் ஐயனைச் சூழ்ந்து பணிந்து போற்றி வாழ்த்தினர்.

ஆவதோர்காலை யெந்தை ஆறிரு தடந்தோள் வாழ்க!
மூவிருவதனம் வாழ்க! முழுதருள் விழிகள் வாழ்க!
தூவுடை நெடுவேல் வாழ்க! தொல்படை பிறவும் வாழ்க!
தேவர்கள் தேவன் சேயோன் திருவடி வாழ்க! வாழ்க!

—கந்தபுராணம்.

அமரர்கள் பெற்ற வாழ்வை நாமும்பெற எந்நாளும் முருகப் பெருமானை வாழ்த்தி வணங்குவோம். வாழ்க! முருகா எனும் நாமங்கள்.

---

# பொங்கல் வாழ்த்து

## திருஞானசம்பந்தர் தெய்வீகப் பேரவை

முத்துவயல்; (முகவை)

சீர்வளரும் தமிழருமை சிறக்கச் செய்யும்
செய்யதமிழ்த் திருநாளே சிலிர்க்கும் நாளில்,
நாமகளும் பூமகளும் போன்றே கூடி
நலந்திகழும் மனைமெழுகிக் கோலம் போட்டுக்
கலந்துயிர்வாழ் காயமதைப் பானை யாக்கிக்
கண்குளிரக் குணவடுப்பில் கருத்தாய் ஏற்றிப்
பத்தியெனும் அரிசிகழு அன்பு நீரைப்
பக்குவமாய் ஊற்றி; மல விறகு மூட்டி
எழிலறிவாம் அனலூட்டி எரிக்க ஆங்கே
கொதிக்கு(ம்)உலை கண்டார்வக் குலவை போட்டுப்
பத்தியெனும் அரியரிசி பணிந்தே யிட்டு
ஒத்தபதம் காணுமட்டும் உவந்தே நின்று
உயர்தெய்வப் பேரவையீர்ச் சாறே ஊற்றி
ஒற்றுமையாம் கோரிகையால் ஒழுங்காய்க் கிண்டி
அற்றவரும் விரும்பு(ம்)அருட் குலவை நீட்டி
அழகான இடமகத்தில் பூசை ஆற்றிப்
பரந்தமனக் காகம்போல் விரைந்து கூடிப்
பகுத்துண்ணும் ஞானமதாம் பொங்கல்; பொங்க!
கருவினிலே இஞ்ஞானம் பொங்கப் பொங்கக்
கருத்திருந்தும் குடிக்கொன்றைக் கருத்தில் ஏத்தே.

---

கோரிகை = அகப்பை; கரு = பிறவி

சிவ சிவ சிவ சிவ

# க ரு ணை

சிவ சிவ சிவ சிவ

திருப்புகழமிர்த ஆசிரியர்;

பக்த திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள்

சென்னை.

---

கருணையென்பது ஒப்பற்ற ஒரு பொருள். அதனை எல்லோரும் உடையவர்களாக இருக்க வேண்டும். இறைவர் கருணையே வடிவானவர், அவருடைய கருணையை நாம்பெற வேண்டும். எல்லோருக்கும் இறைவருடைய கருணையைப் பெறுவதில் விருப்பந்தான். ஆனால் விரும்பியபடி எல்லோரும் பெறுகின்றார்களா? இல்லை ஒரு சிலர்தான் பெறுகின்றனர் பலர் கடவுளுடைய கருணையைப் பெறாமல் கவல்கின்றனர், ஏன்?

கடவுள் சிலருக்குக் கருணை செய்தும், பலருக்குச்கருணை செய்யாமலும் இருப்பாராயின், அவர் பாரபட்சம் உடையவர் ஆகின்றனர் அன்றோ? கடவுளுக்கு எல்லோரும் குழந்தைகள் தாமே. அன்புள்ள தாய் எல்லாக் குழந்தைகளையும் ஒன்று போல் அன்பு பாராட்டி ஆதரிப்பாள்- சில குழந்தைகளுக்குப் பாலுஞ்சோறும் ஊட்டி, சில குழந்தைகளைப் பட்டினி போடுவாளா?

சர்வஜீவதயாபரரான ஆண்டவர் பலருக்குக் கருணை புரியாமலிருப்பாராயின், அதற்குத் தகுந்த காரணம் யாது? அவரோ கருணைக்கடல் பலர் வந்து தண்ணீரை முகந்து கொண்டு போவதனால் கடல் வற்றிவிடாதே.

அடியவரும், தவசிவரும், சிவஞானிகளும் ஈசனுடைய கருணையை நாடிநாடி, ஒடிஒடிப் பெறுகின்றனர்.

> "எந்தநாள் கருணைக்குரித்தாகு நாள் எனவும்
> என்னிதயம் எணைவாட்டுதே"

என்று இனிமையாகக் கூறுகின்றனர் தவராஜ சீலராகிய தாயுமானவர்.

கடவுளுக்குக் கருணையே திருமுகங்கள்; அவருடைய திருமுகங்களில் குற்றாலம் அருவியினும் மிகுதியாகக் கருணை யருவி பொழிகின்றது.

"முகம் பொழி கருணை போற்றி"
"கருணைகூர் முகங்களாறும்"
"கருணை பொழி கமல முகமாறும்"
"உனதுமுக கருணைமலர் ஓராறும்"

காகங்கள் கோடிகூடி நின்றாலும் ஒருகல்லிற்கு முன் நிற்காது. அதுபோல், கோடிவினை "கூடிநிற்கினும், கடவுளுடைய கருணை வெள்ளத்தில் ஒரு துளிபடுமாயின் கோடி வினையும் பறந்துபோம்.

"காகமானது கோடி "கூடிநின்றாலும் ஒரு"
கல்லின்முன் "எதிர் நிற்குமோ"
கர்மமானது கோடி முன்னே செய்தாலும் நின்
"கருணைப்ரவாக அருளைத் தாகமாய் நாடினரை வாதிக்கவல்லதோ?

இறைவருடைய கருணை கடலினும் பெரிது, சமானமில்லாதது அது "தனிப்பெருங் கருணை" "கேழில் பரங்கருணை"

இத்தகைய இறைவருடைய கருணையை எல்லோரும் எய்த வேண்டாவோ?

கடவுள் கருணை செய்வதில் தயங்குவதில்லை, ஒருவருக்கு ஒரு வண்ணமும், மற்றொருவருக்கு மறு வண்ணமும் அவர் பால் இல்லை. அவர் பாரபட்சம் அற்றவர் எல்லா உயிர்களும் அவருக்கு ஒன்றுதான்.

தண்ணீரில் பஞ்சை வைத்தவுடன் பஞ்சு தண்ணீரை இழுத்துக் கொள்ளுகின்றது. கல்லைத் தண்ணீரில் வைத்தால் கல் தண்ணீரை இழுப்பதில்லை ஏன்? அது தண்ணீரின் குற்றமா? கல்லின் குற்றமா? கடினமாக இருப்பதனால் கல் தண்ணீரைத் தனக்குள் பெறவில்லை. மென்மையான பஞ்சு, சாம்பல் இவைகள் தண்ணீரைப் பெறுகின்றன.

அதுபோல் கடினசித்தம் உடையவர்கள் கடவுள் கருணையைப் பெறுகின்றார்களில்லை. இரக்கமுள்ள சாதுக்கள் கடவு

ளுடைய கருணையைப் பெறுகின்றனர். கருணையினால் தான் கருணையைப் பெறவேண்டும் வைரத்தினால் வைரத்தை அறுப்பதுபோல் என்று அறிக.

நம்மினும் தாழ்ந்த உயிர்கள் படுகின்ற துன்பத்தைக் கண்டு நாம் உள்ளம் இரங்கிக் கருணை புரிவோமானால், நம்மினும் மேலான இறைவர் நம்மீது கருணை புரிகின்றார். நாம் யார்மாட்டுங் கருணை காட்டாது கல்லைப் போல் இருப்போமாயின் கடவுள் கருணை நம்மீது எப்படி எய்தும்? கடவுள் கருணைமீது குற்றமில்லை. அதனைப் பெறுவதற்கு நாம் ஆயத்தமாக இல்லை, அதற்குரிய பண்பு பெறவில்லை.

அதனால் நாம் கருணையுடையவர்களாகத் திகழவேண்டும் மன்னுயிர்களை இன்னுயிரைப் போல் எண்ணி இரங்க வேண்டும்.

எவ்வுயிருந் தன்னுயிர்போல் எண்ணி யிரங்கவுநின்
தெய்வ அருட் கருணை செய்யாய் பராபரமே.

எவ்வுயிருந் தன்னுயிர்போல் எண்ணுந் தபோதனர்கள்
செவ்வறிவை நாடிமிகச் சிந்தைவைப்ப தெந்நாளோ.

—தாயுமானர்.

கருணை என்பது அணுத் துணையுமில்லாதவர், வெறும் பூசையினாலும், ஜபத்தினாலும் இறைவனுடைய கருணையைப்பெற மாட்டார்.

''கருணையினால் கடவுளுடைய கருணையைப் பெறலாம்'' என்பதற்கு எடுத்துக் காட்டாக அடியில் வரும் சரிதை விளங்குமாறு காண்க.

நாகபுரி என்பது ஒருசிறிய ஊர். அந்தஊரில் அநேகமாக ஏழைகள்தான் வாழ்ந்தார்கள். இரண்டொருவரே தனவந்தர். எல்லோரும் நன்கு உழைத்து வயிறு வளர்த்து வந்தனர். கமலம் என்பவளுக்கு ஒரு பெண் குழந்தை, குழந்தை பிறந்த ஓராண்டில் அவள் கணவன் மாண்டுவிட்டான். கூலிவேலை செய்து தன் குழந்தை கண்ணமாளைக் காப்பாற்றி வந்தாள். கணவனையிழந்து வறுமையினால் வாடி வருந்துங் கமலத்தை ஒருவரும் நெருங்குவதில்லை "உண்டான போது தானே கோடானு கோடிபேர்'' கமலம் புல்லறுத்தும், நெல்குத்தியும்,

பாத்திரம் விளக்கியும் அதனால் வரும் காசுகளைக் கொண்டு, கேழ்வரகு, சோளம், கம்பு வாங்கிக் கஞ்சிசெய்து குழந்தையும் தானும் பசியாறுவாள். அரிசியன்னம் முக்கியமான நாளில் தான் சமைக்க முடிந்தது. வெயிலில் வேலை செய்வதனால் அவளுடைய பொன்மேனி கரிந்து விட்டது. குழந்தைக்கு மட்டும் உணவு கொடுத்துவிட்டுத் தான் பட்டினி கிடப்பாள். அவளுடைய பரிதாபத்தைக் கண்டு மனம் இரங்குவார் ஒருவரும் இல்லை.

கமலத்தின் மனம் பால் போன்றது, கனிந்த உள்ளம் படைத்தவள். தன்னைவிட எளியவர்களைக் கண்டால் கண்ணீர் விடுவாள். இனிய உரைகூறி ஏதாவது தந்து உபசரிப்பாள். கண்ணம்மாளுக்கு வயது ஏழு. ஆடுவதும் பாடுவதுமாக இருந்தாள். வீதியில் விளையாடுகின்ற பொழுது மற்றக் குழந்தைகள் தங்கவளையல், தங்கக்காப்பு, பட்டுச் சட்டை முதலியன அணிந்து அழகாக வருவதைப் பார்ப்பாள். தாயிடம் ஓடி அம்மா! அதோபார் அதுமாதிரி எனக்கு நகை செஞ்சுபோடு'' என்று சிணுங்கி அழுவாள். கஞ்சிக்கே வழியில்லாத அவள் நகைக்கு எங்கே போவாள்? குழந்தையை மார்போடு அணைத்து "அம்மா! அழாதே, நீ பெரியவளாக ஆனவுடன் உனக்கு நிறையச் செய்து போடுவேன்: இப்போது போட்டுக் கொள்ளகூடாது'' என்பாள். கண்ணம்மாள் "போம்மா! இப்பவே போடு அவங்கெல்லாம் என்னைப் போல்தானே இருக்கின்றார்கள். அம்மா எனக்கு ரொம்ப ஆசையாயிருக்கு. பட்டுச் சொக்கா...'' என்று அழ ஆரம்பித்தாள். கமலம் மகளை வெகுபாடுபட்டு சமாதானப்படுத்தினாள்.

கொடிய பஞ்சம் வந்துவிட்டது, எங்கும் மழையில்லை கிணறு குளங்கள் எல்லாம் வற்றிவிட்டன. குடிதண்ணீரே கிடைப்பது அரிதாகி விட்டது. ஜனங்கள் அளவற்றவேதனையடைந்தனர், பட்டினியால் பலர் மடிந்தனர். உணவை நாடி அங்கும் இங்குமாக அலைந்து ஏழைகள் கால் ஒடிந்தனர். "என் செய்வோம்'' என்று ஏங்கி மனம் இடிந்தனர். ''பசி'' ''பசி'' என்ற சொல்லே எங்கும் முழங்கியது. வாயில்லாத உயிர்களாகிய ஆடுமாடுகள் நாய் முதலியவைகளும் தண்

ணீரும் உணவும் இன்றித் தவித்தன, பறவைகள் பட்டினி யால் வாடி வருந்தின.

பட்டினித் துன்பத்தாலும் வெய்யிலின் கொடுமை யாலும் கமலத்தின் உடல்நலம் குன்றியது பாயும் படுக்கை யுமாக ஆனுள். நோயினுல் நொந்தாள் வேலை செய்தாலே உணவு கிடைப்பது அரிது, வேலையின்றிப் படுக்கையில் உள்ள அவளுக்கு உணவு எப்படி கிடைக்கும்? பாவம் பட்டினியால் பதை பதைத்தாள், கண்ணம்மாளும் பட்டினி, பன்னிரண்டு வயதுடைய அவள் உடம்பு மெலிந்து விட்டது.

கண்ணம்மாள், தாயார் படுக்கையில் கிடந்து பரதவிப் பதைக் கண்டு மனம் வருந்தினுள். "அம்மா! உங்களுக்கு உடம்பு எப்படியிருக்கிறது? தாங்கள் வரவர இளைத்துப் போய் விடுகின்றீர்களே! பேசுவதற்குக்கூட உங்களுக்கு வலிமையில்லை, அம்மா! நான் என்ன செய்ய வேண்டும்? கடவுள் நம்மைப் பரிசோதிக்கின்ருர்." என்று விம்மி விம்மி அழுதாள்.

கமலம், "குழந்தாய்! அழாதே, முற்பிறப்பில் புண்ணியம் புரியாதவர் இப்பிறப்பில் துன்புறுவர்; நமது வினையை நாம் தானே அனுபவித்தல் வேண்டும். கடவுள் பாரபட்சம் இல் லாதவர், நான் வயது சென்றவள்; பழுத்தவோலை. நீ இளஞ் சிறுமி: குருத்தோலை, உன்னைப் பற்றித்தான் கவலைப்படு கின்றேன். நீ என்னைப்பற்றி வருந்தாதே. நீ என் குலக் கொழுந்து" என்று மகளின் முதுகைத் தடவிக் கொடுத்து, முகத்தை தொட்டு முத்தங் கொடுத்தாள். அவள் கண்களில் கண்ணீர் முத்துக்கள் உதிர்ந்தன.

கண்ணம்மாள் தன் தாயின் பசியைத் தீர்த்து, அவள் உடம்பைப் பாதுகாக்க வேண்டும் என்று எண்ணி, உணவு எங்கே கிடைக்கும் என்று ஏங்கிய மனத்துடன் வெளியே சென்ருள். இரண்டு மூன்று வீட்டிற்குச் சென்று "அம்மா! பசி, காதடைக்கிறது ஒருபிடி சோறு கொடுங்கள்" என்று கெஞ்சிக் கேட்டாள். "சீநாயே! போ மூஞ்சியைப்பாரு, ஓடு, ஓடு நிற்காதே" என்று விரட்டியடித்தார்கள் எங்கும்

அவளுக்கு ஒருபிடி சோறுகூடக் கிடைக்கவில்லை. அவள் கால்கள் தடுமாறின, கண்கள் பஞ்சடைந்தன. தாய்க்கு உணவு எப்படியாயினும் தரவேண்டும் என்ற உறுதியினால் சிறிது தைரியத்துடன் நடந்தாள்.

ஒரு வீட்டிலே கோதுமைரொட்டி செய்து தட்டுநிரம்ப அடுக்கி, குழந்தைகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்துக் கொண் டிருந்தனர். அதைக் கண்ட கண்ணம்மாள் மெல்ல வாசற்படி யருகில் நின்று "அம்மா! மெத்தப் பசியாக இருக்கின்றது, உயிர் துடிக்கின்றது. ஒரு ரொட்டி கொடுங்கள்" என்று கம்மிய குரலில் கேட்டாள். அந்த வீட்டுஅம்மா மனம் இரக்க முற்று உடனே அன்புடன் ஒரு ரொட்டியைத் தந்தாள். கண்ணம்மாளின் முகம் மலர்ச்சியுற்றது. அகங்குளிர்ந்தது "அம்மா! வீட்டில் என் தாயார் உடல்நலம் இன்றிப் பசியால் வாடி வருந்துகின்றாள், அவருக்கு ஒருரொட்டி கொடுங்கள்" என்று கேட்டாள். அந்த அம்மா உடனேபதில் சொல்லாமல் மற்றும் ஒரு ரொட்டியைத் தந்தாள்.

கண்ணம்மாள், அளவற்ற ஆனந்தமடைந்து தாய்க்கு ஒருரொட்டியைக் கொடுத்துவிட்டு, தான் ஒருரொட்டியைத் தின்ன வேண்டும் என்று எண்ணி விரைந்து நடந்துவந்தாள். வழியில் ஒரு நாய் மிகுந்தபசி தாகமுற்றுக் களைத்து, உலர்ந்த நாவைக் நீட்டிக் கொண்டு குழிந்த கண்களுடன் இருந்தது. அந்த நாய் கண்ணம்மாளைக் கண்டு, தன்வாலையாட்டி "பசிக் கின்றது; ஏதாவது கொடு" என்ற குறிப்பில் தலையசைத்து அவளைப் பார்த்தது கண்ணம்மாளின் மனம் உருகியது "ஆகா! இதற்கு எவ்வளவு பசியோ? வாயில்லாத பிராணி, நமக்காவது கடவுள் வாயைக் கொடுத்தார். கேட்டு வாங்கிச் சாப்பிடலாம் பாவம், இதற்கு வாயில்லை. மிகமிகப் பசியால் வாடியுள்ளது நமது பங்கு ரொட்டியைக் கொடுத்து இதன் பசியை ஆற்றவேண்டும்" என்று எண்ணினாள். ஒருரொட்டி யை யெடுத்து துண்டு துண்டாகச் செய்து நாய்க்குத் தந்தாள். நாய் மிக்க விரைவாகச் சாப்பிட்டது. சிறிது தண் ணீருங் கொணர்ந்து குடிப்பித்தாள். நாயின் களைப்பு தீர்ந்தது நன்றியறிவுடன் வாலை மிகவும் ஆட்டியது. அதன் மகிழ்ச்சி

யைக் கண்டு கண்ணம்மாள் மகிழ்ந்து, தாயை நாடிநடந்தாள். நாயும் அவள் பின்னே சென்றது. கண்ணம்மாள் வீட்டிற்குள் நுழைந்து பசியுடன் படுக்கையில் அமர்ந்திருந்த தாயை எழுப்பி, "அம்மா இந்தா இந்த ரொட்டியைத் தின்று தண்ணீர் குடியுங்கள்" என்று நீட்டினுள். கமலம், "மகளே! ரொட்டி ஏது? எந்தப் புண்ணியமூர்த்தி தந்தனர்? நீ பாதி சாப்பிடு, பாதிகொடு எனக்கு" என்ருள். "அம்மா! ஒரு புண்ணியவதி தந்தாள் ஒன்று நான் தின்று விட்டேன். மிகவும் களைப்பாகவும் பசியாகவும் இருக்கின்றீர்" என்ருள். அந்த சமயம் "அம்மா! மெத்தப்பசி சாப்பிட்டு நாலைந்து நாட்கள் கடந்தன. உயிர் போகின்ருற் போலிருக்கின்றது அம்மா புண்ணியவதி! சிறிது உணவு கொடுத்துக் காப்பாற்றுங்கள்" என்று ஒரு பிச்சைக்காரன் கூவினுன். ரொட்டியைப் பிட்டு வாயில் வைக்குந் தருணத்தில் கமலம் அந்தக் குரலைக் கேட்டாள். அவள் மனம் உருகியது, அந்த ரொட்டியை அந்தப் பிச்சைக்காரன் கையில் கொடுத்து, "அப்பா! சாப்பிட்டு இளைப்பாறு" என்ருள். அதைக் கண்டு கண்ணம்மாள் திகைத்தாள்.

அந்த ரொட்டியைப் பிச்சைக்காரன் தின்று, "அம்மா! உங்களுக்குக் கடவுள் எல்லா நலன்களையும் அருள்புரிவார். பசித்துன்பம் உங்களை ஒருபோதும் அணுகாது நீடுழிகாலம் வாழுங்கள்" என்று கூறிவிட்டுச் சென்ருன். கமலம் மிகுந்த திருப்தியுடன் கண்களை மூடினுள். கண்ணம்மாள் தான் பசித்திருந்தும் தரும சிந்தையுடன் ஏழைக்கு உதவிய கருணையை எண்ணி ஒருவாறு கண்ணயர்ந்து விட்டாள்.

அருட்ஜோதி வடிவுடன் ஒரு தெய்வம் கமலத்தின் கனவில் தோன்றியது அவ்வொளிக் கடவுளைக் கண்டுகமலம் திகைத்துக் கும்பிட்டு நின்ருள். "அம்மா! உன் கருணைக்கு நாம் மகிழ்கின்ரேம். உன் கருணையைவிட உனது திருப்புதல்வி கண்ணம்மாளது கருணை உயர்ந்தது. அவளுக்குக் கிடைத்த இருரொட்டியில் ஒன்றை நாய் வடிவுடன் வந்த எனக்குத் தந்தாள். பிறகு பிச்சைக்காரன் வடிவில் வந்த எனக்கு நீ உன் பசியைப் பொருட்படுத்தாமல், ரொட்டி

யைத் தந்தனே. தாயும் மகளும் கருணையின் சொரூபங்களாக இருக்கின்றீர்கள். நானே நாயாகவும் பிச்சைக்காரனுகவும் வந்து உங்கள் இருவருடைய அன்பையும் அளந்துஅறிந்தேன் நீங்கள் இனி எந்நாளும் அழியாத செல்வத்துடன் வாழக்கட வீர்கள்'' என்று அருள்புரிந்து மறைந்தது. கமலம் திடுக்கிட்டு எழுந்தாள், கனவிலேகண்ட அந்த அருட்ஜோதி வடிவத்தை அங்கும் இங்குமாகத் தேடினுள். அவள்குடிசை பொன்மாளி கையாக மாறியது. ஒருபுறம் தானியக் குவியல்கள்: ஒருபுறம் தனக் குவியல்கள், ஒருபறம் நவரத்தினக் குவியல்கள், ஒரு புறம் ஆடை ஆபாரணங்கள். அஷ்ட ஐஸ்வரியங்களும் நிறைந்து இருந்தன; வறுமையின் சிறுமை பறந்து நீங்கியது, "கடவுளே! உன் கருணையே கருணை இந்த ஏழைகளுக்கு இத்துணைப் பெரிய கருணை புரிந்தீரே. எம்பெருமானே! உம்மை ஒரு போதும் மறவேன்'' என்று வாயார வாழ்த் தினுள். கண்ணம்மாள் எழுந்து நவநிதிகளேயும் பொன்மாளி கையையுங் கண்டாள். தன் தாயின் திருவடிமேல் வீழ்ந்து, "அம்மா! இதுஎன்ன அதிசயம்? இவைகள் எவ்வாறு வந்தன? மாயையா? கனவா?'' என்று வினுவினுள்.

கமலம், "என் கண்ணே! உன்பங்கு ரொட்டியை நாய்க் குத் தந்துவிட்டு, 'நான் சாப்பிட்டு விட்டேன்' என்றுகூறி என்னேச் சாப்பிட வேண்டினுயல்லவா? நாய் வடிவத்திலே வந்தவர் கடவுள். அவரே மீண்டும் பிச்சைக்காரனுக வந்தார் என்கனவிலே தோன்றி அருள்புரிந்தார்.'' பிறருக்குக் கருணை புரிந்த உனக்கும் எனக்கும் கடவுள் கருணை புரிந்தார்'' என் ருள் கண்ணம்மா கடவுளின் கருணையை எண்ணி எண்ணி இதயம் குளிர்ந்தாள். அன்று தொட்டு அவர்கள் திருமாளி கைக்கு முன் கூடை கூடையாக ரொட்டியும், அன்னமும் வறியவர்க்கு வழங்கப்பட்டன. பஞ்சம் கொஞ்சமும்இன்றிப் பறந்தது, ஏழைகள் திரள் திரளாக வயல்களிற் பாய்ந்து பயிரைத் தழைக்கச் செய்வது போல், கமலத்திற்குக் கடவுள் தந்த செல்வம் பல்லாயிரம் ஏழைகள் வயிற்றை நிரப்பி உயிரைத் தழைக்கச் செய்தது.

———

# சீலமும் சிவப்பேறும்

திரு. ஸ்ரீ ராமநாமப்பரதேசி அவர்கள்,
*3119, கீழ இரண்டாம் வீதி.*
புதுக்கோட்டை-1, திருச்சி மாவட்டம்.

ஒரு சமயம் என் அன்பிற்குகந்த நண்பர் ஒருவர் இராவணன் சீலமும் சிவபக்தியும் உடையவனுதலால் சிவப்பேறு பெற்ருன் என்ருர். ஞானசம்பந்தப் பெருமானின் திருநீற்றுப் பதிகத்தில் இராவணன் மேலது நீறு எனக் கூறப்பெற்றதால் திருநீறணிந்து சிவப்பேறடைந்தான் என்ருர். அறிந்தோ அறியாமலோ திருநீறு அணிந்தால், அணிந்தவரின் பாவத்தை நீறு செய்து விடுமாதலால் அதைத் திருநீறு எனக்கூறினர் நம் முன்னோர். திருநீறணிந்ததால் தூய்மையடைந்திருப்பான். எனினும் அதன் பிறகு அவன் செய்த அடாத செய்கைகள் அவனது தூய்மையைக் கெடுத்திருக்கும். ஞானசம்பந்தப் பெருமானின் திருவாக்கிலே

ஈரமேது மிலனுகி எழுந்த விராவணன்
வீரமேது மிலனுக விளைத்த விலங்கலான்
ஆரம் பாம்பதணிவான்தன் அனேகதங்காவதம்
வாரமாகி நினைவார் வினையாயின மாயுமே. ஞானசம்-2-5-8

இரக்கமில் குணத்தொடுலகெங்கு நலிவெம்போர்
அரக்கன் முடியத்தலை புயத்தொடு மடங்கத்
துரக்க விரலிற் சிறிது வைத்தவரிடஞ்சீர்
வரக் கருணையாளர் பயில்வண் திருவையாறே. ஞானசம்-2-32-8

தையலாள் ஒரு பாகம் சடைமேலாளவளோடும்
ஐயந்தேர்ந்து உழல்வாரோர் அந்தணாளர் உறையுமிடம்
மெய்சொல்லா இராவணனை மேலோடி ஈடழித்து
பொய்சொல்லாதுயிர் போனன் புள்ளிருக்கு வேளூரே.
ஞானசம்-2-43-2

என்றபடி இராவணனை ஈரமேதுமிலான்: இரக்கமில்குணத்தோன், மெய்சொல்லாதவன் என்று குறிப்பிடப்பெறுகிறது. இப்படிப்பட்டவன் சிவப்பேறு எப்படிப்பெறுவான் என்பது சிந்திக்க வேண்டியதாகும்.

இராவணன் அகந்தை காரணமாகக் கைலையைக் கையில் எடுத்தான். சிவபெருமான் தனது சேவடிக் கொழுந்தாகிய சிறுவிரலை யூன்ற அடியில் அகப்பட்டுக் கொண்டு மீள முடியாது வருந்தி அலறினன் இராவணன். மந்திரிகள் அவனுக்கு யோசனை கூறினர்.

வான் திகழ் வெள்ளி வெற்பின் கீழுற்று வருந்துகின்ற
ஊன் திகழ் வேலினனை அமைச்சர்தாம் உற்றுநோக்கி
தேன் திகழிதழியான் தன் திருச் செவிசார நின்கை
தான் திகழ் வீணையாகப்பாடுதி சாமம் என்றார்.

தனது தலையை அறுத்து வீணைக்குடமாகவும் தனது நரம்பையே வீணை நரம்பாகக் கொண்டு சாமகானம் பாட இறைவன் அவனது இசைக்குருகி இராவணனை விட்டு விட்டான். எனவே இராவணன் பக்தியுடன் பாடவில்லை. இசையாலேயே இறைவனை உருக்கி விடுதலையானன் என்பது தெரிகிறது.

இராவணன் கைலையின் அடியில் அகப்பட்டு அலறிய போது, கைலையை வலம் வந்து கொண்டிருந்த வாகீசர் என்ற மாமுனிவர் "சிவபெருமான் சாமகானப் பிரியர்" என அவன் காதுகளில் கேட்கும்படி கூற, அதுகேட்டு இராவணன் சாமகானம் செய்து இறைவனை மகிழ்வித்து விடுதலையானன். இராவணனுக்கு சாமகானம் பாடுமாறு சூசனையாகக் கூறிய குற்றத்திற்காக இறைவன் வாகீசமுனிவரை உலகில் பிறக்குமாறு செய்தார். வாகீசரே திருநாவுக்கரசராக வந்தார் என்பது வரலாறு. இராவணனுக்கு சாமகானம் பாடுமாறு கூறிய வாகீசருக்கே உலகில் பிறக்குமாறு தண்டனை என்றால், சிவபெருமானுக்கு இராவணன்மீது திருப்தியான எண்ணமில்லை எனத்தோன்றுகின்றது.

அகந்தையால் மலையை எடுத்த இராவணனை, சாமகானம் பாடியதால் மகிழ்ந்த இறைவன், மன்னித்து வரங்கொடுத்தார். அதைக் கூறும்போதும்

அவ்வழி அவனும் பாட அரன் மகிழ்ந்தழைத்துக் கொண்டு
மூவ்வகையு லகுமான மூன்றரைக் கோடி ஆண்டும்
எவ்வகைப் படையும் வெல்லும் சந்திரவாளுமீந்தான்
பொய்வகை நிருதன் பெற்று விடைகொண்டுபோக லுற்றான்.

—உத்திரகாண்டம்

என்றபடி, சிவபெருமானிடம் வரம் வாங்கியும் பொய்வகை நீருதன் என்றே அவன் குறிப்பிடப் பெறுகிறுன். மேற்கூறிய வரங்கள் கிடைத்ததும் இராவணன் தனது தீயகுணங்களை விட்டு, சீலத்தைக் கடைப்பிடித்து, சிவபெருமானை வணங்கி யிருந்தால்கூட, வேதன் மால் பதவியும் வேண்டினவருக்கு அருளும் நாதஞன சிவபெருமானின் அருள்பெற்று உய்ந்திருக்க லாம். சிவனடியார் ஒருவராவது மீண்டும் உலகில் வந்து பிறந்ததாகத் திருத்தொண்டர் புராணம் குறிப்பிடவில்லை. இராவணன் தன் தம்பியான கும்பகருணனுடன் கம்சன் சிசு பாலன் என்ற பெயர்களுடன் பிறந்ததாக வரலாறு. "ஏழு பிறப்புக்கள் என் அடியார்களாக வருகின்றீர்களா? மூன்று பிறப்புக்கள் என்பகைவர்களாக வந்து என்னைத் திரும்ப அடைகின்றீர்களா?" என நாராயணன் கேட்க ஜயவிஜயர் களான இருவரும் பின்னதையே கேட்டுப் பெற்றனர்.

மற்றவர் இறைவன் மலரடி வணங்கி
வான் பிறப்பு ஏழுறமாட்டேம்
உற்று முப்பவமும் உனக்கு வெம்பகையாய்
உற்பவித்து உன்பதம் பெறுவோம்
வெற்றிகொள் முதிர்போர் நேமியாய்! என்றுர்
விமலனும் கொடிய வெஞ்சாபம்
அற்றிடும் வகை அவ்வரம் அவர்க்களித்தான்
அசுரராய் அவரும் வந்துதித்தார்.

*—வில்லி—ராசசூய—145*

என்றபடி அவர்கள் பிறந்தனர் என்கிறது பாரதம். மலர்க் கொன்றைத் தொங்கலான் அடியார்க்குச் சுவர்க்கங்கள் பொரு ளலவே" என்ற சம்பந்தப் பெருமான் திருவாக்கு இராவண னுக்குப் பொருந்தவேயில்லை, கம்சன் சிசுபாலர்களாகப் பிறந்து அவ்விருவரும் மறைந்து திருமாலடியார்களான ஜய விஜயர்களாகி விட்டனர் என்பதால் இராவணன் சிவபக்தன் என்பதே பொருந்தவில்லை. ஆதலின் கைலைமலையைத் தன் விரலாலூன்றி சிவபெருமான் தன்னைத் தண்டித்த தண்டனை யின்று தப்புவதற்காக சிவபெருமானை மகிழ்விக்க சாமகானம் பாடினுன் என்று தோன்றுகின்றது, எனவே அவன் சிவ பக்தியில்லாதவன். இராவணன் சீலமற்றவன் என்பதுவெளிப் படை, நளகூபரன் மனைவியான அரம்பையைக் கண்டு

அவன் தகாத முறையில் அணுகியபோது அவள் "தாங்கள் எனக்கு குரு. என்னை விரும்புவது தகாது;' எனக்கூறியும்

அரிவை இவை விளம்ப ஆற்ருது அனங்கன்றன்
தெரிகணைகள் பாயத் தன் சிந்தை தடுமாறி
ஒருதலையாவின்னுது காமமென உன்னுன்
புரிகுழலைத் தான் பற்றிப் போக விடந் தானுண்டான்

அவளைத் தகாத முறையில் தீண்டி விட்டான். தன்னுடைய இலங்கைக்கு வந்திருந்த வேதவதி என்ற பெண்ணின் மீது ஆசைகொண்டுஅவளைத்தீண்டுவதற்காகஅவளைத் தொடர்ந்து ஓடியபோது "நானே உனக்கு நோயாக வருவேன்" என்று கூறி வேதவதி தீக்குளித்தாள் என்பதும் வெளிப்படை.

தீயிடைக் குளித்த அத்தெய்வக் கற்பினுள்
வாயிடை மொழிந்த சொல்மறுக்க வல்லமோ?
நோயுனக்கு யானென நுவன்று ளாளவள்
ஆயவள் சீதை பண்டமுதிற் ருேன்றினுள்.

*கம்ப-வீடணனடைக்கலம்'*

என்றபடி வேதவதியே சீதாபிராட்டியாக வந்தாள் என்பதும் அறிய முடிகிறது. சீதையை, பிறர்மனைவியின் மீது ஆசை கொள்வது குற்றம் என்ற நீதிக்குப் புறம்பாக இராவணன் சிறையிட்டு அவளைத் தீண்ட முயற்சித்தான். எனவேஅவனை எவ்வாறு சீலமுள்ளவன் என்று கூறுவது? திருவிளையாடற் புராணத்தில் கூட இராவணன் "அறத்தினைத் தின்றபாவி" என்றே அழைக்கப் பெறுகின்ருன். "வேதனைக் காமம்அந்தோ வேரொடு கெடுத்தது" என்று இராவணனைச் சேர்ந்தவர்களே கூறினர். "பிறர் மனைவியான நஞ்சைக் கண்டாலே கொன்று விடும். நீ அவ்வாறு அழிந்து விட்டாயே" சனகி எனும் பெரும் நஞ்சு கண்ணலே நோக்கவே போக்கியதே உயிர் என்று விபீஷணனே கூறுகிருன்.

இராவணனை சிவபக்தனைக் கொன்ற பாவம் நீங்குவதற் காக இராமபிரான் இராமேச்சுரத்தில் சிவலிங்கப் பிரதிட்டை செய்து பாவம் நீங்கினுன் இராமன் என்பர். அப்படியானுல் வாலியும் சிவபக்தனுயிற்றே! அவனைக் கொன்ற இராமன் அந்தப் பாவம் நீங்க எங்கு சிவலிங்கப் பிரதிட்டை செய்தார்? என்று கேட்கத் தோன்றுகின்றது. இராவணன் பிராமணன்.

நான்முகன் மைந்தன் மகன் மைந்தன்-ஐயன் வேதம் ஆயிரம் வல்லோன் என்று இராவணனை ஏற்றமாகக் குறிப்பிடுகிறான் கம்பன். உயர்ந்த குலத்தில் பிறந்தும் ஒழுக்கமில்லாதவன் ஆதலால் அவனை அவனது அநீதி அழித்து விட்டது. குலத்தால் உயர முடியாது. குணத்தாலே உயர முடியும் என்பது கம்பனின் குறிப்பு. எனவே பிராமணனைக் கொன்ற பிரமகத்தி நீங்க இராமன் இராமேச்சுரத்தில் சிவலிங்கப் பிரதிட்டை செய்தான். இராவணன் சிவபக்தன் என்பதற்காக அல்ல என்பது அறியத் தக்கது.

சீலமற்ற இராவணன் கைலையை எடுத்தபோது, இறைவன் அவனைத் தண்டிக்க, இராவணன் அலறி சாமகானம் பாடி இறைவனிடமிருந்து வரங்கள் பெற்றான். அவைகள் கிடைத்ததும் சீலமில்லாததாலும், சிவபிரானின் அருள் வண்ணத்தை அறியாததாலும் அகந்தை கொண்டு சீதாபிராட்டியை விரும்பி அழிந்தான், வரபலங்கள் கிடைத்தும் அவற்றை அவன்பயன்படுத்திக் கொள்ளத் தவறினான்.

இதனால் இராவணன் சிவபக்தியில்லாதவன், சீலமற்றவன், சிவபெருமானது கருணையைப் பயன்படுத்திக்கொள்ள இருந்த சந்தர்ப்பத்தை இழந்தவன் என்பது கண்டு இரங்குவதுடன், சாமகானம் ஒரே தடவை செய்த இராவணனுக்கு அருள்செய்த சிவபெருமானது கருணையை எண்ணி வியந்து வணங்கி சீலத்துடன் சிவபக்தி செய்து சிவப்பேறு பெற நமக்கு வாய்ப்பளித்து இறைவன் அருள அவன் திருவடிகளை வணங்கி வேண்டுவோமாக!

திருச்சிற்றம்பலம்

# இமயம்போல் நிற்க இனிது!

திரு. அரங்க; முத்துமணி அவர்கள்,
ஆவணப்பதிவாளர்
அரியலூர். திருச்சி மாவட்டம்.

–O–

(வெண்பா)

செந்தமிழில் சைவத்தின் சீர்பாடி நம்முன்னே
வந்து மகிழ்விக்கும் வண்ணமலரே! - எந்நாளும்
பொன்னி நதிபோல் புவியெல்லாம் இன்னருளை
மன்னியே பாய்ச்சி மலர்!

பனசைத் தவமுனிவர் பார்வையிலே யென்றும்
வனப்புடனேநீவளர்ந்து வந்து-மனமெல்லாம்
இன்பஞ் சுரந்தே இருபத்தைந் தாண்டினையே
பொன்போலக் கண்டாய் பொலிந்து!

வெள்ளி விழாக்காணும் வேளையிலே யெம்முள்ளம்
துள்ளி மகிழும்: தொடர்ந்துவரும்-வெள்ளமெனப்
பாயும் கருத்தெல்லாம் பாரினையே வாழ்விக்கும்;
மாயும் மனத்தின் மலம்

ஆன்ற குமர குருபரராம் அண்ணல்பேர்
தோன்றும் தமிழ்மலரே! தூய்மணமே!-வான்போல்
வளஞ்சுரந்து வையத்தை வாழ்விப்பாய் யென்றும்
உளமெல்லாம் நிற்பாய் உவந்து!

அருளைப் பரப்பியே அன்பாம் சுடரால்
இருளை யகற்றும்நல் லேடே! - திருவார்
“குமர குருபரனே!” கொஞ்சுதமிழ் பாடி
இமயம்போல் நிற்க இனிது!

———

[சிவ சிவ

# " திருந்துக மானிட இனமே "

திரு: P; M. ஞானசேகர்: அவர்கள்,
III B. A. (தமிழ் இலக்கியம்) மாநிலக் கல்லூரி
சென்னை—5

திருந்துக மானிட இனமே—மனதில்
தெய்வத்தை இருத்துக தினமே!

வருந்துதல் என்பதை விட்டிடுக—எங்கும்
வருந்துவோர் துயரைக் களைந்திடுக

கொள்ளை கொலைகளை விட்டொழிக—கொடுந்
தீமைக ளனைத்தும் விலக்கிடுக!
அள்ளக் குறையா இன்பங்கள்—தமை
அனைவரும் பெற்றிடச் செய்திடுக!

எண்ணம் சிந்தனை வளர்த்திடுக—நாளும்
இனிய நூல்கள் படைத்திடுக!
வண்ணத் தமிழை வாழ்த்திடுக—என்றும்
வாடிய மக்கட் குதவிடுக! [திருந்துக]

நற்பண் புடையராய் வாழ்ந்திடுக—தீய
நாகரி கத்தைத் தகர்த்திடுக!
சிற்சில தீய வழிகளிலே—உன்றன்
சிந்தை செல்வதைத் தடுத்திடுக!

கற்றறி வாளரைப் போற்றிடுக!-சைவக்
கடவுளர் தமைநிதம் வழிபடுக!
வெற்றுரை யாளரை விட்டிடுக—யாண்டும்
வஞ்சனை சூழ்ச்சிகள் ஒழித்திடுக! [திருந்துக]

கல்வி கேள்வியில் சிறந்திடுக—நன்கு
கற்றதன் வழியே நின்றிடுக!
தெள்ளிய அன்பில் தோய்ந்திடுக—நன்மைத்
தெய்வக் காட்சிகள் கண்டிடுக!

ஊருடன் கூடி வாழ்ந்திடுக—ஞாலத்(து)
உயர்ந்தோர் முறைகள் போற்றிடுக!
சீருடன் வாழத் தெய்வநலம்—வாழ்வில்
செழித்து வாழிய என்றென்றும். [திருந்துக]

சிவ சிவ]

# "சுகக்குன்று"

புலவர், திரு: எ. மாணிக்கம்: அவர்கள்.

(தமிழாசிரியர்) "முருக நிலையம்"

விசூர்.

ஒருகால் முருகா! பரமா! குமரா!
உயர்கா வெனவோ தருள்தாராய்!
முருகா வெனவோர் தரமோ தடியார்
முடிமே லிணைதா ளருள்வோனே! —திருப்புகழ்

ஆழிசூழ் உலகின் கண்ணே அரிய பிறவியெடுத்த நாம் அரம் போன்று கூர்மையான அறிவைப் பெற்று விட்டால் மட்டும் போதாது. நமக்கென்று உள்ள ஒருசில குணங்களுடன் வாழ் தலே சீரிய நலம் பயக்கும். அச்சீரிய குணமின்றேல் மனிதன் மரத்துக்கு ஒப்பாவான் என்றே சாடுகின்றூர் முப்பால் தந்த வள்ளுவர். மேலும் அவர்,

"அரம்போலும் கூர்மைய ரேனும் மரம் போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர்."

என்னும் குறளின் வாயிலாக மக்களாகப் பிறந்தோர் வீணே மாய்ந்து போகாமல் மங்காப் புகழுடன் விளங்கி, மாண்புற வேண்டிப் "பண்பு" என்ற ஒன்றையும் கைக்கொள்ளுமாறு வேண்டுகின்றூர். மேலும்,

ஒருவன் படித்து விட்டாலோ அல்லது பட்டங்கள் பல பெற்று விட்டாலோ அப்படிப்பின் முழுப்பயனையும் அவன் பெற்றவன் ஆகான் மேலும், இம்மையில் ஒருவன் கற்றகல்வி ஏழுபிறவியிலும் அவனுக்கு உதவும் தன்மையுடையது என்று கூறிக் கல்வியின் உயர்வைக் காட்டுகின்றூர் வள்ளுவர். எனவே, கல்விகற்றவன், "பக்திவலையிற் படுவோனுகியபரம் பொருளை," எண்ணிப் போற்றுதல்வேண்டும். மெய்யறிவு உடைய கடவுளை வணங்காராகில் கற்றதனுல் பயன் ஏதும்

இல்லை என்கின்றார் வள்ளுவப் பெருந்தகை. மேலும், பிறவி யின் நோக்கமே பரம்பொருளை அடைதலே ஆகும்.

"பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனு மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே!"

எனநீலமயிலேறும் வேலவனிடம், அருட் பாலகனிடம்வேண்டு கின்றார் அருணகிரியார். எனவே, "எத்தொழிலைச் செய் தாலும், ஏதவத்தைப் பட்டாலும்," பத்தி செய்து வாழ்தலே பயன்மிக விளக்கும். எனவே, பெறுதற்கரிய பிறவியைப் பெற்ற நாம் பெறுதற்கரிய பிரான் அடியைப் பேணிநிற்றல் வேண்டும். இவ்வாறு, இறைவனைப் போற்றாமல், ஏதோ பிறந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் என வீணில் மாய் வோரைக் கண்டு,

"பெறுதற் கரிய
பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய
பிரானடி பேணார்
பெறுதற் கரிய
பிராணிகள் எல்லாம்
பெறுதற் கரியதோர்
பேறிழந் தாரே!"

எனக் கருமூலம் மாற்றிய திருமூலர் கூறுகின்றார். மேலும்,

"மக்கட் பிறவி யெடுத்து முனை
வழுத்தாக் கொடிய மரமனையேன்"

என்று தன்னையே கடிந்து கொள்ளுகின்றார் எந்தை இராம லிங்கர். ஏன்? அவர் அருள்சான்ற நெஞ்சினர். வாடியபயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய பண்பாளர். பக்கத்து வீட்டுக் காரன் பட்டினியால் வாடத் தான் மட்டும் உண்டு களித்துச் சுகித்திருக்கும் சுகபோகியல்ல அவர். நாட்டு மக்களின் வாட் டம் போக்க நாட்டம் கொண்டுழைத்த மகான் அருட்பிரகாச வள்ளலார். எனவே பிறரைக் கடிந்துகூற அவருக்கு மனம் எழவில்லை. தன்னையே கடிந்து கொள்ளுகின்றார். மேலும்,

இறைவனை நினைந்து வணங்காமையினாலேயே தனக்குத் துன்பங்கள் நேர்ந்ததாகவும், அத்துன்பங்களைப் போக்குந் துணைகாணுமல் தவிப்பதாகவும், தன்னைக் காப்பற்றத் துணைக்கு வருமாறும் இறைவனிடத்திலே முறையிடுகின்றார். அவர் முறையீடு நியாயமானது தானே! மேலும்,

நம் துன்பத்தை நீக்குமாறு அடுத்த மனிதரிடம் கூறுவோமாயின் நமக்குத் துணை வாராமல், மேலும் பிறரைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பாரே அல்லாமல் உதவி செய்யமாட்டார்கள். எனவே, விருப்பு வெறுப்பு அற்ற நிறைகுடமாம் இறைவனிடம் முறையிடுகின்றார், வள்ளலார், மேலும்,

"வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல."

என்னும் தமிழ்மறையை நன்கு உணர்ந்தவர் ஆயிற்றே அவர், இதோ அவர்தம் பாடலைக் காண்போம்.

"மக்கட்பிறவி யெடுத்து முனை
வழுத்தாக் கொடிய மரமனையேன்
துக்கக் கடலில் வீழ்ந்துமனஞ்
சோர்கின் றேனேர் துணைகாணேன்!
செக்கர்ப் பொருவு வடிவேற்கைத்
தேவே! தெவிட்டாத் தெள்ளமுதே!
முக்கட் கரும்பின் முழுமுத்தே!
முறையோ! முறையோ! முறையேயோ!"

என்று, "பவமான எழுகடல் கடந்து மேற்கதியான, பதநிலையணைந்து வாழப்" பரமனிடத்திலே சரண்புகுந்து வேண்டுகின்றார் வடலூர் வள்ளற் பெருமான். மேலும், அனைவர்க்கும் உறுதுணையாவது ஆறுமுகம் அன்றி வேறுமுகம் ஏது? வேறுமுகத்தால் நம்நிலை தாறுமாறு ஆவது உண்மைதானே! எனவே பிறவாழி நீந்த வேண்டுமானல் அறவாழி அந்தணன் தாளை நாம் மறவாமல் போற்றுதல் வேண்டும். மேலும், திருத்தணிகையில் வாழும், வள்ளியை மணந்தவள்ளல் நினைத்ததை யளிப்பான். மனத்தை யுருக்குவான், நிசிக்கருவறுத்துப் பிறவாமல் செய்வான், என்கின்றார் அருணகிரியார். மேலும், அமுதமென இனிக்கும் அருட்பா அருளிய அடிகளாரும்,

தணிகாசலத் தமர்ந்த பெருமானை, கனியே! என்றும் பாகே! என்றும், கரும்பே! என்றும், கண்ணே! என்றும் பாடிப் பரவசம் அடைகின்றார். அதுமட்டுமா? "கற்பகம்" கேட்டதை அளிக்கும். ஆனால் தணிகையில் இருக்கும் கற்பகமோ நினைத்ததையே அளிக்கும் என்பர். ஆன்றோர். எனவே, கற்பகமே! என்றும் அழைக்கின்றார் எத்திக்கும் தித்திக்கும் அத்தீந்தமிழ்ப் பாடலை நாமும் பாடி மகிழ்வோமா!

"தனியே துயரில் வருந்திமனஞ்
சாம்பி வாழ்க்கைத் தளைப்பட்டிங்(கு)
இனியே துறுமோ? என்செய்கேன்
என்றே நின்றேற் கிரங்காயோ
கனியே! பாகே! கரும்பே! என்
கண்ணே! தணிகைக் கற்பகமே!
துனியேய் பிறவி தனையகற்றுந்
துணையே! சோதிச் சுகக்குன்றே!

என்னே! பாடலின் இனிமை! பாடிக்கொண்டே இருக்கலாம் போலிருக்கிறது! இல்லையா? சுகம் அருளும் குன்றாக அவன் இருந்தும் நாம் அவனை அண்டிப் பிழைக்க வகையறியாமல் பெண்டு பிள்ளைகளோடு, மண்டி மாய்கின்றோம். என்னே! அறியாமை! இனியேனும், கண்டதே காட்சி கொண்டதே கோலம்! என்று உண்டுறங்கி அழியாமல் அவன்பாற் சென்று "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" நின்று, அவன் பாத கமலம் தாங்கி, நம் பாதக மலம் நீங்கி உய்வோமாக.

நேரிசை வெண்பா

பாதகம லம்நீங்கப் பன்னிருகை வேலா!உன்
பாத கமலத்தைப் பற்றினேன்–நாதவடி
வேலா! சுகக்குன்றே! வேதனையைத் தீர்த்தருள
பாலா! கடைக்கண்ணால் பார்.

சரணம்! சரணம்! முருகா!

# கலம்பகத்தில் ஓர் காட்சி

திருமதி. ப உமாதேவி அவர்கள்,
பாரதிதாசன் மகளிர் கல்லூரி,
புதுவை-1.

அவள் ஒரு அழகிய நங்கை! அணங்குகொல்! ஆய் மயில் கொல்! என்றெல்லாம் வியக்கத்தக்க அளவு பேரழகுடையவள். அத்தகைய நங்கை, ஒரு நாள் ஒரு அழகனைக் கண்டாள். அவன் ஒப்பற்ற தலைவன். எனவே தன் பரிவாரம் புடைசூழ வந்தவனைக் கண்ட அவள் அவனுடைய எழிலிலும், தோற்றத்திலும் மனம் பறிகொடுத்தாள். தன் மனதிலும், சிந்தையிலும் அவனையே நாயகனாகக் கொண்டாள். அவனன்றித்தனக்கு வாழ்வு இல்லை என்று முடிவு செய்தாள். எனவே தன்துயர் தீர்க்குமாறு அவனிடம் இறைஞ்சினாள். மன்றாடினாள். அவன் நினைவாகவே இல்லினுள் நுழைந்தாள். தான் விரும்பிய தலைவன் வருவான் வருவான் என்றெல்லாம் வழிபார்த்து விழிசோர, உடல் வியர்க்க. உள்ளம் வெதும்பக் காத்திருந்தாள். ஆனால் அவனோ வரவில்லை. அதனால் தன் கவின் அழியப் புலம்டலானாள்.

தலைவியின் நிலை கண்டாள் பாங்கி. தேற்றுகின்றாள். ஆனால் தலைவி ஆறுதல் அடையவில்லை. அதனால் பாங்கி மனம் வருந்துகின்றாள். அந்தத் தலைவனைக் கடிந்துரைக்கின்றாள். அதனையும் அவள் ஓர் அழகிய பாடலாக வெளியிடுகின்றாள்.

''கூடார் புரந்தீ மடுக்கின்றதுஞ் சென்று கும்பிட்டவோ
ரேடார் குழற்கோதை யுயிருண்பதும் மையரிளமுரலே
வாடாத செங்கோல் வளர்ப்பீரெனக் கன்னி வளநாடெனு
நாடாள மைத்தாளு நகையாதினிப் போடுநகை யாடவே''

என்று தலைவன் தந்த துன்பத்தினையும் அவன் செயலினையும் கூறிப் பழிக்கின்றாள், தலைவிக்குப் பொறுக்கவில்லை, தன்

ருல்தானே தலைவனைத் தோழி கடிகின்ருள் என்றெண்ணி வாளாவிருக்கின்ருள். வெளியில் ஆறுதல் கொண்டிருப்பவ ளாகத் தோன்றினுலும் உள்ளுக்குள் வருந்துகின்ருள் என்ப தைத் தெரிந்து கொண்ட அறிவுடைப்பாங்கி மேலும் பேச்சு கொடுத்துத் துன்பத்தைக் கிளராமல் பேசாமல் இருக்கின் ருள். அதனுல் தலைவி தேறுதல் அடைவாள் என்று உறுதி யாக நம்புகின்ருள்.

ஆனுல் அவள் எண்ணத்தில் பிடிப்பிடியாக மண்ணையள் ளிப்போடவென்றே வருகின்றது மாலைப்பொழுது. அதுவும் அது சும்மா வருமா? மல்லிகை மலரையே வெண்மையான சங்காகக் கொண்டு வண்டுகள் வாய்வைத்து ஊத, மென்மை யான மலர்களை அம்புகளாகவும், வில்லாகக் கரும்பினையும் எடுத்துக்கொண்டு மெல்ல நடையிட்டு வருகின்றது அதனைத் தான் புகழேந்தியார்—

"மல்லிகையே வெண்சங்கா வண்டுத வான்கரும்பு
வில்லிகணை தெரிந்து மெய்காப்ப – முல்லையெனும்
மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன்மாலை யந்திப் பொழுது"

என்று பாடினுர். அந்த மாலைப்போது என்னும் அரசன் வரும்போது மலரம்பினையும், கரும்பு வில்லினையும் கைக் கொண்டு காமன் மெய்காப்பாளனுக வருகின்ருன், இவ்வாறு அவனைக் காவலனுகக் கொண்டு தென்றல் சாமரம் வீசி, பனி நீர்தெளிக்க, வெண்ணிலவு குடைபிடிக்கவரும் மாலைப்பொழு தினைக் கண்ட பாங்கி செய்வதறியாது திகைக்கின்ருள். தலைவன் வராவிடினும் அவன் அணிந்த மாலையினையாவது தந்து தலைவியைத் தேற்றலாம் என்ருல் மாலையும் கிட்ட வில்லை. அவளுடைய காதலனுகிய சுந்தரபாண்டியர் மாலை யினைத் தரமாட்டார் என்பது உறுதி. மணாளனுமின்றி அவன் அணிந்த மாலையும் இன்றி வாடும் இவளுடைய உயிரைப் பறிக்கவென்று கூற்ருகப் பலவந்தன. தென்றல் இளமைத் திறமுடன் உலவா நின்றது. அதனேடு பிறைமதியும் இள மைத் துடிப்புடன் எழுந்து விட்டது. அலைகடலும் மகிழ் வுடன் ஆரவாரம் செய்யாநின்றது. இந்நிலையில் இவளுக்கு உயிர் ஏது? இருந்ததைத் தான் அவை பறித்துக் கொண்ட

னவே; எனவே கண்ணீரை ஊற்றுப்போல் பெருக்கும் இவ ளுக்கு உடல் மட்டுமேயுள்ளது. இந்நிலையில் நான் என்ன செய்வேன் என்று கூறித் தவிக்கின்ருள்.

மாற்ருென் றிலையென் மருந்துக்கள்
    தோ சொக்கர் மாலை கொடார்
கூற்ருென்றல வொருகோடி கெட்
    டேன் கொழுந்தொன்று தென்றற்
காற்ருென்று இளம்பிறைக் கீற்ருென்று
    கார்க் கடலொன்று கண்ணீ
ரூற்ருென் றிவளுக் குயிரொன்
    றிலையுண் டுடம் பொன்றுமே

என்று தோழி கூறிப் புலம்பும் நிலையில் இருக்கின்ருள் தலைவி. நாட்கள் செல்கின்றன. தலைவன் வந்தபாடில்லை காத்துக் காத்து ஏமாந்த தலைவியின் மனம் துணிவு பெறுகின்றது. எப் படியும் அவனையடைந்தே தீருவது என்ற உறுதி பிறக்கின் றது. அவன் மேல் கொண்ட அசைக்க முடியா காதல் எதையும் தாங்கும் இதயத்தைத் தருகின்றது. தலைவீ தமிழ் அகப்பொருள் இலக்கியங்களில் வரும் தலைவனின் செயலைப் பின்பற்ற முடிவு செய்து விட்டாள். ஆம். அவள் மடலேறப் போகின்ருள். அதுவும் தலைவன்வாழும் திருக்கோயில் முன்பு, அவன் திருமுன்பு. எனவே அதற்கான ஏற்பாடுகளில் முழு மூச்சுடன் இறங்குகின்ருள்.

மடலேறல் விதிகளுக்குட்பட்டு உலகமரபுக்கு மாருக மடலேற முற்பட்ட தலைவி தன் மனங்கவர்ந்த கள்ளனின் உருவைக் கிழியில் வெகு கவனமுடன் தீட்டுகின்ருள். ஏனெ னில் அவன்,

நீல மணிமிடற்றன் நீண்ட சடைமுடியன்
நூலணிந்த மார்பன் நுதல்விழியன்—தோலுடையன்
கைம்மான் மறியன் கனல்மழுவன் கச்சாலை
எம்மா னிமையோர்க் கிறை.

என்று பலரால் பாராட்டியேத்தப் படுபவன். மேலும் மட லேறல் நிகழ்ச்சியில் ஓவியக்கிழி இன்றியமையாததோர் இடம் வகிப்பதும் கூட. எனவே மிகவும் சிரத்தையுடன் தலைவனின் உருவை வரைந்து முடிக்கின்ருள். அது தலைவனின் வடிவை

அப்படியே காட்டுகின்றது. இதனால் மகிழ்ந்த அவள் தன் நெஞ்சத்திடம் "என் நெஞ்சமே! இடக்கையில் பிடித்துள்ள மானுடனும், வலக்கையில் அழகிய ஒளிமிகுந்த மழுப்படையினையும் கொண்டு ஒப்பற்றப் பேரழகுடன் விளங்கும் என் தலைவனின் உருவை எழுதி முடித்து விட்டேன் இனி அதனைக் கைக்கொண்டு ஏறல் வேண்டும் இன்றோ நாளையோமடன்மா செய்யும் வேலை முடிந்து விடும். அது முற்றுப் பெற்றதும் அழகியக் கமல மலர்களைக் கொண்ட பொற்றாமரைக் குளத்தையுடைய மதுரையில் கோயில் கொண்டு பொன் போன்ற அழகிய திருவடிகளை மாற்றி வைத்துத் திருக்கூத்தாடும் இடமாகிய வெள்ளியம்பலத்தில் அவன் முன்பு மடலேறுவோம் என்று கூறுகின்றாள்.

மடலேறுவதால் தன் எண்ணம் ஈடேறும் என்று நம்புகின்றாள். பழியஞ்சும் பரமனான சொக்கேசர் திகம்பரக் கோலத்தோடு, சாம்பல் பூசி, எருக்கு, எலும்பு, பூளைமலர் ஆகியவற்றால் ஆன மாலையை பணிந்து. தன் உருத்தீட்டிய ஓவியக்கிழியைக் கைக்கொண்டு தன் திருமுன்பு ஒரு பெண் மடலேற அதனைப் பார்த்துக் கொண்டு வாளா விருப்பாரா? தனக்கு ஏற்படும் பெண் பழியை ஏற்க அஞ்சியாவது தன்னை ஏற்பான் என்று எண்ணுகின்றாள். பழிக்கு அஞ்சும் அவன் தான் மடலேறு முன்னமே தன்னைத் தடுத்து ஆட்கொண்டாலும் கொள்வான் என்று அவளுடைய பேதை மனம் எண்ணுகின்றது. எனவேதான் இன்றோ, நாளையோ ஏறுவோம் என்று உரைக்கின்றாள். எப்படியும் தன் காதல் நிறைவேறும் என்று களிப்படைகின்றாள். அந்தக்களிப்பின்விளைவாக அவள் கூற்று,

இடங்கொண்ட மானும் வலங்கொண்ட
வொண்மழுவும் எழுதும்
படங் கொண்டு வந்தனை யானெஞ்ச
மேயினிப் பங்கயப் பூந்
தடங்கொண்ட கூடற் சவுந்தர
மாறர் பொற்றாள் பெயர்த்து
நடங்கொண்ட தோர் வெள்ளி மன்றே
றுதுமின்று நாளையிலே

என்னும் அழகிய வடிவம் கொண்ட பாடலாக அவளின் செங்கனி வாயினின்று வெளிவருகின்றது.

தலைவி துணிந்தபின் தலைவன் இரங்கி அருள்செய்யத் தானே வேண்டும் அவன் என்ன சாதாரணத் தலைவனா? அல்லது சாமானியப்பட்டவனா. எவ்வுயிர்க்கும் தலைவனாய், எல்லாமாய் நின்று,

போகமாய் விளைந்தோய் நீ
புவனமாய்ப் பொலிந்தோய் நீ
ஏகமாய் இருந்தோய் நீ
எண்ணிறந்து நின்றோய் நீ

என்று பாடிப் பரவும் பெருமையுடைய பரம்பொருளாயிற்றே. தன்னிடம் அன்பு கொண்டவர்களுக்கு அருள் செய்யும் அருளுள்ளம் கொண்டவனாகயிருப்பினும் அவர்கள் அன்போடு விளையாடி மனத்தினைச் சோதிக்கும் சோதித்திருவுரு ஆயிற்றே அவன்.

எந்தாய் அனைத்துலகும் ஈன்றாய் எத்தேவர்க்கும்
தந்தாய் செழுங்குவளைத் தாராய் பெருந்துறையில்
வந்தாய் மதுரைத் திருவால வாயு றையும்
சிந்தா மணியே சிறியேனுக் கிரங்காயோ·

என்று வேண்டி உருகி நிற்கும்படி செய்பவனாயிற்றே. எனவேதான் அவள் அன்பினைச் சோதிக்க எண்ணிக் காலந்தாழ்க்கின்றான். இறுதியில் அவளுடைய அன்புக்குக் கட்டுப்பட்டு அருள் செய்கிறான் அதுமட்டுமா?

அந்த நங்கையைப் போன்ற உறுதியான அன்புடன், ஆறாக்காதலுடன் அணுகி நிற்கும் அடியார்களுக்கும் இன்னருள் புரிபவன் அல்லவா அவன் மாறாத அன்புடன் தேடியலையும் பக்தர்களுக்கு அருள் பொழியும் அருட் கொண்டல் அவன், அதனைத்தான் குமரகுருபரர் மேற்கண்டவாறு காட்டினார்.

# 'முருகா, முருகா, முருகா!'

திரு, வி. ஜி சீனிவாசன் B. A. L T, அவர்கள்:
மதுரை–1

பல்லவி

முருகா முருகா முருகா

சரணங்கள்

வருவாய் மயில்மீ தினிலே
வடிவே லுடனே வருவாய்
தருவாய் நலமுந் தகவும் புகழும்
தவமும் திறமுந் தனமும் கனமும் (முருகா)

அடியார் பலரிங் குளரே
அவரை விடுவித் தருள்வாய்
முடியா மறையின் முடிவே யசுரர்
முடிவே கருதும் வடிவே லவனே (முருகா)

சுருதிப் பொருளே வருக
துணிவே கனலே வருக
கருதிக் கருதிக் கவலைப் படுவார்
கவலைக் கடலைக் கடியும் வடிவேல் (முருகா)

அமரா வதிவாழ் வுறவே
அருள்வாய் சரணம் சரணம்
குமரா பிணியா வையுமே சிதறக்
குமுறுஞ் சுடர்வே லவனே சரணம் (முருகா)

அறிவா கியகோ யிலிலே
அருளா கியதாய் மடிமேல்
பொறிவே லுடனே வளர்வாய் அடியார்
புதுவாழ் வுறவே புவிமீ தருள்வாய் (முருகா)

குருவே பரமன் மகனே
குகையில் வளருங் கனலே
தருவாய் தொழிலும் பயனும் அமரா
சமரா திபனே சரணஞ் சரணம் (முருகா)

இவ்வாறாக, ஆறுமுகப் பெருமானை மும்முறை விரித்து, சரணங்கள் ஆறிலே தமது உள்ளக் கிடக்கையினை வெளியிட்டு இசைபாடற் காணிக்கை செலுத்தியவர் கோக்கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் ஆவார். இவ்வரிய பாடலைச் சொற்படு நயமறிந்து தொகுத்து யாத்ததோ டல்லாமல், இனிய முறையிலே இசை தோய்ந்திடப் பாடவும் செய்தவர் அவ்வற்புதக் கவிஞர். ஆம், இவ்வழகிய பாடலை நாட்டைக் குறிஞ்சிப் பண்ணிலே, ஆதி தாளத்திலே இசைத்து உவகையுற்றதோடல்லாமல், கேட்போரையும் உவகைக் கடலிலே ஆழ்த்தியவர் அவ் விற்பனத் தமிழ்ப் புலவர்.

பாரதியார் தமது இனிய குரலிலே, கம்பீரமாகத் தமக்கேயுரிய சீரிய பாங்கினிலே, இம் 'முருகப்' பாடலை எவ்வாறு இசைத்து முழக்கியிருப்பார்?... கவிஞர் பெருமான் இப்பாடல் தனைப்பாடும் போது நேரிலே கேட்டு அநுபவித்தஇருவரைச் சாட்சியாகக் கொண்டு தெரிவோமே!

1919 ஆம் ஆண்டு, ஏப்பரல் திங்கள், ஆறும் நாள். 'கெடுதல் இன்றி நம் தாய்திரு நாட்டின் கிளர்ச்சி தன்னை வளர்ச்சி செய்து' வந்த காந்தியடிகள் அன்றைய நாளை ஹர்த்தால் தினமாக—பாரத மக்கள்தம் அதிருப்தியைத் தெரிவிக்கும் நாளாக – அனுஷ்டிக்க வேண்டுமென அறிக்கை விடுத்திருந்தார். ரௌலத்சட்டம் நிறைவேறியதே காரணம். சென்னைப் பேரூரிலும் "அடிகளின் ஆத்ம சக்தி" மணம் பரப்பியது. அன்று பிற்பகல் நேரம், ராயப்பேட்டை ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் குகானந்த நிலையத்திற்கு வந்துசேர்ந்தார் சுப்பிரமணிய பாரதியார், பஜனைக் குழுவொன்றுடன் எங்கேயோ எப்படியோ கலந்து கொண்டவராக. அவரைக் கண்டதும் 'தமிழ்த் தென்றல்' திரு வி. கலியாணசுந்தர முதலியார்க்குப் பேருவகை உண்டாயிற்று. உள்ளத்திலே கிளர்ச்சியுண்டாயிற்று. பாரதியாரைப் பாடுமாறு கேட்டுக் கொண்டார். இனித் திரு, வி க. பெற்ற அனுபவத்தை அவர்வாயிலாகவே—அவரது சொல்லோவியமாகவே—தெரிவோம்.

"தமிழ்ப் பெருமான், 'முருகா, முருகா, .. ........' என்று பாடத் தொடங்கினர். பாட்டு—தமிழ்ப்பாட்டு-தேனினும்

இனிய முருகன் பாட்டு-படத்திலுள்ள ஓவிய முருகனை நக ரச்செய்தது. ஓவியஉருவம் வீறுடன் வெளிவருவது போன்ற தோற்றம் உண்டாயிற்று. அன்பர் மெய்கள் அரும்பின; விதிர் விதிர்த்தன; சிலர் மயங்கினர்; சிலர் விழுந்தனர்; சிலர் கண்ணீர் உகுத்துத் தம்மை மறந்தனர்; எல்லாரும் ஆனந்த பரவசராயினர்; பாரதியார் சித்திரப் பதுமையானார்; பாட்டுக் கும் ஓவியத்துக்கும் உள்ள ஒருமைப் பாட்டை யான் கண் ணாரக் கருத்தாரக் கண்டேன்!''

திரு. வி. க. பேறு பெற்றவர்தான்; ஐயமில்லை.

பாரதியாரின் இதே, 'முருகா, முருகா, முருகா!' பாட லினைக் கேட்ட னுபவித்த மற்றொரு பெருமகனாரது குறிப்புரை யினைத் தெரிந்து கொள்வோமே! அவர் எழுதுகிறார் இப்படித் தமது கட்டுரை யொன்றிலே;

''பாரதியார் தமிழ் மக்களின் இஷ்ட தெய்வமான முரு கனின் பரம பக்தர்களில் ஒருவர். 'முருகா, முருகா' என்னும் பாட்டு சந்த நயங்கள் பல கொண்ட அரியதொரு பாட்டா கும். மகாகவி ஒருவரே படைத்துத் தரக்கூடிய ஒலி நயங் களை உடையதாகும். பாரதியார் இப்பாட்டைப் பாடிய போது நேரில் இருந்து கேட்டேன், 'சுருதிப் பொருளே வருக!' என்று தொடங்கும் கண்ணியைப் பாடுகையில் அவர் ஆவேசம் பொங்கியது. 'கருதிக் கருதிக் கவலைப் படுவார் கவலைக் கடலைக் கடியும் வடிவேல்', என்று இறுதி இரண் டடிகளைப் பாடி வருகையில் அவர் நாவினின்று சொற்கள் உறுதியாகவும் வேகமாகவும் உருண்டோடின. 'வடிவேல்', என்னும் இறுதிச் சொல்லுடன் நின்று விடாமல், 'வடிவேல்! வடிவேல்! வேல்! வேல்!' என்று அடுத்தடுத்து நாலு தடவை மொழிந்தார். அப்போது அவர் கண்கள் அகன்று விழித்த தையும் அவற்றினின்று தீப்பொறிகள் பறந்ததையும் பிரத் யட்சமாகக்கண்டேன். அவ்வளவு உணர்ச்சியுடனும், மெய்ம் மறந்தும் அவர் பாடினார். அவர் மொழிந்த ஒவ்வொரு சொல் லிலும் அவ்வளவு உயிர்த்துடிப்பு இருந்தது. ஆவேச நிலையில் அவர் பாடிய சொற்கள் யாவும் மந்திரசக்தி வாய்ந்தனவான விளங்கின'',

இவ்வாறு வரைபவர் திரு ப. கோதண்டராமன், எம்.ஏ பி. எல்., ஆவார். (தற்சமயம் புதுவையில் வதிந்து, 'ஸ்ரீ அரவிந்தர் கர்ம தாரா' என்னும் திங்களிதழ்க்கு ஆசிரியரென இலங்கி வருகிறார்.) இவ்வழக்கறிஞர் 1918–20 ஆண்டுகளிலே சென்னைத் தொழிலாளர் சங்கங்களிலே பெரிதும் ஈடுபட்டிருந்தார். திரு. வி. க., வாடியா, சட்டோபாத்தியாய ஆகியோருடன் ஒத்துழைத்தவர். 1920-ஆம் ஆண்டிலே, ஒருநாள் பெரம்பூரிலுள்ள ரயில்வேத் தொழிலாளர் சங்கத்திற்கு உரையாற்றச் சென்றார். செல்லுமுன், "சுதேசமித்திரன்" நாளிதழ் அலுவலகத்திலே பணியாற்றிக் கொண்டிருந்த சுப்பிரமணிய பாரதியாரைத் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு கூட்டத்திற்கு வருமாறு கேட்டுக்கொண்டார். பாரதியாரும் அழைப்பினை யேற்று வந்தார். தமது வீர மந்திரப் பாடலைப் பல்லார் பயன் துய்ப்பப் பாடினார். தமது கம்பீரமான இனிய மணிக் குரலிலே பாடிக் கேட்போரை மகிழ்ச்சியிலும் வியப்பிலும் ஆழ்த்தினார். இசையின் பெற்றி வெற்றி விளைத்தது.

திரு; ப. கோ. நிரம்பக் கொடுத்து வைத்தவர்; ஐயமில்லை அம்மகாகவி தமது பாடல்களைத் தாமே உணர்ச்சி ததும்பப் பாடியதை, எத்தனையோ பேர்கள் செவிமடுத்து இன்புற்றிருப்பார்கள். இசையின்பத்தேன் வந்து தமது செவிகளிலே பாயப்பெற்ற ஒவ்வொருவரும், 'அன்று நான் கேட்டது அமரர்தாம் கேட்பாரோ!' என்றுதான் எண்ணியிருப்பார். இஃது உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை.

முருகன் புகழ் வாழ்க! அவன் அருளிய தமிழ் வெல்க!! பாரதியார் பெயர் வாழ்க!!!

---

[சிவ சிவ

# திருக்குற்றாலத் தல புராணம்

(திருவாவடுதுறை ஆதீன வெளியீடு)

## மதிப்புரை

**திரு: கு. சுந்தரமூர்த்தி எம். ஏ. அவர்கள்;**

செந்தமிழ்க் கல்லூரி முதல்வர்

*திருப்பனந்தாள்*

திருக்குற்றாலம் மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றானும் சிறப்புடையது; அம்மையப்பரின் அருள் பெற்ற அகத்தியரால் வழிபடப் பெற்றது. நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் வணங்கிப் போற்றிய பெருஞ் சிறப்புடையது; ஞானத்தின் திருவுருவாய மணிவாசகப் பெருமான் கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே என வேண்டப் பெற்ற சிறப்புடையது.

இத்தகைய பெரும்பதியின் சிறப்பை விளக்கவெழுந்ததே இத்தல புராணம் ஆகும். தலபுராணங்கள் அவ்வத்தலச் சிறப்பை விளக்க எழுந்தவை மட்டுமன்று; அரியபல வரலாறுகளையும் தம்மிடத்தே கொண்டு விளங்கு வனவாகும். இத்தகையோர் இத்தலத்தை வழிபட்டு இத்தகைய தகுதியைப் பெற்றார்கள். 'நீவிரும் அன்னோர் போல வழிபட்டு உய்மின் என ஆற்றுப்படுத்துவதே தலபுராணங்களின் குறிக்கோளாகும். இக்குறிக்கோளை முழுமையாகக் கொண்டு விளங்குவது இந்நூலாகும்.

இதனை அருளியவர் திரிகூடராசப்பக் கவிராயர் என்பார். திருநீற்றை மெய்யழுத்தி அஞ்செழுத்தை நெஞ்சழுத்தியவர் இவர். ஆதலின் இவரருளிய இந்நூலிலும் அவ்வருள் மணமே வீசுகின்றது. கல்வி நிலையில் அரியராய் உள்ளார், எளியராய் உள்ளார் அனைவருக்கும் அவரவரின் அறிவு நிலைக்கேற்பச் சுவை நலத்தையும், தத்துவ உணர்வையும் இந்நூல் தந்துதவ வல்லது.

இத்தகைய விழுமிய நூலை வெளியிட்டருளியவர்கள் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து 22-

ஆவது குருமகா சந்நிதானமாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆவார்கள் அவர்கள் தம் பெருங்கருணையினால் எண்ணிறந்த பல அரிய மாநாடுகளைக் கூட்டியும், அரிய பல இலக்கண, இலக்கிய, சித்தாந்த நூல்களை வெளியிட்டும் உயிர்கட்கு மெய்யுணர்வு கைவரப் பெறுமாறு திருவுளம் பற்றி வருவது தமிழ்ச் சைவ உலகம் நன்கறியும். அத்தகைய திருவுளப் பாங்கின் அருட் கொடையாலேயே இந்நூலும் பொழிப்புரையுடன் வெளி வருகின்றது.

2072பாடல்களையுடைய இவ்வரியநூலைநல்லவெள்ளைத் தாளில் காலிகோ பைண்டுடன் கண்கவர் வனப்பினதாகவும், பல்லாண்டு கழியினும் நூலின் வனப்பும் கட்டும் கெடாத வகையிலும் வெளியிட் டருளியுள்ளார்கள். பொழிப்புரை தாமும் ஆற்றொழுக்கான நடையில் அமைந்துள்ளது.

இதற்குத் தமிழ்ச் சைவ உலகம் செய்யும் கைம்மாறு என்னே! வாழ்க அவர்கள் திருவுள்ளம்! வளர்க அவர்களின் திருவருட் பயன்.

சீதமழை முகில்பொழிக தேசமெலாம் பயிர்விளைக செல்வ மோங்க
மாதர்குழா மக்கள்குழா மனையறங்க ளுடன்பொலிந்து மலிந்து வாழ்க
மேதகுசீர்ச் சைவநெறி வேதநெறி தழைத்தோங்க மேலுமேலும்
பூதலமேற் சிவபெருமா னாலயங்கள் பூசனைகள் பொலிக மாதோ.

—திருக்குற்றாலத் தலபுராணம்.

கிடைக்கும் இடம்:

திருவாவடுதுறை ஆதீனம்,
திருவாவடுதுறை.

# கடவுளைக் காணலாம்

புலவர்: திரு: இரா. சுவாமிநாதன், அவர்கள்
திருப்பனந்தாள்.

**கலிகாலத்தில் கடவுள்**

"இல்லை இல்லை" "கடவுள் இல்லை" "இல்லவே இல்லை" என்பன போன்ற புன்மொழிகள் சலவைக் கற்களில், சந்தியில் நிற்பதைக் காண்கின்றோம். கடவுள் இக்கலிகாலத்தில் அம்மொழிகளையும் பொன்மொழிகள் என ஏற்றுக்கொண்டிருக்கின்றான் போலும்! வைதாரையும் வாழவைக்கும் ஆண்டவன் கலிகாலத்தில் அவ்வாறு செய்வதில் வியப்பில்லை அல்லவா? ஆம் அப்படிப்பட்டவர் இக்காலத்தில் இருப்பதனாலே தான் இன்று கடவுளைப்பற்றிச் சிலர் பேசியும், பாடிப் பரவியும், பழுதுபட்ட கோயில்களைப் புதுக்கியும் பரம்பொருளைப் பரவுகின்றார்கள் என்பதில் எள் அளவும் ஐயமில்லை.

எனவே அப்பரம்பொருள் யார்? அவன் எப்படிப்பட்டவன்? என்னபெயரினன்? அவனைக்காணும் வழியாது? கண்டு வழிபட வேண்டிய முறை என்ன?என்றெல்லாம் நம்மில்பலர் அறிவோம்; சிலர் அறிய விரும்புகின்றனர். எனவே காலநிலைக்கு ஏற்பக் கடவுளை அடைய எளிதான வழிகள் சிலவற்றைண்டு சிந்திப்போம்.

**கடவுள் யார்?**

கடவுள் யார்? என்ற வினாவிற்கு விடை காணுதல் என்பது நம் சிற்றறிவிற்கு இயலாது; எனவே ஆன்றோர்கள் கூறிய அமுதப் பாக்களில் காணப்படும் கருத்துகளையே அதற்கு விடையாகக் கூறல் நலம் என்றே எண்ணுகின்றேன்.

கடவுள் பிறப்பு இறப்பு, இன்பதுன்பம் இருவினை எல்லாவற்றையும் கடந்தவன்; வேண்டுதல், வேண்டாமை என்ற விருப்பும் வெறுப்பும் அற்றவன்; தனக்கு ஒப்பில்லாத உயர்ந்

தவன்; நினைப்பவர் மனக்கோயிலில் நீங்காது உறைபவன் என்றே விடைகூற வேண்டும். மக்களிடம் காணப்படும் எல்லாக் குணங்களையும் குறிகளையும் கடந்தவனே கடவுள்.

மேலே கூறப்பட்ட கருத்துக்களை,

''தாயும்இலி தந்தைஇலி தான் தனியன்''
''பிறப் பிறப் பென்றி லாதவன்''
''தொடரின்ப துன்ப மற்றவனை''
''வேண்டுதல் வேண்டாமை இலான்''
''தனக்கு உவமை இல்லாதான்''
''நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்''

என்ற பாடல் அடிகள் நமக்கு நன்கு புலப்படுத்துகின்றன.

**கடவுள் எப்படிப்பட்டவன்?**

கடவுள் எப்படிப்பட்டவன்? என்ற வினாவிற்கு விடை காணப்புகினும் நம் முன்னோர்கள் கூற்றே நமக்குத் துணை புரியும். விறகில் மறைந்துள்ள தீயைப் போலவும், பாலில் மறைந்துள்ள நெய்யைப் போலவும், மறைந்து காணப்படு பவன்; தேடிவரும் அடியவர்கட்குத் தெளிவாகத்தோன்று வான் ''இறைவன் மறை பொருளாக விளங்கும் இத் தன்மையினை:

''விறகில் தீயினன் பாலில் படுநெய் போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்''

என்ற தேவார அடிகள் நமக்கு எடுத்து இயம்புகின்றன.

மேலும் உருவ வழிபாடு செய்பவருக்கு உருவிலும்; உருவ வழிபாடு விரும்பாதவர்கட்கு அருவிலும், உண்டு என் பவருக்கு உள்ளவனாகவும்; இல்லை என்பவருக்குச் சொல் அளவில் இல்லாதவனாகவும் (மனத்தளவில் மனச்சாட்சியாக உறைபவன்) கடவுள் விளங்குகின்றான் என்ற உண்மையினை

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே''

என்ற கந்தர் அநுபூதிப்பாடல் உள்ளங்கை நெல்லிக்கனி எனப் புலப்படுத்துகின்றது.

## கடவுளின் பெயர் என்ன?

கடவுளின் பெயர் என்ன? என்ற வினுவிற்கு விடை கூறப்புகின் எளிதாக விடைகூறி விடலாம்.

''ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமில்லாற்கு ஆயிரம்
திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ''.

என்ற மணிவாசகப் பெருமான் அருளிச் செய்த அடிகளே இறைவனுக்கு ஒரு உருவமும் இல்லை ஒரு நாமமும் இல்லை எனவே நம் விருப்பப்படி இறைவனைத் திருநாமங்கள் இட்டு அழைக்கலாம் என நமக்குத் தெளிவுபடுத்துகின்றன. எனவே நாம் எந்தத் திருநாமம் இட்டு இறைவனை உள்ளன்போடு அழைத்தாலும் உளமுருகி வந்து திருவருள் புரிவான் என் பதில் எள்ளளவும் ஐயமில்லை எனவேதான் ஆன்றோர்கள் கடவுளுக்கு சகஸ்ரநாமங்களால் [ஆயிரம் பெயர்கள்] அர்ச்சனை செய்கின்றார்கள்.

## கடவுளைக் காணும்வழி:-

பல்லாற்றானும் சைவ சமய குரவர்களாலும், ஆன்றோர் களாலும், சான்றோர்களாலும் ஆழ்வாராதியர்களாலும் போற்றியும், புகழ்ந்தும் பரவியும் துதிக்கப்பட்ட கடவுளைக் காண விரும்பினுன் ஒருவன்; நீராடினுன், தூய உடை அணிந் தான்; திருநீற்றை உடல் முழுதும் பூசிக்கொண்டான்; திருக் கோயிலின் உள்ளே சென்றான்; கோயில் முழுவதையும் சுற் றினுன் கோயிலில் சிலைவடிவில் காட்சி தரும் இறைவனது திருவுருவங்களையும் கண்டான். கோயிலின் உள்ளே காணப் படும் தீவினை போக்கும் திருக்குளத்தையும் கண்டான்; இறை வன் தேரில் அமர்ந்து திருவுலா வரும் திருவீதிகளையும் கண் டான். சோபுரத்தின் மேலேயும் ஏறி இறங்கினுன். சித்திரங் களாக இருந்து வரலாற்றை வழங்கும் திருஓவியங்களையும் கண்டான்; வீட்டிற்குத் திரும்பி வந்து சேர்ந்தான்; அவனது மனப்பாங்கறிந்த வீட்டார் அவனைப் பார்த்துக் கடவுளைக் கண்டாயா? என்றனர்; அவன் தந்த பதில் கட்டுரையின் முதற் சொல்லாகிய இல்லை என்பதுதான். அவன் தந்த பதில் இதோ

கோயில் முழுதும் கண்டேன்-உயர்
கோபுரம் ஏறிக் கண்டேன்

தேவாதி தேவனை யான்
தேடியும் கண்டி லனே
சிற்பச் சிலை கண்டேன் – நல்ல
சித்திர வீதி கண்டேன்
தேவாதி தேவனை யான்
தேடியும் கண்டி லனே
தெப்பக் குளங் கண்டேன்
தேரோடும் வீதி கண்டேன்
தேவாதி தேவனை யான்
தேடியும் கண்டி லனே''

என்ற பாடல்தான் அது.

அப்பதிலைக் கேட்ட அந்த வீட்டுச்சிறுவன் உருக்கமான தெரு உண்மையை அவனுக்கு எடுத்துச் சொன்னான். "நீ மனசுலே சாமியை நினைச்சுண்டு கோயிலுக்கு போகலே அதனாலே உனக்கு சாமி தெரியலே'' என்பதுதான் அப்பச்சிளங் குழவியின் சொல்ஆம். உண்மைதான் நான் தெய்வசிந்தனையின்றியே கோயிலுக்குச்சென்று வந்தேன். மனம் ஒன்றி நினைத்தால் மறையவனும் இறையவனைக் காணலாம் என உணர்ந்தேன். அன்றுமுதல் "திருமாலொடு நான்முகனும் தேடித் தேடரிய'' தேவனைத் தன் உள்ளத்தே நினைத்து வழிபட்டு உணர்ந்தான். அச்சிறுவன் கூற்றையும் காண்போம்

"உள்ளத்தில் உள்ளானடி – அதைநீ
உணர வேண்டு மடி
உள்ளத்தில் உள்ளான் எனில் - கோயில்
உள்ளேயும் உள்ளானடி''

என்ற அடிகளே அவை.

எனவே தூய மனத்தோடு நினைப்பவர்கட்கு குனித்த புருவத்தோடு, கொவ்வை செவ்வாயில் குமிழ்சிரிப்போடு, பனித்த சடையோடு பவளமேனியில் வெண்ணீறோடு, எடுத்த பாதத்தோடு காட்சி தருவான்

இதனையே ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் "கள்ளத்திருக்கு ஒயில் காணலாம் கண்டீர் நம் உள்ளத்திருக் கோயிலுள்'' என்று இயம்பியுள்ளார்கள்.

"கள்ளமில் உள்ளம் கடவுளின் இல்லம்" என்ற முது மொழியும் ஈண்டு ஒப்பு நோக்கற் பாலது. எனவே தூய மனமே தூயவனைக் காணும்வழி என்பதை உணர்தல் நலம்.

**உண்மை அன்பு:**

கடவுளை வழிபட வேண்டிய முறை யாது? அதற்குவிதிக் கப்பட்ட விதிகளைக் கடைப்பிடிக்க இயலவில்லையே? கடவுளைக் காணும் எளியவழி உளதா? என்று சிலர் கேட்பதும் உண்டு. கடவுளை வழிபட வேண்டிய முறை உண்டு; நியதிகளும் உண்டு. அம்முறை தவருமல் வழிபட்டால் தான் கடவுளை அடைய முடியும்; நம்மால் அவற்றைக் கடைப் பிடிக்க இயலாது என்று சிலர் நியதிகட்கு அஞ்சிக் கடவுளை வணங்குவதைக் கூட நிறுத்த முயல்கின்றனர். இயலாதவர் கட்கு நியதி தேவை இல்லை; நேரம் தேவையில்லை; ஆசாரம் தேவை இல்லை. உண்மை அன்பு ஒன்றே உயர்ந்தவனை அடையும் எளிய வழியாகும்.

இறைவனை வணங்க நாடோறும் நீராட வேண்டும். காய், கனி, கிழங்குகளையே உண்ண வேண்டும்; பாலைத் தவிர வேறு உணவு உட்கொள்ளக் கூடாது என்றசில நியதிகளை எண்ணிச் சிலர் இறைவனை வணங்கக்கூட அஞ்சுகின்றனர். இந்தமுறையிலேதான் இறைவனை வணங்க வேண்டும்; அப்பொழுதுதான் இறையருள் கிட்டும் என்ருல் நாள்தோறும் நீரிலேயே மூழ்கித் திளைக்கும் தவளை, மீன்' பாம்பு போன்ற நீர்வாழ் உயிரினங்கட்கு இறைவன் காட்சிதர வேண்டாமா? அவை எப்பொழுதும் நீராடிக் கொண்டே இருக்கின்றனவே? பழங்களையே உண்டு பரம் பொருளை வழிபட்டால் தான் பரகதி கிடைக்கும் எனில் மரக்கிளைகளில் வாழும் குரங்குகள் தினமும் பழங்களைத் தானே உண்டு வாழ்கின்றன? அவற்றிற்கு இறைவன் வீடுபேறு அளிக்க வேண்டாமா? பாலை மட்டும் பருகினுல் இறைவன் பதம் கிடைக்கும் என்ருல் பிறந்தநாள் தொட்டு உணவு உண்ணும் வரை பச்சிளங் குழவி பாலைமட்டும் தானே அருந்தி வாழ்கின்றது? அக்குழவிக்கும் இறைவன் இன்னருள் புரிய வேண்டாமா? என்று எண்ணத் தோன்றுகின்றது.

ஆம் உண்மைதான், கடவுளை அவை நினைக்கவில்லை கடவுளிடம் அன்பு செலுத்தும் ஆற்றல் அவற்றிற்கு இல்லை என்பதை நாம் உணர்கின்றோம். எனவே கடவுளை அடைய உண்மையான அன்பு தேவை.

''உண்மை அன்பை உடையவரே
உலகம் அளந்த பெருமானைக்
கண்ணால் கண்டார் கண்டாரே
அல்லார் காணார் காணாரே''

என்ற அடிகளே இறைவனை அடையும் எளியவழியை நமக்கு எடுத்து இயம்புகின்றன.

## பேரின்பம்:

ஆகவே கடவுள் ஒருவன் உண்டு: அவன் எல்லாவற்றை யும் கடந்த பரம்பொருள் அவன் அன்பர்கள் முயற்சிக்குத் தகுந்த வடிவில் காட்சிதருவான். உருவாய், அருவாய், உள தாய், இலதாய், அங்கு இங்கு எனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவன். அடியவர்களில் மனக்கோயிலில் அன்பே வடிவாக அமர்ந்திருப்பவன்; உண்மை அன்பே அவனை அடையும் வழி என்பது உறுதி. இதனையே;

''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப் பாரே''

என்றார் திருமூலர்.

எனவே மனத்துக்கண் மாசின்றி உண்மை அன்போடு இறைவனை வழிபடுபவர்கள் மனக்கோயிலில் மாதொரு பாகனைக்கண்டு பேரின்பம் அடையலாம். என்பதோடு முத்தி நெறிஅறியாத மூர்க்கரோடு முயலும் என்னை பக்திநெறியைச் சிந்திக்க வைத்த குமரகுருபரன் நாளிதழிற்கும் அதற்குத் தோன்றாத் துணையாய் நின்று ஆதரவளித்து வரும் திருப்பனந் தாள் ஸ்ரீகாசி மடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ எஜமான் சுவாமிகள் அவர்கள் பொன்னார் திருவடிகட்கும் என்மனம் மொழிமெய் களால் ஆன வணக்கங்களைத் திசை நோக்கிச் செலுத்தி முடிக்கின்றேன்.

''சைவமும் தமிழும் தழைத்து இனிது ஓங்குக.''

# வாதவூர் அடிகள் உழைக்காது வேண்டும் ஊதியம்

சைவப்புலவர்
வித்துவான், திரு. மு. பரசுராமன் அவர்கள்,
செஞ்சி (தெ. ஆ. மாவட்டம்)

(சென்ற இதழின் தொடர்ச்சி)

**மூன்றுவது தவறு:**

'அவமே பிறந்த அருவினையேன்' என்கின்றூர் மணிவாசகர். பிறப்பு அடிக்கடி நிகழ்வது. அப்பிறவி எழுவகைப் படும். இதனை,

எழுமை எழுபிறப்பும், எழுபிறப்பும் தீயவை தீண்டா, எழுமையும் ஏமாப்புடைத்து என வள்ளுவர் கூறுவனவற்றூலும், அறியலாம். எழுபிறப்பு இன்ன என்பதை, எழுபிறப்பும் தீயவை தீண்டா (62) என்னும் குறளுக்குப் பொருள் வரையும் பரிமேலழகர் நன்கு விளக்குவார். அவ்விளக்கமாவன,

"ஊர்வ பதினொன்றும் ஒன்பது மானுடம்
நீர்பறவை நாற்காலோர் பப்பத்துச் – சீரிய
பந்தமாம் தேவர் பதினு லயன்படைத்த
அந்தமில்சீர்த் தாவரநா லைந்து."

1. ஊர்வன 2. மனிதர் 3. நீர்வாழ்வன 4. பட்சி 5. மிருகம் 6. தேவர் 7. தாவரம் என்பனவாம். இவ்வெழுபிறப்பினையே மிக விளக்கமாக மிக வேதனையுடன், மணிவாசகர்,

'புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிப்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்.

எனக் கூறுமாற்றூனும் அறியலாம். எனவே, நாம் பிறப்புக்கள் எழுவகை எடுப்பினும் நாம் ஒவ்வொரு பிறப்பும் எடுப்பது வினைகளை உண்டு சழிப்பதற்காகவும், உண்மை உணர்ந்து சிவத்தையே சிந்தித்து முத்தியின்பம் பெறுதற்காகவுமே

ஆகும். இதனையே சிவஞான சித்தியார் பின்வருமாறு நன்கியம்பும்.

"மானுடப் பிறவிதானும் வகுத்தது மனவாக் காயம்
ஆனிடத் தைந்து மாடும் அரன்பணிக் காக அன்றே
வானிடத் தவரும் மண்மேல் வந்துஅரன் தனையர்ச்சிப்பர்
ஊனெடுத் துழலு மூடர் ஒன்றையு முணரார் அந்தோ."

[சூ-2-செ-92]

எனவே இப்பாடலால் மானுடப் பிறவி எடுத்தது அரன் தன் பணிக்காகவே என்றும், வானிலுள்ள தேவர்களும் வான் விடுத்து மண்மேல் வந்து அருச்சிப்பர் எனவே மண்ணில் பிறந்தார் மாண்புமிக்கவர் என்றும் கூறுவதையும் நாமறியலாம். எனவே எடுக்கும் பிறப்பிற்கேற்றவாறு உள்ள கடமைகளைச் செய்யாது வீணாகக் கழிப்போமாயின் அப்பிறப்புப் பயனற்ற பிறப்பாய்க் கழிவதைக் காணலாம். இன்னும் பிறவியின் பயன் இன்ன என்பதைச் சேக்கிழார், திருஞான சம்பந்தர் புராணத்தில், சம்பந்தர் வாக்காகப் பின்வருமாறு கூறுவதைக் காணலாம்,

"மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணி னல்அவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்"

[பாடல்-1089]

என்பனவாம். எனவே, இங்ஙனம் செய்யும் பயன்தரும் பிறப்பைப் பெற்றிலேன். அதற்குக் காரணம் யான், முன் பிறவிகளிற் செய்த கொடுவினைகளே என்கிறார் மணிவாசகப் பெம்மான். இன்னும் கற்றுவல்ல பெருமையுடைய பெரும்பிறப்பு உடையவரும், வாலறிவன் நல்ல தாள்களைத் தொழவில்லை எனின் பயனில்லை எனத் திருவள்ளுவ நாயனார்,

"கற்றதனா லாய பயன்என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"  (குறள்-2)

என்னும் அருமைக் குறட்பாவால் விளக்கி இருத்தலையும் அறியலாம். எனவே மணிவாசகப் பெருமான் 'அவமே பிறந்த அருவினையேன்' எனத் தன் பிறப்பு வீண் பிறப்பாகக் கழியத் தான் தவறு செய்துவிட்டேன்; ஆனால் நின்னருள் தருக என வேண்டுகின்ற தன்மையினைக் கூறுவதையும் நாமறியலாம்,

நான்காவது தவறு;

'உனக்கு அன்பருள்ஆம் சிவமேபெறும் திருவெய்திற்றிலேன்' என்கிறார் மணிவாசகர். பொதுவாகச் சிவப் பெருந் திருவை எய்துதற்கு நல்லறங்கள் பல செய்தல் வேண்டும். அவ் நல்லறங்கள் என்ன என்பதைப் பின்வருமாறு பரஞ்சோதி திருவிளையாடற் புராணம் நன்கு உணர்த்தும்.

'அதிகம் நல்லறம் நிற்பதென்று அறிந்தனை அறத்துள்
அதிக மாம்சிவ புண்ணியம் சிவார்ச்சனை அவற்றுள்
அதிக மாம்சிவ பூசையுள் அடியவர் பூசை
அதிகம் என்றறிந் தன்பரை அருச்சனை செய்வாம்.'

(இரசவாதஞ்செய்தபடலம்–21)

இதனையே, இன்னும்,

'**காண்பவன் சிவனே யானுல் அவனடிக் கன்புசெய்கை மாண்பறம்**' எனச் சிவஞான சித்தியார் உணர்த்தும். எனவே, இங்ஙனம் நல்லறம் பலவற்றுள்ளும் அதிக நல்லறமாய் அமைவது அடியவர் பூசை. ஏனெனில் அடியார்களை அரனெனவே கருதி வழிபடுக எனப் பின்வருமாறு பொய் கண்டகன்ற மெய்கண்டதேவர் கூறுவர்,

"செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரனெனத் தொழுமே."

(*சிவஞானபோதம்–சூத்திரம்–12*)

எனவே, பாலொடு நீர் சேர்ந்தால் நீரானது பாலின் தன்மை ஆவதுபோல் அருளைப் பெருக்கும் அடியார்களுடன் நாம் கலந்தால் (பழகினுல்) அவர்களின் தன்மையாகிய அறிவும் செயலுமே அமையும். எனவே இங்ஙனமெல்லாம் செய்தால் பெறும் 'சிவப்பெருந்திருவை' மேற்கூறிய அறங்களைச் செய்யாத தவற்றினுல் பெறவில்லை என 'உனக்கு அன்பருள்ஆம் சிவமே பெறும் திருஎய்திற்றிலேன்' எனத் தன் நான்காவது தவற்றினைக் கூறி, ஆனுல் அங்ஙனமிருப்பினும் எனக்கருள்க என வேண்டுவதையும் அறியலாம். இங்ஙனம் உழைக்காது (செயாது) இறுதியில் வேண்டுவன; 'நின்திருவடிக்குஆம்பவமே அருளுகண்டாய் அடியேற்கு எம்பரம்பரனே' என்கின்றார் மணி

வாசகர். எனவே, மேற்கூறிய தவறுகள் யான் செய்யினும் இனியாவது அத்தவறுகள் செய்யாது பதி புண்ணியங்களைச் செய்து நின் திருவடி அடைதற்குரிய பிறவியைத் தந்தருளும்; அதனால் அடியேன் உய்ந்து அருளத் திருவுளம்பற்றுவீராக எனவும் இறுதியில் வேண்டுவதை 'நின் திருவடிக்குஆம் பவமே அருளுகண்டாய் அடியேற்கு எம்பரம்பரனே' என்னும் அடியால் நாமறியலாம். இதனையே பின்னும்,

"சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே"

(திருச்சதகம்–14) என்கின்றார் மணிவாசகர்.

முடிப்புரை:

இங்ஙனம் 'திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார்' என்னும் பெருமை பெற்ற திருவாசகத்தின்கண் உள்ள ஒவ்வொரு திருப்பாட்டும் உலக மக்களை நன்னெறி உய்க்கவும், அவர்தம் வாழ்வினைச் செம்மைப்படுத்தும் அமைப்புக்களாகவும் மணிவாசகப்பெம்மான் கூறியிருப்பதை அறியலாம். இதனாலன்றோ பின்வந்த இராமலிங்க அடிகளாரும் பின்வருமாறு கூறினர் போலும்!

'சேமமிகும் திருவாத வூர்த்தேவென் றுலகுபுகழ்
மாமணியே நீயுரைத்த வாசகத்தை எண்ணுதொறுங்
காமமிகு காதலன்தன் கலவிதனைக் கருதுகின்ற
ஏமமுறு கற்புடையாள் இன்பினும்இன் பெய்துவதே.''

''வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்
கேட்டபொழு தங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான
நாட்டமுறும் என்னில்இங்கு நானடைதல் வியப்பன்றே,''

திருச்சிற்றம்பலம்

திருவாதவூரர் திருத்தாள் போற்றி!
பொய்யடிமை யில்லாப் புலவர்க்கும் அடியேன்!

# அண்ணல் பெருமை

'நுனிப்புல்'
திரு; ர. வேங்கிடரத்தினம் அவர்கள்,
E- 168 அண்ணு ரோடு, (ப்ளாக் 17)
நெய்வேலி-1.

-O-

திருமூல நாயனுர் சிவபெருமானின் சிறப்பும் சீரும் இத் தகையவை என்று செப்ப விழைகின்ருர். பெருமானின் பெருமையினை எடுத்தியம்பத் தலைப்படும் அவர்க்கு ஒருகணம் வியப்புத் தட்டுகிறது. பெருமை மிகுந்த பரமனின் ஆற்றலை எடுத்து விளக்கத் தமக்கு ஏது ஆற்றல் எனத்தயங்குகிருர். பெருமானின் பெருமையே நாயன்மாரின் நாவடக்கத்திற்கும் நயம் ஊட்டும்.

திருமூலர் அவையடக்கமாகப் பாடுகிருர்

ஆரறிவார் எங்கள் அண்ணல் பெருமையை?
யாரறிவார் இந்த அகலமும் நீளமும்?
பேரறியாத பெருஞ் சுடர் ஒன்றதின்
வேரறியாமை விளம்பு கின்றேனே.

முதல் இரு அடிகளின் இறுதியிலும், விளுக்குறிகட்குப் பதிலாக வியப்புக் குறியீடுகளையும் கொள்ளலாம். சிவபெருமானின் பெருமையினை முற்றும் அறிந்தவர் எவர்? யார்க்குத்தான் தெரியும் பரந்து விரிந்து ஆழ்ந்து நிற்கும் பரமேசுவரனின் பூரணநிலை? எவரும் பெயர்கூட இன்னும்இட முற்படவில்லை, இச் சிவானந்தச் செஞ்சுடர்க்கு; இப்பரஞ்சோதி எங்கே பிறந்து எங்கே வளர்ந்து எங்கேமுடிகிறது எனஎவரும் அறிய மாட்டார். இத்தகையதொரு அதிசயப் பெருஞ்சோதியின் தோற்றுவாய் இன்னது என்று அறியவொண்ணுமை தனையே, இதன் பெருமையெனக் கூற முற்படுவதாகப் பாடுகிருர் திரு மூலர்,

ஆதியும் அந்தமும் இல்லா
அரும் பெரும் சோதி.

—இவ்வாறு மாணிக்கவாசகர் இதே திருவருளைப் பெருஞ்சுடரினைச் சுட்டுவார். இச்சுடரொளி தான், தாயுமானுர் பாடும்,

அங்கிங் கெனுதபடி எங்கும் பிரகாசமாய்

ஒளிவரும் தெய்வமும் ஆகும்.

சுடர், சோதி என்றமையினுல், எவரும் எம்ஈசனை வெப்பமாய்ச் சுட்டுக் கொளுத்துபவர் என எண்ண வேண்டாம். தீயினைக் காட்டினும் சூடுமிக்கவர்தான் இறைவன்; ஆயினும் நதி நீரோட்டத்தில் கூட இராத தண்மை மிகுந்தவர் அவர். குளிர்ச்சியும் வெம்மையும் அவருடைய இயல்புகளே. அப்படியிருந்தும், இறைவன் திருவருளைப் புரிந்து கொள்பவர்கள் இல்லையே என்று சுந்தரநாதனுக்கு மனத்தாங்கல்.

சின்னஞ்சிறு குழந்தையினிடம் கூடக்கள்ளத்தனம்ஏதேனும் இருக்கலாம். ஆனுல் பரமசிவனே சேயினும் நல்லவர்; அடியார்க்கு ஒருஅணிகலனுகத் திகழ்பவர். விரிசடைக்கடவுள் அத்துணை நல்லவளாகப் பெற்ற அன்னை கூட அமையமாட்டாள். சிவபெருமான் அவ்வளவு இனியவர்.

தீயினும் வெய்யன் புனலினும் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருள் அறிவார் இல்லை
சேயினும் நல்லன் அணியன்நல் அன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ்சடை யோனே.

நீள் சடையோடு பெண் பாலர் போலத் தோற்றம் தருகிருரே எனப்பார்க்கின், உண்மையில் அன்னையைவிட அருமையான இயல்பும் கொண்டு பேணிக் காத்தருள்பவர் பரமேசுவரன்!

சிவபெருமானுக்கு இணையான தெய்வம், தேடிப்பார்க்கினும் வேறு கிடைப்பது அரிது. அவர்க்கு ஈடுஆக வேறு எவரையும் கூறுதற்கில்லை.

சிவனே டொக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவனே டொப்பார் இங்கு யாவரும் இல்லை
புவனம் கடந்தன்று பொன்னொளி மின்னும்
தவனச் சடைமுடித் தாமரை யானே.

உலகினையே தம் பொன்னிற மின்னொளியில் திகைக்க வைக்கும் அதிசயப்பேரொளி படைத்த சடைமுடியானுக்கு வேறு எவர் இணை ஆக முடியும்? திருவடித் தாமரை எனப்பகர்வது அடியார் உலகம் ஈண்டு, ஐயனின்முக மண்டலத்தை அழகிய செந்தாமரையாகப் பேசுகிறார் திருமூலநாதர்.

எவ்வளவு வேண்டுமாயினும், இந்த இறையமுதினை அள்ளிப்பருகலாம்; தெவிட்டாத இன்னமுது இச்சிவானந்தச் சீரமுது. நம் தந்தையாகிய சிவபெருமானை – ஈடும் இணையும் அற்ற அற்புத அண்ணலை – ஊழி முதல்வனை எவ்வாறு ஆயினும் ஏத்தி இறைஞ்சுதல் வேண்டும்.

அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரி சீசன் அருள் பெறல் ஆமே.

அள்ளி வழங்குபவர் வள்ளல் ஆவர். சிவபெருமானோ அள்ளித்தருதலில் ஒப்புஇல்லாதவர். எனவே, அவரை எவ்வாறேனும் தொழுது ஏத்துமின் என்பது நமக்குத் திருமூலரின் அருளுரையாம் ஏனெனில், உடன் நமக்குக் கிடைத்தற்கரிய பரிசு ஆகிய சிவனார் திருவருள் கிட்டும். திருமந்திர நூல் ஆசிரியர் தனியொரு அன்போடு எம்பெருமானை இடையிடையில் நந்தி யென்றழைப்பார்.

மகேசுவரன், மக்கள் மனத்தை மதிப்பவர். அடியார் உளம் பொருந்தி இறைஞ்சினால், அவர் தம் இதயத்தையே கோயிலாய்க் குடி கொள்பவர் பரமசிவன். வாழ்த்தி வணங்குவோர் இதயத்தில் இருந்து சுடர் விடும் சோதிப்பிழம்பு ஆகிய எம்பெருமான் புண்ணியத் தீர்த்தங்கள் அனைத்திற்கும் உறைவிடமும் ஆவார். தீர்த்தங்களுக்குச் சிறப்பு ஊட்டுவது, அங்கெல்லாம் திகழும் பரமன் தானே?

அவரை என் ஐயனே என்று உறவு கலந்து அன்போடு அழைத்து, அவர் உள்ளத்தைக் குளிர வைத்து அவரது திருவருளை நாம் எளிதில் பெற்று விடலாம்.

வாழ்த்த வல்லார் மனத்துள்ளுறு சோதியைத்
தீர்த்தனை அங்கே திளைக்கின்ற தேவனை

ஏத்தியும் எம்பெருமான் என் றிறைஞ்சியும்
ஆத்தம் செய்தீசன் அருள் பெறலாமே.

ஈசனை உள்ளன்போடு விரும்பினுல், வந்து விடுவார் அவர். இதயத்தில் இடம் தந்தால். அமர்வார் வந்து ஐயனே என அழைக்க வேண்டும். அழைப்பின், எழுந்தருள்வார்.

இதயக் கோயிலில் எழுந்தருளும் ஈசனுக்குப் பூசனை உண்டா?
திருமூல நாயனுர் எளிய, இனிய வழிதனைப் பகர்கிருர்
புண்ணியம் வேண்டுமாயின், பூவுண்டு' நீருண்டு
எம்முடைய ஈசன் பெரிதாக ஏதும் கேட்பவர் அல்லர்!

இரண்டு பூவைக் கிள்ளிப் போட்டால் போதும்; இறைவன் உள்ளம் குளிர்ந்துவிடும். தூய நீரினுல் இலிங்கத்தை முழுக் காட்டவும் செய்யலாம். வேறு பெரிதாய் ஏதும் வேண்டாம் ஐயனுக்கு.

பூவினையும் நீரையும்கண்டு, அருள்புரிந்து விடுபவர் பரம சிவன். இதுகூட அறியாத பாவியர் உள்ளனரே எனத் திரு மூலர் தவிப்புத் தொனிக்கும் குரலில் பாடுகிருர்.

புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண்டருள் புரியா நிற்கும்
எண்ணலி பாவிகள் எம்மிறை ஈசனை
நண்ணறி யாமல் நழுவு கின்றுரே.

பூவையும் நீரையும் காட்டினுல் ஐயன் அது கண்டு அருள் சொரிவார். காட்டினுலேயே போதும் எம்பெருமானுக்கு. எண்ணற்ற பாவி மக்கள், எம்பெருமான் பரமேசுவரனைப் பற்றிய எண்ணமே சிறிதும் இராமல் எங்கோ நழுவிச்செல் கிருர்களே என்று இப்பா, நாயனுர் உள்ளத் திருப்புலம்பலாக ஒலிக்கிறது. இறைவனின் மீது எண்ணத்தைப் பொருந்தச் செய்யாது வழிதப்பிச் செல்கிருர்கள் எண்ணிலாத பாவியர், இறைவன் மீது எண்ணம் செலுத்தாத கீழோர்!

ஐயனை வழுத்தி வாழ வேண்டியவர்கள், வழிபிறந்தது வழுக்கி வீழ்கின்றோர்களே என்று,

யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்.

என ஊரும் உலகும் வழிகூற வந்த திருமூல நாயனுர் இங் கெல்லாம் நம்மைச் சேயினும் நல்லன், தாயினும் நல்லன், பொன் ஒளி மின்னும் பெருஞ்சுடர் ஆகிய அப்பனை, ஊழி முதல்வனை ஏத்தி அருள் பெறலாமே என்கிருர்,

———

சிவ சிவ

# கலைமகள் பஞ்சரத்தினம்

''தேவீதாசன்''

திரு: ஐ. கோ. இராமநாதன், அவர்கள்:

கோவை–7.

## கட்டளைக் கலித்துறை

(1) அரும்புபே ரன்பின் அடியவர் நின்சர ணாரவிந்தம்
சுரும்பென மொய்த்துரீங் காரமிட் டின்பமாம் சூழிபுக்கார்
பெருங்கமழ் வீசிப் பிரசம் ததும்பிப் பிறங்குதுங்கக்
கரும்பி லினிக்கும் பதந்தந் தெனையாள் கலைமகளே.

(2) ஆவி உடல்பொருள் யாவுநின் பூசனைக் கர்ப்பணித்தோர்
நாவில் உறநின் றனவர தங்கவி நால்வகையும்
ஓவில் மழையாப் பொழிய அவர்குளிர் உள்ளநறுங்
காவில் நடிக்குங் கலாபி எனையாள் கலைமகளே.

(3) ஒழுகிசை யாழ்குழல் தண்ணுமை பல்லிய ஒள்ளிசையில்
அழகிசை மேவி அவிரும் பலநுண் ணருங்கலையில்
பழகிசை வித்தகர்க் கென்றுநற் பாக்கியம் பாலிக்குநின்
கழலிசை பாடக் கடையேற் கருள்வாய் கலைமகளே.

4) சொஞ்சொற் புலவோர் தெவிட்டா அமிழ்துறழ் தீஞ்சுவைசால்
அஞ்சொற் கவிதை அவிசொரிந் தாற்றும் அருள்வேள்வியால்
நெஞ்சிற் களித்து நலமீந் தவர்வெண் ணிமலமனக்
கஞ்சத் துறைவாய் கடையேற் கருள்வாய் கலைமகளே.

(5) சந்தங் கொழிக்கும் செந்தமிழ்ப் பாடலாந் தாரணிந்தோய்
எந்தம் உளத்திலும் நாவிலும் என்றும் இருந்தருள்வாய்
அந்தம் இலபல் நலன்களும் ஆர்த்தி அருள்பொழிவாய்
கந்தம் கமழ்நின் கழல்தலை கொண்டேன் கலைமகளே.

---

**குறிப்புரை:**

(1) சுரும்பு–வண்டு: சூழி–நீர்ப்பரப்பு; கமழ்–மணம்; பிரசம்–தேன்; பிறங்கும்–விளங்கும்; துங்கம்–உயர்வு; பதம்–திருவடி.

(2) உள்ளம்–மனம்; நறும்–மணமிகுந்த; கா–சோலை: கலாபி–மயில்.

(3) தண்ணுமை–மத்தளம்; பல்லியம்–பல இசைக்கருவிகள்; ஒள்–சிறந்த; அவிரும்–விளங்கும்; வித்தகர்–திறனுடையோர்; பாலிக்கும்–வழங்கும்; கழல்–திருவடி.

(4) உறழ்–போன்ற; தீம்–இனிமை; அம்–அழகிய; வேள்வி–யாகம்; நிமல-மாசற்ற; வெண்கஞ்சம்–வெண்டாமரை.

(5) தார்–மாலை; ஆர்த்தி–நிறைவித்து; கந்தம்-மணம்; சந்தம்-இசை வகை.

சிவ சிவ]

# "கடமையும் உரிமையும்"

திரு: புலவர் தெ. முருகசாமி பி. ஓ. எல். அவர்கள்
இராமசாமி தமிழ்க் கல்லூரி
காரைக்குடி. 1

உலகின் உள்ளுறைப் பொருளாக உள்ள ஒருபரம் பொருள் உயிர்கட்குப் பல்லருளைக் கொடுப்பதா யிருப்பினும் உயிர்கள் அப்பரம் பொருளை அடைய வழிதேடிக் கொள்வது அவையவைகளின் கடமையாகும். இதைத்தான் 'தெய்வம் காட்டுமே தவிர ஊட்டாது' என்று நாட்டுப் புறத்தில் வழங்குவர். உணர்த்த ஒரு பொருளும் உணரும் ஒரு பொருளும் தனித் தனியான ஆயினும் உணர்த்த உணர்ந்த உயிர் நன்கு உணர்ந்ததும் உணர்த்திய பொருளின் தன்மையை அடைகின்றது. இதுவே சீவன் சிவத்தொடு கலத்தலாகும்.

வாழ்வில் காணப்படும் பல செயற்பாடுகள் பொருள்கள் நமக்குப் பல நிலைகளை உணர்த்துகின்றன. அவைகளை உணர்ந்து கொள்ளாதது நம்முடைய குற்றமன்றி அவைகளுடையன அன்று என்பது அருளாளர்கள் கண்ட வாழ்வியல் உண்மை. இவ்வடிப் படை உண்மையை அனுபவத்தில் கண்ட பட்டினத்தடிகள் கீழ்க்கண்டவாறு மக்கட்கு நன்கு உணர்த்திக் காட்டினர்.

மருதிடங் கொண்ட மருத வாண
நின்னது குற்றம் உளதோ! நின்னினைந்து
எண்ணருங் கோடி இடர்ப்பகை களைந்து
கண்ணுரு சீற்றத்துக் காலனை வதையா
இறப்பையும் பிறப்பையும் இகந்து சிறப்பொடு
தேவ ராவின் கன்றெனத் திரியாய்
பாவிகள் தமதே பாவம், யாதெனில்
முறியாப் புழுக்கல் முப்பழங் கலந்த
அறுசுவை யடிசில் அட்டினி திருப்பப்

புசியா தொருவன் பசியால் வருந்துதல்
அயினியின் குற்றம் அன்று, வெயிலின் வைத்து
ஆற்றிய தெண்ணீர் நாற்றமிட் டிருப்ப
மடாஅ வொருவன் விடாஅ வேட்கை
தெண்ணீர்க் குற்றம் அன்று, கண்ணகன்று
தேன்துளி, சிதறிப் பூந்துணர் துறுமி
வாலுகங் கிடந்த சோலை கிடப்ப
வெள்ளிடை வெயிலில் புள்ளிவெயர் பொடிப்ப
அடிபெயர்த் திடுவான் ஒருவன்
நெடிது வருந்துதல் நிழல்தீங் கன்றே.

திருவிடை மருதூரை இடமாகக் கொண்டு வாழும் இறைவனே, உன்னை நினைந்து பகை, எமன் போன்ற தீமைகளைக் களைந்து பிறப்பிறப்பை நீக்கிக் கொண்டு காமதேனுவின் கன்றுபோன்று எவ்விதக் கவலையின்றி உலாவி வரும் தன்மையறியாத மாந்தர்களை என்னென்பது? நீ உயிர்களுக்குச் செய்கின்ற அருளைப்புரிந்து கொள்ளாதது உயிர்களின் குற்றமன்றி உன்மீது குற்றம் அன்று, இக்கருத்தை மூன்று உவமைகளால் பட்டினத்தார் விளக்குகின்றார்.

உண்ணற்குரிய அறுசுவை உண்டி முக்கனியோடிருக்கவும் பசித்த ஒருவன் உண்ணாமலிருப்பானாயின் அது அவன் மீது குற்றமாகும். குளிர்ந்த நீரைநீங்காத நீர் வேட்கையுடையவன் பருகாமலிருப்பதும் சோலையின் நிழலிருக்க வெயிலில் நடந்து செல்வதும் அவனவனது குற்றமன்றி அப்பொருள்களின் குற்றமன்றாம். எளிமையான இவ்வுவமைகள் ஓர் உண்மையை உணர்த்துகின்றன. ஒருபொருளை அனுபவிக்க முடியாத நிலையிலிருந்து அனுபவிக்காமலிருப்பது சாதாரணமானது. ஆனால் அனுபவிக்கக் கூடிய நிலையிலிருந்தும் அனுபவிக்காமலிருப்ப தென்பது பாவம் மட்டுமன்றிப் பெருங் குற்றமும் ஆகும் என்பது பட்டினத்தார் கருத்து. எனவே அவரவர் செய்ய வேண்டிய கடவுளை உணரும் கடமையை உணர்ந்து வாழ்க்கை வாழ்வதற்கே என்ற தெய்வீக நெறிப்பட வாழக்கற்றுக் கொண்டு வாழ்வதே நல்லின்ப வாழ்வு என்பது பட்டினத்தாரின் வாழ்வியல் அனுபவம்.

இக்கடமை வாழ்வை நன்குணர்ந்த திருநாவுக்கரசர் புதிய கோணத்தில் கடமை வாழ்வை உலகிற்குணர்த்தினர்.

பயனைக் கருதாது கடமையைச் செய்வதே உயிரினத்தின் குறிக்கோள் என்பதைத் தெளிவாகக் கூறினர். அதையும் தம் மாட்டு ஏற்றிக் கூறும் முகத்தான்,

"தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே"

என்று உயிர்களுக்கு உணர்த்தினர், இதில் ஆண்டவனுடைய கடமை இன்னது என்றும் தம்முடைய கடமை இன்னது என்றும் வலியுறுத்துகின்றார். தம்முடைய கடமையைச் சொல்லி அக்கடமைக் குரிய பயனாக என்னைத் தாங்கிக் கொள்ள வேண்டும் என்பதாகக் கூறாமல் ஆண்டவனின் கடமை இன்னது எனநனி நாகரிகமாக நினைவுபடுத்துவதி லிருந்தே அப்பரின் எண்ணம் தெளிவாகின்றது. 'பயனைத் துற கடமையைச் செய்' என்பது கீதையின் உட்பொருள், கடமையைச் செய் உரிமை தானே வரும்' என்பது காந்தி யடிகளின் அருள்வாக்கு, எனவே பயனைத் துறந்த நிலையில் கடமையை வலியுறுத்தினர் அப்பரடிகள்.

'அடியேனையும் தாங்குதல்'

என்பதிலுள்ள உம்மையை இறந்தது தழீஇய எச்சவும்மை யாகக் கொண்டு பிறரை எல்லாம் ஆட்கொண்டது போல 'என்னையும் தாங்கிக் கொள்' என்று ஏங்கி நின்ற அப்பரின் நிலை தெரிகின்றது. மேலும் இவ்வும்மையை இழிவு சிறப்பு உம்மையாகக் கொண்டு புன்புலால் யாக்கையுடைய இழிந்த என்னையும் 'ஏன்றுகொள்' என்பதாக வேண்டினர் என்றும் அப்பரின் நிலையைக் கருதலாம். ஆனால் எது எங்ஙனமாயினும் ஆண்டவன் தனக்கு அருள் செய்வான் அதனால் கடமை செய்ய வேண்டும் என்பதாக இல்லாமல் தாம்தம் கடமையில் வழுவற நிற்பின் அக்கடமைக்குரிய உரிமைப் பயனை ஆண்ட வனிடம் போராடியும் பெற்றுக் கொள்ளமுடியும் என்ற தம் செயல் திறம் மாறுவீர உணர்வையே வெளிப்படுத்திக்காட்ட 'தன் கடன் அடியேனையும் தாங்குதல்' என்று விண்ணப்பித் துக் கொண்டார், எனலாம். ஏனெனில் இங்ஙனம் தம்கடமை யில் வழுவாமல் நின்று ஆண்டவனிடம் தம் கடமைக்குரிய உரிமையைப் போராடிக் கேட்டுப் பெறும் பழக்கம் அப்பரடி களுக்கு உண்டு, திருப்பாதிரிப்புலியூரில் கரையேறிய அவர்,

"கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா திரிப்புலி யூர்அரனே"

என்று பாடும் தேவாரப் பாட்டில் 'தருவாய் சிவகதி' என்பது கடமையின் உறைப்பை எடுத்துக் காட்டுவதாகும். தாம் செய்த கடமைக்கு விளம்பரம் தேடாத அப்பரடிகள் தம் கடமைக்குச் சிவகதியைத்தான் தரவேண்டும் என்று விலை பேசுகின்றார். அதுவும் சிவகதியாகிய பொருள்தான் தம்கடமைக்குரிய மதிப்பீடு என்று அறுதியிட்டு உறுதியாகச் சுட்டிக் கூறிவிட்ட படியால் ஆண்டவனும் அப்பரடிகளுக்குச் சிவகதியைத் தந்தே அவர்தம் கடமைகளை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலைக்குக் கட்டுபட்டவனாகி விட்டான். தாம் விரித்த கடமையாகிய வலையில் ஆண்டவனை விழும்படிச் செய்து விட்டார். கடமையில் மறவாத செந்திறம் உடையவர்க்கே இங்ஙனமாகிய வீரம் எழுவது இயற்கை, எனவே நாயகன் சேவடி தைவரும் சிந்தையரான அப்பரடிகள் கடப்பாட்டாளராகவும் உறைப்புடைத் தொண்டராகவும் இருந்தார் என்பதை அவர் தம் "என்கடன் பணி செய்து கிடப்பதுவே" என்ற தொடரால் நன்கறியலாம், இங்ஙனம் வாழ்வின் எல்லா நெறிகளிலும் மனிதன் கடமையை ஒழுங்குறச் செய்தால் உரிமையைத் தானாகப் பெறலாம் என்பது அருளாளர்கள் காட்டிய கடமையும் உரிமையும் ஆகும்.

———

## தமிழ்ப் பொங்கல் வாழ்த்து

கன்னல் கரத்தேந்திக் கற்கண்டுச் சொல்லெடுத்து
பின்னல் இடையொல்கும் தைப்பாவாய்!—அன்னமெனும்
நன்னெல் புதுவருவாய் மஞ்சளுடன் தந்துவந்த
கன்னித் தமிழ்ப்பொங்கல் வாழ்த்து.

—தெ. முருகசாமி.

சிவ சிவ]

# திருத்தொண்டத் தொகையும் சேக்கிழாரும்

பேராசிரியர், தொல்காப்பியச்செல்வர், பண்டித வித்துவான்
சைவப்புலவர் திரு: கு. சுந்தரமூர்த்தி எம். ஏ. அவர்கள்,
முதல்வர் செந்தமிழ்க் கல்லூரி
திருப்பனந்தாள்

பக்திச் சுவை நனிசொட்டச் சொட்டப் பாடிய கவிவலவர் சேக்கிழார். அடியவர்களைப் பற்றியும் அவர்கள் அருளிய அருள்மொழிகளைப் பற்றியும் குறிப்பிடும் பொழுதெல்லாம் அவர்தம் மன உருக்கமும் பக்தி மேம்பாடும் இனிது விளங்கக் காணலாம். இத்தகைய அருள்நலம் கெழுமிய சேக்கிழார் தம் நூலுக்கு மூலமான, முதனூலான திருத்தொண்டத் தொகையைப் பெரிதும் நுகர்ந்து அனுபவிக்கும் திறத்தைக் காண்பாம்.

மூலநூல்:- திருத்தொண்டர் மாக்கதையாகிய தம் நூலுக்குத் திருத்தொண்டத் தொகையே மூலநூல் என்பதை ஈரிடங்களில் குறிப்பிடுகின்றார்.

''மற்றிதற்குப் பதிகம் வன்தொண்டர் தாம்
புற்றிடத் தெம்புராணர் அருளினல்
சொற்ற மெய்த்திருத் தொண்டத் தொகைஎனப்
பெற்ற நற்பதிகம் தொழப் பெற்றதாம்''

என்பது முதலிடம் இங்கு மூலநூல் என்பதை மிகவும் பக்தி வினயம் தோன்ற ''திருத்தொண்டத் தொகையெனப்பெற்ற நற்பதிகம் தொழப் பெற்றதாம்'' என்றருளுகின்றார். பதிகம் என்பது பல்வகைப் பொருளையும் தொகுதியாகச் சொல்வதாகும். எனவே தொகை நூலாகிய திருத்தொண்டத் தொகையைத் தொழுது, அதற்கு விரிநூலாக இந்நூலை ஆக்குகின்றேன் என்பது கருத்து, இதனைப் பிறிதோரிடத்து விளக்கமாக,

''மூலமான திருத்தொண்டத் தொகைக்கு முதல்வராய் இந்த
ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பி''

எனக் குறிப்பிட்டருள்வர்,

**நுகர்ந்து அனுபவிக்குமாறு:-** சுந்தரர் இம்மண்ணுலகில் தோன்றியருளியமைக்குக் காரணம் இரண்டு என்பர் சேக்கிழார். ஒன்று மாதவம் செய்த தென்திசை நல்வாழ்வு பெறுவது. ஈண்டு நல்வாழ்வு பெறுதலென்பது வென்றிகொள் திருநீற்று ஒளியினில் விளங்கும் மேன்மையைப் பெறுவது ஆகும். இரண்டு, திருத்தொண்டத் தொகையை நம்மனோர் பெற்று உய்வதாகும், எனவே சுந்தரருக்குத் திருக்கயிலையில் கிடைத்த அனுபவம் நம்மனோர் பொருட்டே என்பது விளங்குகிறது.

''மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடத்
தீதிலாத் திருத்தொண்டத் தொகைதரப்
போதுவான் அவர்மேல் மனம் போக்கிடக்
காதல் மாதரும் காட்சியில் கண்ணினார்''

என்பது அவர் வாக்கு,

திருத்தொண்டத் தொகை செந்தமிழ் மொழிக்குக் கிடைத்த அரிய பேறுகளுள் ஒன்று என்றும்[1] அவ்வருள் நூல் உலகம் உய்ய, நாம் உய்ய சுந்தரரின் சைவநன்னெறியின் சீலம் உய்ய எழுந்தது என்றும்[2] ஈசன் அடியார் பெருமையினை எல்லா உயிரும் தொழுது உய்தற்காகவே அது எழுந்ததென்றும்[3] பல்லாற்றானும் போற்றி மகிழ்வர்.

**விளக்கம் தரும் மாண்பு:-** இங்ஙனம் போற்றி மகிழும் சேக்கிழார் திருத்தொண்டத் தொகையில் அமைந்துள்ள சிற்சில தொடர்களுக்கு அரிய விளக்கமும் தந்தருள்கின்றார்.

1. இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்-என்பது திருத்தொண்டத் தொகை நம்மறிவு கொண்டு இதற்கு உரை செய்யின் இல்லை என்று எஞ்ஞான்றும் சொல்லாத இயற்பகையார் என்ற அளவிலேயே உரை கூற இயலும். ஆனால் சேக்கிழார் இத்தொடரில் அமைந்த மூன்று சொற்களுக்கு அவ்வடியவரின் வரலாற்றை உளங்கொண்டு விளக்குகின்றார். யாருக்கு இல்லையென்னாது வழங்குபவர்? எதனை

---

1. ''தென் தமிழ்ப் பயனாயுள்ள திருத்தொண்டத்தொகை''
2. ''ஞாலம் உய்ய நாம் உய்ய நம்பி சைவ நன்னெறியின் சீலம் உய்யத் திருத்தொண்டத்தொகை முன்பாட''
3. ஈசன் அடியார் பெருமையினை எல்லா வுயிரும் தொழ எடுத்துத் தேசம் உய்யத் திருத்தொண்டத் தொகை முன்பணித்த திருவாளன்''

வழங்குபவர்? அவர் பெயர் இயற்பகையார் என வழங்கு தற்குக் காரணமென்ன? இம்மூன்று வினுக்களேயும் உளங் கொண்டு அவ்விளக்கம் அமைகின்றது. எவரேனும் தாமாக விலாடத்திட்ட திருநீறும் சாதனமும் கண்டால் அவர்களுக்கு வழங்குவர். அங்ஙனம் வழங்கப்படும் பொருள் பொன்னும் மண்ணும் மட்டுமன்று. அடியாராயினர் எதனே விரும்பினும் (தன் மனேயாளேயே விரும்பினும்) வழங்குவர். இங்ஙனம் அருள் தலேக்கொண்ட அவருக்குத் தம் ஆவியும் உடலும் உடைமையும் எல்லாம் வழங்குதல் பொருத்தமாக இருப்பி னும், உலகியல் கண்ணேட்டத்திற்கு அது மாருகவே இருக்கு மாதலின் உலகியலுக்கு அவர் செய்கை பகையாயிருத்தலின் அவர் இயற்பகையார் எனப்பெயர் பெற்ருர். எனவே அருள் நிகழ்ச்சியை உலகியல் நிகழ்ச்சியோடு ஒப்பிட்டுப் பார்ப்ப தும், உலகியல் கண்ணேட்டத்துடன் ஆராய்வதும் பிழையா கும் என்பது குறிப்பு. இவ்விளக்கத்தை உளத்தடக்கி அவ் வரலாற்றின் உள் நுழைகின்றபொழுது எத்தகைய பிணக் கும் ஏற்படக் காரணம் இல்லே. இவ்வரிய விளக்கம்

மிக்க சீரடியார்கள் யாரேனும் வேண்டும் யாவையும் இல்லே என்னுதே
இக்கடற்படி நிகழ முன்கொடுக்கும் இயல்பின் நின்றவர் உலகியற்
பகையார்

என்ற பாடற்பகுதியில் அமைந்து விளங்குகின்றது.

2. வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்— என்பது திருத்தொண்டத்தொகை. வெல்லுதலில் மிக வல் லமை உடையவர் மெய்ப்பொருளார் எனச் சொற்படு பொரு ளாக நாம் அறிந்து கொள்ள முடிகின்றது, ஆயினும் ஒரு வனே ஒருவன் அடுதலும் தொலேதலும் புதுவதன்றிவ் வுலகத் தியற்கை. ஆதலின் இத்தகைய மிக எளிய உடல்வலிமை யைக் கருதியோ ஈண்டு வெல்லுமா மிகவல்ல எனக் குறிப் பர்? இல்லே. இல்லே. உடல் வலிமை பலர்க்கும் அமைந்து விளங்கும், ஆனல் ஒழுக்க வலிமை மிகச் சிலர்க்கே அமை யும். ஆகவே மெய்ப்பொருளார் தம்முடன் பொரவந்த முத்த நாதனேத் தம்முடைய உடல் வலிமையால் தாமும் பொருது வென்றிருப்பாராயின் அது உலகியலில் எத் துணேயோ பேர்கள் பெரும் வென்றியில் ஒன்ருகக் கருதப்

பட்டிருக்கும். அங்ஙனம் செய்யாது மிகுதியால் மிக்கவை செய்த முத்தநாதனை மெய்ப்பொருளார் தாம் தம் தகுதியால் வென்றார். ஆதலின் இவ்வல்லமை பெரு வல்லமையாயிற்று; தகுதியுடைய வல்லமையுமாயிற்று. இவ்வரிய நுட்பத்தை,

> "..........தான்முன் நினைந்த அப்பரிசே செய்ய
> மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள் எனத்தொழுது வென்றார்"

3. நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கற்கும் அடியேன்—என்பது திருத்தொண்டத் தொகை, தண்டியடிகள் என்பார் இயல்பாகவே முகத்தில் கண்கொண்டு காணும் இயல்பில்லாதவர். அங்ஙனமாகவும் அவரை 'நாட்டமிகு தண்டி' எனக் குறிக்கின்றார் சுந்தரர். உலகியல்பில் இங்ஙனம் கூறின் எள்ளல் பற்றி வந்த நகையாகும். ஆனால் இங்கு அந்நிலையன்று. அங்ஙனமாயின் இதன் உண்மைப்பொருளென்ன? முகத்தில் கண்கொண்டு காண்பவர்கள் எல்லாம் கண்ணிருந்தும் அதனால் காணவேண்டிய காட்சியைக் காணவில்லை. காணவேண்டாததைக் கண்டும் கருதவேண்டாததைக் கருதியும் பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றார்கள். ஆனால் தண்டியகளோ புறக்கண் இல்லாதிருந்தும் அகக்கண்ணால் காணவேண்டுவதைக் கண்டும், கருத வேண்டுவதைக் கருதியும், உன்னும் மனத்தால் அஞ்செழுத்தும் ஓதி வழுவாது ஒழுகி மின்னுஞ் சடையார் அடிநீழல் அடைந்தவர் ஆயினர். எனவேதான் அகநாட்டம் மிகுந்து அதனால் பெறும் பயனையும் அடைந்த தண்டியடிகளை 'நாட்ட மிகு தண்டி' என்றார் எனச் சேக்கிழார் பெருமான் விளக்குகின்றார்.

> "............ஆடும் செம்பொற்கழல் மனத்துக்
> கொண்ட கருத்தின் அகநோக்குங் குறிப்பேயன்றிப் புறநோக்கும்
> கண்ட உணர்வு துறந்தார் போல் பிறந்த பொழுதே கண்காணார்"

என்பது அவர் திருவாக்கு.

இங்ஙனம் சேக்கிழாரின் திருவுள்ளத்தை ஈர்த்து ஆட்கொண்ட திருத்தொண்டத்தொகை, இடைக் காலத்தே வாழ்ந்த சைவ நன் மக்களின் உள்ளங்களையும் ஆட்கொண்டிருந்தது. அதன் பயனாக, இந்நூலின் பெயரால் 'திருத்தொண்டத் தொகையான் குகை' என்றும், 'திருத்தொண்டத்

தொகையான் திருமடம்' என்றும், திருத்தொண்டத் தொகையீச்வரம்' என்றும் குகையும், மடமும், திருக்கோவிலும் எழலாயின. மாசித் திருநாளில் தில்லையில் திருத்தொண்டத் தொகை விண்ணப்பம் செய்வார்க்கு ஐந்து கழஞ்சு நிபந்தம் அளித்ததாகத் தில்லைக் கல்வெட்டு ஒன்று கூறுகின்றது.

இத்திருத்தொண்டத் தொகையின் நினைவு மீண்டும் சைவ நன்மக்களின் திருவுள்ளத்தில் நின்று நிலைத்து வளரத் திருவருள் கூட்டுவிக்குமாக!

வையம் நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான் தழைத்து ஓங்குக
தெய்வ வெண் திருநீறு சிறக்கவே!

---

## ★ முருகா! எப்படிப் பாடுவேன்? ★

**திரு: B. சீனிவாசன் அவர்கள்**
ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் தொடக்கப்பள்ளி: [ஆசிரியர்]
திருலோக்கி.

தித்திக்கும் தேன்தமிழால் உன்திருப் புகழ்பாடி
எத்திக்கும் புகழ்மணக்கச் செய்தனன்காண் அருணகிரி.
அருட்பாவைத் தானருளி அருள்வள்ளல் ராமலிங்கர்
பொருட்பாவைத் தானுணர்ந்து புகழ்மாலை முன்பணிந்தார்.
தெள்ளு தமிழினிலே பிள்ளைத் தமிழ்பாடி
அள்ளி மிகவுண்டார் அருள்எங்கள் குமரகுரு.
இப்படிப் பாடியபின் ஏரகனே உன்னருளை
எப்படிப் பாடிடுவேன் ஏழை எனக்கருள்வாய்.

# தெய்வப் புலவர் காணும் சமயம்

திரு. டா, சொக்கலிங்கம் அவர்கள்,
சென்னை–24.

———

சமயமும் தமிழும் ஒன்றோடு ஒன்றிப் பிணைந்தன; உடலும் உயிரும்போல் ஒன்றி இயங்குவன; தமிழ்மொழி எனும் ஒளிநிறைந்த மணிமாலையூடே சமயமெனும் நூல் ஊடுருவி நிற்பது; இவ்வுண்மை முன்னைப் பழமைக்கும் பின்னைப் புதுமைக்கும் புதுமையான பெரும்பான்மையான நூல்களிலே காணலாம்; சங்ககால இலக்கியங்கள் அகம் புறமென இம்மைப் பொருட்களையே பெரிதும் தழுவி நின்றன; எனினும் பத்துப்பாட்டும், எட்டுத் தொகையும், பதினெண் கீழ்க் கணக்கு, மேற்கணக்கு, ஐம்பெருங்காவியங்கள், ஐஞ்சிறு காப்பியங்கள் ஆகிய நூல்கள் அனைத்திலும் சமய நறுமணம் வெவ்வேறு வகையில் கமழக் காணலாம்; முல்லை நறுமணம் போல, மல்லிகை மணம் போல. குறிஞ்சி மலரின் ஒப்பிலா இனிய மணம் போல, தண்டாமரை மலரின் நறிய மெல்லிய மணம்போல, சைவம், வைணவம், சமணம், சாக்கியம், கிருத்தவம், இஸ்லாம் போன்ற பல்வகைச் சமய மணங்கள் தமிழ் இலக்கியத்தே மிக்கும் குறைந்தும் வீசக் காணலாம்.

காலத்தால் மிகவும் முற்பட்டவரெனவும், சங்க காலத்திற்குப் பிற்பட்டவரெனவும், காவிய காலத்தையும் கடந்தவரெனவும் பல்வேறு வகையில் கருதப்படும் வள்ளுவரின் திருக்குறளும் இதற்கு விலக்கன்று.

திருமுருகாற்றுப் படைபோன்றோ, பரிபாடலின் சில பாடல்கள் போன்றோ, சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி போன்ற காவியங்கள் போன்றோ, பெரிய புராணம், கம்பராமாயணம், தேவார திருவாசகம், தேம்பாவணி, சீறுப்புராணம் முதலிய பிற்கால இலக்கியங்கள் போன்றோ முற்றிலும் சமயக் கருத்துக்களைக் கூற எழுந்ததன்று திருக்குறள் என்பது உண்மை. எனினும் திருக்குறளுக்கும் சமயக் கருத்துக்கும் தொடர்பில்லை என்று கூறுவது பொருத்தமற்ற

கூற்ருகும்; திருவள்ளுவர் சமய உணர்வுடையவரென்பதற்கு அவரது நூலே சிறந்த சான்று பகரும். வள்ளுவனுர் இறையுணர்ச்சியுடையவர், இறைவன் ஒருவன் உண்டு என்பதில் உறுதியான உள்ளம் படைத்தவர் என்பதனை அவரது நூலின் பாக்கள்பல நன்கு எடுத்துக் காட்டுகின்றன; ஆயினும் அவர் எச்சமயத்தைச் சார்ந்தவர் என்பதை அறுதியிட்டுக் கூறல் அரிது; எனினும் உலகியற்றிய இறைவன் ஒருவன் உண்டு என்பதில் ஆழ்ந்த நம்பிக்கையுடையவர் அவர் என்பதில் என்னளவும் ஐயமில்லை; இதை எண்ணியே பழந்தமிழ்ப் புலவர்,

"ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்
அன்றென்ப ஆறு சமயத்தார் – நன்றென
எப்பாலவரும் இயைபவே வள்ளுவனுர்
முப்பால் மொழிந்த மொழி"

என்று பாடினுர்.

சைவசமய நூலாகிய கல்லாடம் வள்ளுவரைச்

"சமயக் கணக்கர் மதிவழி கூருது
உலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவன்"

எனக் குறிப்பிடுகிறது. சமயக் கணக்கர் மதிவழி வள்ளுவர் செல்லவில்லை என்பது ஓரளவு உண்மையெனினும் அவர் சமயம் சார்ந்தவர் என்பதில் ஐயமில்லை. திருக்குறள் பாயிரத்திலே முதல் அதிகாரமாக விளங்குவது கடவுள் வாழ்த்து, இதனை வள்ளுவர் ஆக்கவில்லை என வாதாடுவார் உண்டு; ஆனல் வாழையடி வாழையாக வள்ளுவர் நூலிலே இது முதலில் அமைந்திருக்கிறதென்பதை மறைக்கவோ மறுக்கவோ இயலாது. இக்கடவுள் வாழ்த்தில் முதற்கண்

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

என்னும் குறள் அமைந்திருக்கிறது.

'அ' என்ற எழுத்தை எழுத்துக்கள் அனைத்தும் தலைமையாகக் கொண்டுள்ளன. அஃதொப்பக் கடவுளைத் தலைமையாக உலகம் கொண்டுள்ளது என்பது இக்குறளின் பருப்

பொருள்; எனவே உலகிற்குத் தலைமையாய் ஒரு பொருள் உண்டு என்பது வள்ளுவர் கருத்தென்பதை, இக்குறள் நன்கு வலியுறுத்துகிறது. அன்றியும் மற்றோர் குறளில் 'பரந்து கெடுக உலகியற்றியான்' எனக் குறிப்பிடுவதிலிருந்து உலகை ஆக்கிய தலைவன் ஒருவன் உளன் என்னும் உணர்வுடையவர் வள்ளுவர் என்பதை அறியலாம்.

கடவுள் வாழ்த்து அதிகாரத்தே வரும் மூதற்குறள் உலகிற்குத் தலைவன் ஒருவன் உண்டு என்பதனை உணர்த்தியது போலக் குணங்குறி கடந்த அவனது குணவியல்புகள், அருட் செயல்கள் போன்றவற்றை ஏனைய குறட்பாக்கள் கூறுகின்றன.

வாலறிவன், மலர்மிசை ஏகினான், வேண்டுதல் வேண்டாமையிலான், பொறிவாயில் ஐந்தவித்தான், தனக்குவமையில்லாதான், அறவாழி அந்தணன், எண்குணத்தான் எனக்குணங்களைச் சுட்டுவதனோடு அமையாது அவன்எங்கும் தங்கியவன் என்ற இயல்பை இவ்வதிகார ஐந்தாம் குறட்பாவிலும், இறுதிப் பாவிலும் 'இறைவன்' என்றசொல்லால் இறுதி அழகுறக் கூறுகிறார்; வள்ளுவர் இறைத் தன்மையை ஒப்புக்கொண்டது மட்டுமன்றி அவனுக்கோர் உருவத்தையும் கண்டார்போலும்! இல்லையேல் 'மாண் அடி' 'இலான் அடி' 'தாள் சேர்ந்தார்' 'என்குணத்தான் தாள்' 'இறைவனடி' எனஅவர் கூறியிரார்; அன்றியும் அவன் இயங்கும் செயலை 'மலர்மிசை ஏகினான்' எனவும் குறிப்பிடுகிறார் 'அன்பால் நினைவாரது உள்ளக்கமலத்தின் கண் நினைந்த வடிவொடு விரைந்து சேறலின் 'ஏகினான்' என இறந்த காலத்தாற் கூறினார்' எனப் பரிமேலழகர் மலர்மிசை ஏகினான் என்ற தொடருக்குப் பொருள் வரைந்திருப்பதும் சிந்திக்கத் தக்கது, பிறிதோரிடத்து வள்ளுவனார். இவ்விறைவனைப் பற்றற்றான் எனவும் சுட்டுகிறார்.

இறைவன் என்ற சொல்லால் மட்டுமன்றித் 'தெய்வம்' எனும் சொல்லாலும் கடவுளைத் திருவள்ளுவர் குறிப்பிடல் காணலாம்: 'தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்' என்றஇடத்தும் 'தென்புலத்தார் தெய்வம்' 'வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' என்ற இடங்களிலும் தெய்

வம் என்ற சொல்லை ஆண்டுள்ளார்: 'தெய்வம்' என்பதுபழந் தமிழ் இலக்கணமாய தொல்காப்பியத்தே பலவிடங்களிலே பயின்ற சொல்லாகும். 'தெய்வம் உணவே' எனக்குறிப்பிடும் தொல்காப்பியர் 'பால் வரை தெய்வம்' என ஊழைவகுக்கும் தெய்வத்தையும் கூறுகிறார் போலும்!

தொல்காப்பியத்தே நிலங்களுக்குரிய தெய்வங்கள் கூறப் படுகின்றன.

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"

என்பது தொல்காப்பியம், முல்லை நிலத்தின் தலைவனாகிய மாயோன் திருமாலெனப்பட்டான்: 'மாயோயே மாயோயே' என்பது பரிபாடல். இத் திருமாலாகிய தெய்வம் தாமரைக் கண்ணையுடைய தெனவும், இவன் வாழுலகம் இன்பம் நிறைந்ததெனவும் கருதப்பட்டது. தம்மை விரும்புவராய்த் தம்மால் விரும்பப்பட்டாரா யுள்ள மெல்லியலார் தோளிலே துய்க்கும் இன்பம் பெரிதென்பது இன்ப நூலுணர்வார் கூற்று; இதனினும் தாமரைக் கண்ணனாகிய திருமால் உல கத்தே எய்தும்இன்பம் பெரிதாமோ எனவினவுவார் போலத்,

"தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு?"

எனக்கூறும் குறட்பாவிலே வள்ளுவனார் திருமாலைக் கூறு கிறார் என்பது தெளிவாகின்றது.

திருமாலேயன்றி விண்ணவர் வேந்தனாகிய தேவேந்திர னையும் திருவள்ளுவர் சுட்டுகிறார். இந்திரன் வானவர் தலை வனெனவும் ஐம்புலன் இன்பங்களையும் ஆரத்துய்ப் பவனென வும் வழங்கப்பட்ட கருத்தை வள்ளுவனார் ஏற்றுத் தம பாவிலே,

"ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்புளார் கோமான்
இந்திரனே சாலும் கரி"

எனக் குறிப்பிடுகிறார்.

தெய்வங்களைக் கூறுவதோடு அமையாது தெய்வங்கள் உறையும் பல்வேறு உலகங்களையும் சமயத்தார் கூறும்சுவர்க்க நரகங்களையும் வள்ளுவர் சொல்லுவது சிந்திக்கத் தக்கது.

"தாமரைக் கண்ணான் உலகு"

எனத் திருமாலின் உலகம் சொல்லப்படுகிறது; 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்' என்ற குறளில் தெய்வம் வானில் உறைவது என்னும் கருத்து விளக்கப்படுகிறது. வானவர்கள் வாழும் உலகத் தினும் மேலாய ஒருலகம் உண்டென்பதை,

'யான்எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்'

என்ற குறளால் குறிப்பிடுகிறார். இன்னும் இதற்கும் மேலாய உலகம் ஒன்றை,

'உரன்என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரன்என்னும் வைப்பிற்கோர் வித்து'

என்ற பாவிலே கூறக் காண்கிறோம்: இவை தவிர மண்ணு லகை நீத்தார் தாம் செய்த வினைக்கேற்ப பயனைப் பெறுதற்கு முன்னர் வாழுமிடம் ஒன்று உண்டு. அது தென்புலம் எனப் படும்; அங்கு வாழ்வார் தென்புலத்தார் என அழைக்கப்பட் டனர் என்ற கருத்தையும் திருவள்ளுவர்,

'தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான்என்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை'

என்ற குறட்பாவால் விளக்குகிறார்.

நல்வினை செய்தார் நல்லுலகாகிய அமரருலகத்தைசுவர்க் கத்தை அடைவர். அல்லாதார் துன்பம் நிறைந்த இருள் கவிந்த-நரகத்தை அடைவர் என்றும் வள்ளுவர் கூறுகிறார்.

'அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்'

என்னும் பாவிலே அமரருலகும் நரகமும்சுட்டப்படுகின்றன. 'ஊன் உண்ண அண்ணாத்தல் செய்யாது அளறு' எனப் பிறி தோரிடத்தே நரகத்தை 'அளறு என்னும் சொல்லால் குறிக் கிறார்.

சமயவாதிகள் அனைவரும் நல்வினை தீவினை, இறப்பு, பிறப்பு முற்பிறப்பு, பிற்பிறப்பு, போன்றவற்றிலே நம்பிக்கை யுடையவராவர். வள்ளுவரும் இத்தகைய கருத்தையே கொண்டவராதல் வேண்டும். பிறப்பு ஒன்றல்ல, எழுமை எழுபிறப்பு என்று எழு பிறப்பைச் சுட்டிய வள்ளுவனூர் அதைப் பிறவிப் பெருங்கடல் என்று கூறுவது எண்ணத்தக் கது. 'ஒருமையுள் தான் கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப்புடைத்து' என்னும் குறளும் எழுபிறப்பை வற்புறுத் தல் காண்கிறோம்.

திருமாலின் அவதாரங்கள் பலவற்றை நம் இலக்கியங் களிலே காண்கிறோம். அவற்றுள் வாமன அவதாரமும்ஒன்று. அவன் மூவுலகையும் தன் திருவடிகளால் அளந்த நிகழ்ச்சியை,

'மூவுலகும் ஈரடியால் முறைநிரம்பா வகைமுடிய
தாவிய சேவடி சேப்ப'

என இளங்கோவடிகள் பாடுகிறார், இக்கருத்து,

'மடியிலா மன்னவன் எய்தும் அடிஅளந்தான்
தாஅயது எல்லாம் ஒருங்கு'

என்னும் வள்ளுவர் வாக்கிலே மிளிர்கிறது,

அண்ட பகிரண்டங்களையெல்லாம் காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடும் தலைவன் ஒருவன் உண்டென வள்ளுவ ஞர் உறுதியாக எண்ணியமையாலேயே மண்ணுலகைக் காக் கும் மன்னனையும் இறை என்ற சொல்லால் வள்ளுவர் உணர்த்துகிறார்.

'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்'

என்பது அவர் வாக்கு,

வைணவ சமயத்தே கூறப்படும் திருமகள் செல்வத்தின் தெய்வமாக – தலைவியாக எண்ணப்படுகிறாள் அவள் செந்தா மரை மலரிலே வீற்றிருப்பவள் என்ற எண்ணமும் நிலவியது; இக்கருத்து,

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# 'தேனூறு கிளவிக்கு வாயூறி நின்றவன்'

திரு: மு. வைத்தியநாதன் Bsc, BEd அவர்கள்;
அரசினர் ஆண்கள் உயர்நிலைப்பள்ளி
திருக்கோயிலூர் (தெ. ஆ. மாவட்டம்)

—

தமிழகத்தின் தனிப்பெரும் தெய்வம் முருகன். உலகம் உய்ய அவதாரம்செய்தஅவன், கலியுகவரதன்; கார்த்திகேயன் அடியார்க்கும் அடியவன்; வெற்றிவேல் முருகன்; வாக்கிற் கருணகிரியை ஆட்கொண்ட வள்ளல். அவன் முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்பவன். சங்கத் தமிழின் தலைமைப் புலவன், கற்பு நெறிக்குத் தெய்வ யானையையும், களவு நெறிக்கு வள்ளியம்மையையும் கடிமணம் புரிந்து, அகப் பொருள் இலக்கணத்திற்கு ஓர் இலக்கியமாகத் திகழ்பவன் முருகன். வள்ளியம்மையின் பால் அதிக ஈடுபாடு உடையவன் வள்ளியின் பால் உண்டான காதல் திறத்தினை ஈண்டு நோக்குவோம்.

கந்தப் பெருமானின் பெருமையை அறியாதார் யார் உளர்? தேவர்களும், முனிவர்களும், மும்மூர்த்திகளும் முருகப் பெருமானை வணங்குவர். கொற்றவையின் சிறுவனை வெற்றிவேல் முருகன் சேனதிபதிக் கடவுள் அன்றோ! வேதங்களும் விண்ணவர்களும் அவனது பாதங்களை என்றும் வணங்

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

'மடியுளாள் மாமுகடி என்ப; மடியிலான்
தாளுளாள் தாமரை யினுள்'

என்ற பாடலிலே மிளிரக் காணலாம்.

எனவே திருக்குறள் சமயம் விளக்க வந்த நூலன்றாயினும், வள்ளுவர் சமயவுணர்வுடையவர்; இறைவன் ஒருவன் உண்டு என்னும் எண்ணமுடையவர். முற்பிறப்பு–பிற் பிறப்பு, சுவர்க்கம், நரகம், பேரின்பமாகிய முத்தி முதலியவற்றில் நம்பிக்கையுடையவர் என்ற உண்மைகளை அவரது குறட்பாக்கள் நமக்குக் கூறுகின்றன.

குவர். இதனை அருணகிரியார் 'வேதா முதல் விண்ணவர் சூடு மலர்ப்பாதா! குறமின் பதசேகரனே!' என்று அனுபூதியில் இயம்புகின்றார். அதுமட்டுமா? 'நாதா, குமரா, நம என்று அரனார்' வாய் புதைத்து நின்று, 'ஓதாய்' என்று கூற. ஓம் என்ற பிரணவத்தின் பொருள் உரைத்தவன். அதனால் அன்றோ அவனைத் தகப்பன் சாமி என்கின்றனர். பிரணவத்தின் உண்மை புகன்றிலையால் சிட்டித் தொழில் அதனைச் செய்வது எங்ஙனம்' என்று பிரம்மனைக் குட்டிச் சிறைவைத்தவன். இவ்வாறு வேதங்களும், தேவர்களும் மும்முதற் கடவுளும் அடி தொழும் பேறு பெற்றவன் 'ஆசைப்பட்டே நல்காவல் செய் வேடிச்சிக்காக மாமயில் ஆகிப் பொற்பாதமே பணியும்' திறத்தை என்னென்பது!

வள்ளி என்னும் கன்னிக்காகப் பல இன்னல்களையெல்லாம் அனுபவித்தவன் முருகன். வேங்கை மரமாகவும், வயோதிகனாகவும், வளைவிற்கும்செட்டியாகவும் வேடமிட்டு,வள்ளியின் ஒரு சொல்லுக்காக ஏங்கியிருந்தான். அவளிடமிருந்து ஒரு வார்த்தை கிடைக்காதா என ஏங்குகின்றான். அதனைப் பெற அவளிடத்தில் யாசிக்கின்றான். இதனை அருணகிரியார்,

> 'மரகத மணிப்பணியின் அணிதழை உடுத்துலவும்
> வனசரர் கொடிச்சிதனை யாசிக்கும் யாசகன்'

என்கின்றார் அதற்காக, மலை, காடெல்லாம் கடந்து வீரமிக்க வேடர்களின் காவலையும் கடந்து வள்ளியம்மையை அடைந்தான் என்பதனைத்,

> 'தினைவேடர் காவல்தங்கு மலைகாடெல்லாம் உழன்று
> சிறுபேதை கால்பணிந்த குமரேசா'

என்ற அருணகிரியாரின் பாடலால் அறியலாம். தன்னிடத்தே உள்ள ஆறுமுகங்களில் ஒரு முகத்தை வள்ளிக்காகவே பெற்றுள்ளான் என்பதை 'வள்ளியை மணம்புணர வந்த முகம் ஒன்று' என்பதாலும், 'ஒரு முகம் குறவர் மடமகள் கொடி போல் நுசுப்பின் மடவரல் வள்ளியொடு நகையமர்ந்தன்றே' என்ற திருமுருகாற்றுப் படையில் வரும் அடிகளாலும் தெளியலாம் அன்றோ!

இம்மட்டோ! தனக்குக் குற்றேவல் செய்யஆயிரமாயிரம் தேவர்களும், முனிவர்களும் காத்துக் கிடக்க, வள்ளிபிராட்டி

யாரின் குற்றேவலுக்காக முருகப் பெருமான் காத்துக் கிடக்கும் திறத்தை என்னென்பது! அவளது குறிப்பறிந்து, அவள் இடும் குற்றேவல்களை முழுவதும் ஆற்றி அவளிடமிருந்து ஒரு சொல்லுக்காகக் காத்துக் கிடக்கும் செயலை எப்படிச் சொல்வது! வள்ளியின் வாய்ச் சொல்லுக்காக ஏங்கும் பெருமான் அவளைப் பலவகையாக உவப்பிக்கின்ற செய்தியைத்,

"தொடங்குங் குறப்பாவை கற்றைக் குழற்ககிற்
றூமமொடு தாமமிட்டுச்
சுடிகைநுதல் வெயர்வுந் துடைத்தொழுகு கத்தூரி
தூரியங் கொண்டு தீட்டிக்
குடங்கைக்கடங்கா நெடுங்கட் கடைக்கழகு
கூரவஞ் சனமெழுதிமென்
கொங்கைத்தடத்துப் பசுங்களப மப்பியவள்
குற்றேவன் முற்றுமாற்றித்
தடங்குங்குமயப்புயங் கொட்டி நடமிட்டவன்"

என்று குமரகுருபர சுவாமிகள் அழகுறக் கூறுதலைக் காண்க.

இவ்வாறு முருகப் பெருமான் தேவர்களாலும், முனிவர்களாலும், வேதங்களாலும் போற்றி வணங்கப் படுபவன். மும்மூர்த்திகளும் போற்றும் முத்தமிழ் வித்தகன். அப்படிப் போற்றப்படும் முருகன், வள்ளியின் ஒரு சொல்லுக்காக, அவள் இடும் குற்றேவலுக்காகக் காத்துக் கிடக்கின்றான் எனில், வள்ளியம்மையின்பால் அவனது ஈடுபாடு எத்தன்மையது என்பதை உணரலாம் அன்றோ! முருகப் பெருமானின் உயர்வையும், வள்ளியம்மையின் வார்த்தைக்காக வாயூறி நின்ற திறத்தையும் குமரகுருபர சுவாமிகள் அழகுற எடுத்தியம்பிய பாடல் போற்றற்குரியது. இதோ அப்பாடல்!

'மீனேறு குண்டகழி தீவாய் மடுத்ததனி
வில்லியா ரிள வலோடும்
விதிமுறை வணங்கச் சடாயுபுரி யிற்கருணை
வெள்ளமென வீற்றிருக்கும்
ஆனேறு றுயர்த்திட்ட வையற்கு மம்மைக்கும்
அருமருந்தாகி நின்ற
ஆதிப்பிரானென்று மும்முதற்கடவுளும்
அடித்தொழும் பாற்றமாற்றக்
கூனேறு மதிநுதற் றெய்வக் குறப்பெண்
குறிப்பறிந் தருகணைந்துன்

குற்றேவல்செய்யக் கடைக்கண் பணிக்கெனக்
குறையிரந் தவடொண்டைவாய்த்
தேனூறு கிளவிக்கு வாயூறி நின்றவன்
செங்கீரை ஆடியருளே.
செத்துப் பிறக்கின்ற தெய்வங்கண் மணவாள
செங்கீரை ஆடியருளே.''

இதுகாறும் கூறியவற்றிலிருந்து முருகப் பெருமானின் சிறப்புகளையும், அப்பெருமான் வள்ளியம்மையின்பால் கொண்டுள்ள பேரன்பினையும் நாம் அறியலாம் அன்றோ! எனவே அவனருளாலே அவன்தாள் வணங்கி அவனது பேரருளைப் பெறுவோமாக!

''திணியான மனோசிலை மீதுனதாள்
அணியார் அரவிந்தம் அரும்பு மதோ!
'பணியா?' என வள்ளிபதம் பணியும்
தணியா அதிமோக 'தயாபரனே!''

———


## " ஞானசம்பந்தம் "

**அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு**

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருகிறது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பி வைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்'

உள்நாடு ரூ. 5–00　　　　வெளிநாடு ரூ. 7-00

செயலாளர், '' ஞானசம்பந்தம்'' அச்சகம் ''
தருமபுரம், மாயூரம் P. O.

[சிவ சிவ]

# வாழ்க்கைத் துணை

'சொஞ்சொற் கவிமணி'
திரு: புலவர்: மா. வேங்கடேசன் அவர்கள்,
பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி [தமிழாசிரியர்]
காஞ்சிபுரம்–1

---

உலகில் மானிடப்பிறவியே மிக்க சிறப்புடையது என்பது ஆன்றோர் கொள்கை. காரணம்: இப்பிறவியில்தான் உயிர்கள் நன்மை, தீமைகளைப் பகுத்துணர்ந்து, தீமைகளை விலக்கி நன்மைகளைச் செய்யும் வாய்ப்பைப் பெற்றுள்ளன. இங்ஙனம் மக்கள் செய்யத்தக்க நன்மைகளைப் புண்ணியம் அல்லது அறம் என்று கூறுவர். இதனை ஆரியத்துள் பிரமசரியம் முதலான வாழ்க்கை நிலைகளுக்கேற்ப நான்காகப் பகுத்துக் கூறியுள்ளனர். ஆனால் நம் வள்ளுவப் பெருந்தகை அந்நான்கையும் இல்லறம், துறவறம் என இரண்டில் அடக்கிக் காட்டியுள்ளார்.

இவ்விரு வகை அறங்களுள் இல்லறம் என்பது இல்லத்திலிருந்து செய்யப்படும் அறம். அது தென்புலத்தார் தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்னும் ஐம்புலத்தாரையும் உபசரித்தல் முதலாகப் பலவகைப் படும். இத்தகைய இல்லறத்தைக் கணவன், மனைவி என்ற நிலையில் ஒருவனும் ஒருத்தியும் சேர்ந்தே நடத்த முடியும். மனைவியன்றிக் கணவன் மட்டுமோ இதனை நடத்த வியலாது.

கோவலன் பிரிந்து சென்றபின் தனித்து வாழ்ந்த கண்ணகி இல்லறம் புரியும் தகுதியின்றி வருந்தியதைப் பின்னர் தானே தன் கணவனிடம் கூறுகின்றார்.

''அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை......''

[–சிலப்; கொலைக்களக் காதை: 71–73]

என்பது அவளது துயருரை இவ்வாறே பிரமசரிய நிலையைப் பூர்த்தி செய்து இல்வாழ்வைத் தொடங்க விரும்பிய 'தருமி' என்போன், இல்லாளின் துணையின்றி அதனை ஆற்றமுடியாத தன்மையை எண்ணி வருந்தி அத்தகைய இல்லாளைப் பெறும் திருமணத்திற்குப் பொருளுக்காகச் சொக்கநாதப் பெருமானிடம் முறையிடுவதைத் திருவிளையாடல் தெரிவிக்கின்றது இவற்றால் கணவன் மனைவியருள் ஒருவர் மற்றவர் இன்றி இல்லறம் ஆற்றவியலாது என்பது தெளிவாகிறது.

இங்ஙனம் இவ்விருவரது ஒருங்கிணைந்த முயற்சியாலேயே இல்லறம் நடைபெறுமாயினும் அவ்வாழ்க்கையைத் தலைமையேற்று நடத்தும் பொறுப்பு கணவனுக்கே உரியது. அவனது முயற்சி வெற்றியுற உற்றதுணையாக இருந்து உதவி புரியவேண்டியது மனைவியின் கடமையாகும். அதனாற்றான் வள்ளுவர் முதலான சான்றோர் 'வாழ்க்கைத்துணை' என்று மனைவியைக் குறிப்பாராயினர். இவ்வாறு மனைவி வாழ்க்கைத்துணைவியாகவும் கணவன் முதல்வனாகவும் இருந்தே இல்வாழ்க்கை நடத்த வேண்டியுள்ளது. இதன் காரணம் யாது? அதனையும் சிறிது ஆய்வோம்.

இவ்வுலக வாழ்க்கை பொருளையே அடியாகக்கொண்டு நடைபெறுவது. 'பொருளிலார்க்கு இவ்வுலகு இல்லை' என்பது பொய்யாமொழி. இத்தகைய பொருளை ஈட்ட அரிய முயற்சியும் கடின உழைப்பும் வேண்டும். ஈட்டிய பொருளையும், மனைவி மக்கள் முதலிய சுற்றத்தாரையும் பகைவர் முதலியவர்களிடமிருந்து பாதுகாக்க வேண்டும். மேலும் எத்தகைய இடர்வரினும் வாழ்க்கையைத் தளராது நடத்தும் உரம் வேண்டும். இவற்றிற்கெல்லாம் வன்மை வாய்ந்த உடலும் திண்மை சான்ற உளமும் தேவை. இவ்விரண்டும் ஆடவர்க்கே இயற்கையாக வாய்த்துள்ளன. 'ஆண்மை' என்பது ஆளும் தன்மை எனப்படும். அதற்குரிய ஆற்றல் ஆடவர்களின் உடல், உள்ளங்களிலேயே அமைந்துள்ளது. இத்தன்மையாலேயே இல்வாழ்க்கையை நடத்தும் தலைமைப் பொறுப்பு அவர்களைச் சார்ந்துள்ளது.

பெண்கள் மென்மைத் தன்மை வாய்ந்தவர். 'பெண்டிர்' என்று அவர்கள் அழைக்கப்படுவதற்கு இதுவே காரணம்,

'பெண்மை' என்னும் பெயர் 'பெள்' என்பதன் அடியாகத் தோன்றியதாகும். 'பெட்பு' என்னும் பெயரும் அதனடியாக உண்டானதே. அப்பெயர் விருப்பம், அன்பு அழகு முதலிய பொருளை உணர்த்துவதை இலக்கியங்களிற் காணலாம். 'பெள்' என்னும் பகுதி மைவிகுதிபெற்றுப் பெள்+மை=பெண்மை என்றானது. ஆதலின் பெண்மை என்பதற்கு விரும்பும் தன்மை. அன்புடைமை, அழகுடைமை என்பவை பொருளாகும். விரும்பும் தன்மையும், அன்பும், அழகும் மென்மையை அடியாகக் கொண்டே தோன்றுபவை! இத்தகைய இனிய பண்புகள் பெண் இனத்தவரிடமே சிறந்து விளங்குவதால் அவ்வினத்தவர் உடலாலும் உள்ளத்தாலும் 'மெல்லியலார்' எனப்பட்டனர் எனவேதான் அவர்கள் தங்கள் இயல்புக்கேற்ப இல்லத்தே இருந்து கணவனுடன் கருத்தொருமித்து அவனுடைய முயற்சிகளுக்குத் துணைபுரியும் நிலையில் நின்றனர்.

சிறப்பாக நடைபெறும் குடும்பங்களில் மேற்குறித்த முறையில் தான் கணவன் - மனைவியருடைய கடமைகள் அமைந்திருக்கும், இந்நிலை பண்டைக்காலந்தொட்டு வழங்கி வரும் பண்பார்ந்த இன்னிலையாகும். இக்காலத்திற்கும் இதுவே ஏற்றநிலை என்பதை,

''ஒற்றைக் குடும்பம் தனிலே – பொருள்
ஓங்க வளர்ப்பவன் தந்தை!
மற்றைக் கருமங்கள் செய்தே – மனை
வாழ்ந்திடச் செய்பவள் அன்னை!''

என்னும் பாரதியாரின் வாக்கால் அறியலாம். ஆகவே இல்வாழ்வேற்கும் இருபாலாரும் தங்களிடையே உள்ள அடிப்படையான இத்தன்மை வேறுபாட்டையுணர்ந்து அதற்கேற்ப ஒழுகுவார்களாயின் அவர்களது இல்வாழ்க்கை இனிய வாழ்க்கையாக விளங்கும்.

ஆனால் இன்றைய சமுதாயம் 'சமத்துவம்' என்ற பெயரில் இவ்வேறுபாட்டையும் புறக்கணித்து வருகிறது. 'எல்லா வகையிலும் பெண்கள் ஆண்களுக்கு நிகரானவரே' என்னும் கருத்து இன்று மேலோங்கி நிற்கிறது. 'ஆண்களோடு பெண்

களும் சரிநிகர்சமானமாக' வாழமுடியும் என்று தீவிரமாகப் பாடி, ஆண் – பெண் வேற்றுமையின்மையைப் பாரதியார் தெளிவாக எடுத்துக்காட்டிய பிறகும் இவ்வாறு வேற்றுமை பாராட்டுவது நியாயமற்றது' என்பது 'சமத்துவம்' கொள் வோரின் சார்பாக இன்று பேசப்படும் கருத்துரையாகும். இதில் அமைந்துள்ள உண்மையையும் ஆய்ந்தறிதல் அவசிய மாகும்.

'ஆண்களுக்குப் பெண்கள் தாழ்ந்தவரல்லர்' என்றும் 'ஆண்களோடு பெண்களும் சரிநிகர்சமானமாக வாழமுடியும்' என்றும் பாரதியார் பாடியிருப்பது உண்மையே. ஆனால் அப் பாடல்களால் அவர் எத்தகைய சமத்துவத்தை வற்புறுத்து கிறார் என்பதை நாம் நன்றாக எண்ணிப்பார்க்க வேண்டும்.

உயிர், உடல் என்னும் இரண்டனுள் உயிரே முதன்மை யானது. அதற்குக் கருவியாகத் துணைபுரிவது உடல். சிந் திப்பது உயிர்; அதன்படி செயற்படுவது உடல். உயிரின் முயற்சிக்கு மாறாக உடல்செயற்படவியலாது. உயிர்கிழக்கே செல்ல விரும்பினால் உடலும் அப்படியே நடக்கும். அதனை மறுத்து அது 'நான் மேற்கேதான் செல்வேன்' என்று போக முடியாது. எனவே உயிரின் முயற் க்கேற்பத் துணைபுரிந்து வாழ்வதே உடலின் செயலாகும்.

இங்ஙனம் உயிரும் உடலும் முதலும் துணையுமாக இருப் பினும் இரண்டும் ஒன்றையொன்று சமமாகவே மதிக்கும். காலில் ஒரு முள்குத்தினாலும் உயிர் துடிக்கிறது! உயிருக்குத் துன்பம் நேருங்கால் உணவு, உறக்கங்களையெல்லாம் ஒழித்து உடல் சோர்வடைகிறது.

இவ்வாறின்றி உயிர் தானே முதன்மையானது என்னும் செருக்கில் உடலை உதாசினம் செய்யுமாயின் அதுவாழ முடி யுமா? உடலின் துணையின்றி உயிர் ஒருதுரும்பையும் அசைக்க முடியாது? மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம் பொறிகளின் வாயிலாகத்தான் உயிர் தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்கிறது. அவை செயலற்று விடுமாயின் உயிருக்கு நேரும் துன்பம் மிகப்பெரிது! உடலின் ஒத்துழைப் பின்றித் தங்கள் விருப்பத்தை நிறைவேற்றமுடியாமல் வருந்து

கின்றவரை நாம் நாடோறும் காண்கின்றோமன்றோ? அறு சுவையோடு உண்ணுவதில் ஆசையுடையவர். தங்கள்வயிறு ஒத்துழைக்காமையால் ஆசை நிறைவேறாது அதனையே எண்ணி எண்ணி ஏங்குவதையும், அழகிய காட்சிகளையெல்லாம் கண்டுகளிக்க விரும்புவோர், 'கண்கள் தெரியவில்லையே!' என்று கவலைப்படுவதையும். இன்னும் இவர் போன்ற குறைபாட்டாளரையும் நாம் அன்றாடம்கண்டு பரிதாபப்படுகிறோம் ஆகவே உயிர் தலைமையானதாயினும் தனக்கு உறுதுணையாகவுள்ள உடலை இகழ்ந்தொதுக்கி அதன் ஒத்துழைப்பைப் பெறாது எதனையும் ஆற்றவியலாது என்பது தெளிவாகின்றது. எனவேதான் உயிர், உடலைத் தனக்குச் சமமாகவே மதித்து இயங்கும் இயல்புடையதாகவுள்ளது. அதனாலேயே அவை இரண்டும் ஒன்றுபட்டு வாழ முடிகின்றது

இல் வாழ்க்கையில் கணவன் மனைவி இருவருக்கும் இடையே உள்ள தொடர்பும் மேற்கண்ட உயிருக்கும் உடலுக்கும் இடையே உள்ளது போன்று அமைய வேண்டும். அப்போதுதான் அவர்கள் வாழ்வு சிறப்புறும். பண்டைத் தமிழகத்தில் இருபாலாரும் இத்தகைய தொடர்புடையவராகவே வாழ்ந்து வந்திருக்கின்றனர் என்பதற்குப் பலஇலக்கியச் சான்றுகள் உள்ளன.

ஒருதலைவன் தன்காதலியோடு தனக்குள்ள தொடர்பை,

> "உடம்பொடு உயிரிடை என்ன மற்றன்ன
> மடந்தையொடு எம்மிடை நட்பு" (–குறள் 1122.)

என்று கூறுவதாகத் தமிழ்மறை காட்டுகிறது. அவளுக்கும் தனக்கும் உள்ள தொடர்பை, உடலுக்கும் உயிருக்கும் உள்ளது போன்றதென அவன் கூறுவதிலிருந்து அவன் தன்னை உயிராகவும் அவளை அவ்வுயிர் இயங்குவதற்கு ஆதாரமாகவுள்ள உடலாகவும் கருதியிருப்பதை உணரலாம்.

மகளிரும் கணவனை உயிராகவும் தங்களை உடலாகவும் கொண்டு வாழ்ந்து வந்திருக்கின்றனர். அதனாலேயே கணவனை இழந்த மகளிர் உயிரற்ற உடலைப் போன்றவர்கள் என்பதைத் தங்கள் வாழ்க்கையிலே நிறுவிக்காட்டித் தலையாய அன்பு நெறியை இத்தமிழகத்தே வாழச் செய்துள்ளனர்.

'தன்னுயிர் கொண்டு அவனுயிர் தேடினள்போல் பெருங் கோப்பெண்டும் ஒருங்குடன் மாய்ந்த' வாறுகணவனோடு தங் கள் வாழ்வை முடித்த அரிவையர் தொகையைக் கணக்கிட வியலாது.

இவ்வாறு இல்வாழ்க்கையில் கணவனும் மனைவியும் தங் களை உயிரும் உடலுமாக எண்ணி ஒன்றுபட்டு வாழ்ந்துவந் தமையால் அவ்விருவரிடையே ஏற்றத்தாழ்வு என்பது எள் ளளவும் இடம்பெறவில்லை. வாழ்வும் சீராக விளங்கியது.

ஆனால் பிற்காலத்தில் கணவனிடம் 'தான்' என்ற முனைப்பு தோன்றியது. மனைவி உரிமை இழந்தாள்; அடிமை யாக நடத்தப்பட்டாள். அதனால் இல்வாழ்வு இயந்திரவாழ் வாக மாறியது. கணவன் மனைவியின் நலம்பற்றிச் சிறிதும் சிந்தியாது கொடூரமான எஜமானனாகித் தான் மட்டும் சுக வாசியாக வாழ்ந்து வந்தான். மனைவியைத் தனக்குச் சம மாகக் கருதாது அடிமையாக நடத்திவந்த இக்கொடுமை யைத்தான் பாரதி தீவிரமாக எதிர்த்தார்.

> "மாதர் தம்மை இழிவுசெய்யும்
> மடமையைக் கொளுத்துவோம்!"

என்றும்

> "தாதர் என்ற நிலைமைமாறி ஆண்களோடு பெண்களும்
> சரிநிகர் சமானமாக வாழ்வம் இந்த நாட்டிலே!"

என்றும் பெண்கள் சார்பாக நின்று புரட்சி செய்தார்.

இங்ஙனம் பாரதியார் ஆண்கள் பெண்களை அடிமையாக நடத்தும் கொடுமையைத் தான் கண்டித்துப் பாடியுள்ளார். அந்நிலை மாறி இருசாராரும் உயர்வு–தாழ்வு கருதாது சரிநிகர் சமானமாக வாழவேண்டும் என்று அவர் பெரிதும் விரும்பினார். இந்த நோக்கத்தோடுதான் அவர் 'ஆணுக்குப் பெண் தாழ்ந்த வளல்லள்' என்று பாடியுள்ளாரே ஒழிய 'ஆணுக்கும் பெண் ணுக்கும் வேற்றுமையே இல்லை. என்பது அவர் கொள்கை யன்று அதுவே அவர் கொள்கையின் அந்நிய ஆட்சிக்கு அடி பணிந்து செயலாற்றும் திறனற்றிருந்த ஆண் இனத்தவரைப் "பெண்கள்" என்று இகழ்ந்திருக்கமாட்டார்.

''கண்கள் இரண்டிருந்தும்
காணும் திறமை யற்ற
பெண்களின் கூட்டமடி!-கிளியே
பேசிப் பயன் என்னடி!''

என்று இவர் இகழ்ந்து பாடியுள்ள இப்பாடலில் செயலாற்றுவதில் ஆண்களுக்கு இணையாக வியலாத பெண்களின் இயற்கை நிலையைப் பாரதியார் ஒளிவு மறைவின்றிக் கூறியிருப்பதை ஆழ்ந்து நோக்க வேண்டும்.

'பெண் என்றால் பேயும் இரங்கும்!' என்பது ஒரு பழமொழி. இதில் சிலர்க்கு ஐயம் தோன்றக் கூடும்; 'மனிதர்க்கே இரக்கம் தோன்றவில்லையே! பேய்க்குத் தோன்றுமா?' என்று ஆனால் பேய்க்கு இரக்கம் தோன்றினாலும் தோன்றா விட்டாலும் பெண் என்றவுடன் மனிதர்க்கு நிச்சயம் இரக்கம் தோன்றும்' என்று பாரதியார் உறுதியாக நம்பியிருக்கிறார். அதனால்தான் விடுதலையுணர்வின்றிச் சோர்ந்துகிடந்த தமிழக மக்களுக்குச் செந்தமிழ் நாட்டின் சிறப்புக்களை எடுத்துரைத்து உணர்ச்சியூட்ட விரும்பிய அவர் நம் தாய் நாட்டைத் ''தந்தையர் நாடு'' என்று மிகவும் விழிப்போடு பாடினார்.

எவரும் தங்கள் நாட்டைத் 'தாய் நாடு' என்று கூறுவரேயொழியத் 'தந்தையர் நாடு' என்று கூறார். ஆயினும் பாரதியார் 'தந்தையர் நாடு' என்று பாடியிருக்கிறார். 'தாய் நாடு' என்று பெண்ணின் பெயரால் குறிப்பிட்டால் அனைவருக்கும் இரக்கவுணர்வே மிகும்; வீரவுணர்வு தோன்றாது என்றே இப்படிப் பாடினார்' என்பதைத்தவிர இதற்கு வேறு என்ன காரணம் கூறக்கூடும்?

---

(தொடரும்)

சிவ சிவ]

# யாருக்கு அருள்?

திரு. புலவர் சா. சந்துரு அவர்கள்,
திருவானைக்கா

அருவமும் உருவமாகி அனாதியாய்ப் பலவாய் ஒன்றாய் பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பு ஓர் மேனியாகிக் கருணை கூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டு ஒரு திரு முருகன் வந்து உதித்தனன்.

பிறப்பிறப்பற்றவன்; போக்கும் வரவு மிலாப் புண்ணியன்; தனக்கென ஒருரு இல்லான்; காலங்கடந்தவன் கருணை கூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டு கன்மம், ஆணவம், மாயை மலிந்த இவ்வுலகில் வந்துதித்தது ஏன்? இந்த உலகு உய்ந்து உயர்வழி பெற்று உருப்பெறவே.

அவ்வாறாயின், படைத்துக் காத்து அழித்தல் தொழிலைச் செய்யும் எம்பெருமான் தான் இருந்த இடத்திலேயே இருந்து உலகுய்யும்படிச் செய்யலாகாதா? இயலும். பின்னர் ஏன் உலகில் தோன்றினான்? சிந்தித்தல் வேண்டும்...........

ஆறுமுகம் கொண்ட அண்ணலின் அன்புக் குழந்தைகள் தாம் இவ்வுலகில் தோன்றிய அனைத்துயிர்களும் என்பதனை முதலில் அறிதல் வேண்டும். இவ்வுலகு என்பது மாயை என்னும் சேறு நிறைந்த பாழும் கிணறு. இக்கிணற்றில் பன்னிரு கரங்கள் பெற்ற பண்டிதனின் குழந்தைகள் தாம், செய்த நல்வினை, தீவினை காரணமாக இவ்வுலகக் கிணற்றில் விழுந்துழல்கின்றன.

கிணற்றில் குழந்தை விழுந்ததை அறிந்த எந்தத் தாயும் சற்றும் சிந்திக்காமல் கிணற்றில் குதித்து விடுவது இயல்பு. அதுபோல உலக உயிர்களின் தாயாகிய எம்பெருமானாகிய கந்தன் உயிர்களின் மேல் கொண்ட எல்லையற்ற கருணையின் காரணமாக இவ்வுலகில் வந்து உதிக்கிறான்.

அங்ஙனமாயின். உலகில் தோன்றி, ஐவர்க்கு இடம் பெறக் காலிரண்டு ஒட்டி அதிலிரண்டு கை வைத்த உடம்பினைப் பெற்ற மனித உயிர் முதலாக ஈரிரண்டு தோற்றத்து, எழுபிறப்புள் யோனி எண்பான் ஆரவந்த நான்கு நூறாயிரம் உயிர்கள் ஈறாக எல்லாரையும் உய்வித்தானா உத்தமன்? அது தான் இல்லை.........

ஏன்?

நோயுற்ற குழந்தைக்குத் தாய் உணவு அளிப்பதில்லை. ஏனெனில், உணவினால் நோயின் தொல்லை மிகுதியாகும் அல்லது உணவு வயிற்றினுள் செல்லாது வெளியே வரவும் கூடும். இதனைக் குழந்தையைப் பெற்றதாய் அறிவள். ஆனால் இச் செய்கையை வைத்து தாய் குழந்தையினிடத்து சற்றும் இரக்க மற்றவள்; ஆகவேதான் குழந்தைக்கு உணவு கொடுக்கவில்லை என நாம் முடிவு செய்வது இல்லை. சிலநாள் சென்றபின் நோய் நீங்கி நலம்பெற்ற குழந்தை, அதுவாகவே உணவினைத் தாயிடம் வேண்டும். அப்பொழுது தாய் உணவு கொடுப்பாள்.

அதுபோலவே, முடியாப் பிறவிப் பெருங்கடலில் மூழ்கி, உலக ஆசையாகிய நோய் பெற்றுள்ள உயிராகிய குழந்தையிடம், அறுமுகவனாகிய அன்னை அருட்பேற்றினை அளித்தால் அது பயன்படாது போய்விடும். இதனை கந்தக்கடவுள் அறிவான்,

உலக ஆசையாகிய நோய் நீங்கிய குழந்தை (உயிர்) தானே பேரின்பப்பேற்றினை வேண்டி நிற்கும் நிலையிலேயே இறைவன் அருளென்றும் இன்னமுதினை அளிப்பான். வேண்டாது நிற்கும் உயிர் வேண்டும்போது கொடுப்பது சிறப் பல்லவே?

அவ்வாறானால், உலக ஆசை விட்டு உயர எண்ணுபவர் யார்? அவர்கள்தான் அடியார்கள். அடியார்கள் என்பவர் யார்?

மறஞ்சுவர் மதிளெடுத்து மறுமைக்கே வெறுமை பூண்டு புறஞ்சுவர் கோலம் செய்யாது, தோலால் சுவர் வைத்து, நாலாறு காலில் சுமத்தி, இருகாலால் எழுப்பி, வளைமுதுகு ஒட்டி, கைந்நாற்றி, நரம்பால் ஆர்க்கையிட்டுத், தசை கொண்டு மேய்ந்த அகம்பிரியுமுன், என்பெலாம் உருகி நெக்கு நெக்கேங்கி அன்பெனும் ஆறு கரையது புரள, நன்டலனேற்றி, நாதா! என்று அரற்றி, கோலமா மஞ்ஞை மீது குலவிடும் குமரனைக் கைதொழூஉப் பரவி, காலுற வணங்குபவரே அடியார் ஆவார்.

இவர்களே பண்பட்டார். இவர்கட்கே, எவ்வுயிர்க்கும் தஞ்சமென நிற்கும் தனிப்பொருள், ஆணவப் படலங்கிழித்து அழியா முத்தி இன்பம் அளிப்பான். அழுதபிள்ளை பால் குடிக்கும் என்பதனை உணர்ந்து, அவன் அருள் நினைந்து அழுங் குழவி அதுவே போன்று இருப்போமாக!

சிவ சிவ]

# திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தில்
## ஆவணிமூலத் திருநாள் உதவி நிதி-ரூ. 5,000/-

திருவாதவூரடிகளாகிய மாணிக்கவாசகர் பொருட்டு இறைவன் "மன்னவற்கு இன்று, முந்தி ஆவணிமூல நாள் வந்தது முனிவு. சிந்தியா முனம்பரிபெலாம் செலுத்துவான் வேண்டும்" என்று திருவுளங் கொண்டு, நரிகளையெல்லாம் பெருங் குதிரைகளாக்கித் தானும் மதுரைப்பெருநன்மாநகரின் கண் குதிரைச் சேவகனாகி எழுந்தருளி, மன்னனிடம் குதிரைகளை ஒப்படைத்துக் கயிறு மாறிய பின்னர், பரிகள் நரிகள் ஆகமாற, மன்னவன் சினந்து மணிவாசகரைத் துன்புறுத்த, அடியவர் துயரை அகற்றுதற் பொருட்டு, இறைவன் வைகையில் வெள்ளம் வரச்செய்து, கரையடைத்தற்காக வந்தி என்னும் பிட்டு வாணிச்சியின்பொருட்டுக் கூலியாளாகி மண் சுமந்தருளிய வரலாற்றை உடைய ஆவணிமூலத் திருநாளை, வழிவழி ஸ்ரீகாசிமடத்தில் நடத்தி வருவதை இனியும் தொடர்ந்து நடத்தி வருதற்பொருட்டு இத்தருமம் திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து 21-ஆவது அதிபர் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி முத்துக் குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் 30-ஆவது தருமமாக நிறுவப் பெற்றது. இது "திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்தில் ஆவணிமூலத் திருநாள் உதவி நிதி" எனப்பெயர் பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 5,000/-/ ரூபாய் ஐந்தாயிரம்/. இது ஆண்டொன்றுக்கு 7-3/ 4% வட்டி தரக் கூடிய நீண்டகால முதலீடாகக் கும்பகோணம் இந்தியன் பாங்கில் 61 மாதங்களுக்கு முதலீடு செய்யப்பெற்றுள்ளது. பிக்சட் டெபாசிட் எண். 179779 தேதி 10-7-1973, ரூ 5,000/- இது நம்மாலும் நமக்குப்பின் வரும் ஸ்ரீகாசி மடத்து அதிபர்களாலும் பரிபாலனம் செய்யப்பெற்று வரும்.

3. இம்முதற் பொருளிலின்று ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டித் தொகையிலின்று இத்தருமத்தைப் பரிபாலனம் செய்வதற்குரிய நிர்வாகச் செலவுகள் போக எஞ்சியதொகை

இதுகாறும் ஸ்ரீ காசிமடத்தில் நடத்தப்பெற்று வந்த ஆவணி மூலத்திருநாட்கள் பத்தும், இதுகாறும் ஏற்படுத்தியுள்ள திட்ட ஜாப்தாவில் கண்டவண்ணம் நடத்திவருவதற்குச் செல விடப்பெற்று வரும். எஞ்சிய தொகை ஸ்ரீ காசிமடத்தில் ஆன்மார்த்த சொக்கநாதர் நித்திய பூசைச் செலவுக்கு யுக்தம் போல் செலவிடப் பெற்றுவரும்.

4. ஷி வட்டி வருமானம மேலே குறித்த செலவிற் கன்றி வேறுஎந்த முறையிலும் செலவு செய்யப் பெறமாட் டாது. வட்டி வரவிற்கேற்பவும், இதுகாறும் நடத்திவந்த திட்ட ஜாப்தாவை அனுசரித்தும் நம்மாலும் நமக்குப்பின் வரும் ஸ்ரீ காசமடத்து அதிபர்களாலும் இது நடத்தப்பெற்று வரும்.

5. இம்முதற் பொருள் நம்பேரிலும் நமக்குப்பின் வரும் ஸ்ரீ காசிமடத்து அதிபர்கள் பேரிலும் இருந்து வரும். இம் முதற்பொருள் திருப்பி அளிக்கப் பெற்றதும் அதிகவட்டி வரக்கூடிய அரசயல் கடன்தாள்களிலோ அல்லது நீண்டகால முதலீடுகளிலோ முதலீடு செய்யப்பெற்று வரும்.

Tirupanandal
28—7—1973 } (Sd.) Kasivasi Muthukumaraswami Tambiran

---

Registered at the Tiruvidaimarudur Sub-Registrar's Office on 30—7—1973 as document No. 29/1973 Book-4, Volume 59 Pages 109 to 110.

# மூன்றும் திருமுறையின்
## முதற்பாடல்கள் — உரை

திரு. தா. ம. வெள்ளைவாரணம் அவர்கள்

**56. திருப்பிரமபுரம்** பண்: கௌசிகம்

இறையவன் ஈசன்எந்தை
　　இமையோர்தொழு தேத்தநின்ற
கறையணி கண்டன்வெண்டோ
　　டணிகாதினன் காலத்தன்று
மறைமொழி வாய்மையினன்
　　மலையாளொடு மன்னுசென்னிப்
பிறையணி செஞ்சடையான்
　　பிரமாபுரம் பேணுமினே.

பொழிப்பு: இறைவனும், ஈசனும், எந்தையும், தேவர்கள் வணங்கித் துதிக்கின்ற விடக்கறையுள்ள கண்டனும், வெண்மையான தோடணிந்தகாதனும், அக்காலத்தே வேதத்தின் பொருளை அருளிச் செய்த வாய்மையனும், உமாதேவியோடு பொருந்துபவனும், தலையில் பிறை அணிந்த செஞ்சடையனும் ஆகிய சிவபெருமானது திருப்பிரமபுரம் என்னும் தலத்தை வழிபடுவீராக.

காலத்தன்று–அக்காலத்தில்; பிரமன் பூசித்துப் பேறு பெற்றதால் பிரமாபுரம் எனப்பெயர் வந்தது. பேணுதல்-வழிபடுதல்; ஞானசம்பந்தர் சீர்காழிப்பதியின் கண் இருந்து பாடிய பதிகங்களில் இதுவும் ஒன்று. இப்பதிகத்தைப் பாட வல்லவர் விண்ணுலகம் எதிர் கொள்ள விரும்பப்படுவர்.

**57. திருவொற்றியூர்** பண்: பஞ்சமம்

விடையவன் விண்ணுமண்ணும்
　　தொழ நின்றவன் வெண்மழுவாட்
படையவன் பாய்புலித்தோல்
　　உடை கோவணம் பல்கரந்தைச்
சடையவன் சாமவேதன்
　　சசி தங்கிய சங்கவெண்டோ
டுடையவன் ஊனமில்லி
　　உறை யும்மிடம் ஒற்றியூரே.

பொழிப்பு: விடையை உடையவனும், தேவரும் மக்களும் தொழுமாறு நின்றவனும், வெண்மையான மழுவாட் படையுடையவனும், பாய்புலித் தோலுடையும் கோவணமும் தரித்தவனும், பல்கரந்தைப் பூவணிந்த சடையவனும், சாம வேதத்தை விரும்புபவனும், கடலில் தங்கியிருக்கின்ற சங்கினுல் ஆகிய வெண்தோடு உடையவனும் ஆகிய சிவபெருமான் தங்கியிருக்கும் இடம் திருவொற்றியூர் ஆகும்.

விண் மண் என்பன ஆகுபெயராய்த் தேவர்களையும் மக்களையும் குறிக்கும். சஅ - கடல். ஊனம் - குறைபாடு. ஞானசம்பந்தர் திருவொற்றியூரை அணுகும்போது திருத்தொண்டர்கள் எதிர்கொண்டு தொழ இவரும் தொழுது இப்பதிகம் பாடியருளினர். இப்பதிகத்தை ஏத்தவல்லவர் மேலுலகத்தில் தாம் விரும்பியவெல்லாம் எய்துவர். மேலும் அவர்க்கு வீடுபேறும் எளிதாகக் கிட்டும்.

(தொடரும்)

---

உ

சிவ சிவ

சிவாய நமவெனச் சித்தம் ஒடுக்கி
அவாயம் அறவே அடிமைய தாக்கிச்
சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே.

# திருவிடைமருதூரில் திருமுறை விழா

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்
ஸ்ரீ-ல-ஸ்ரீ
காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்
அவர்களின் ஆணையின் வண்ணம் நடத்தப்பெறுவது
பிரமாதீச ஆண்டு தை மாதம் 24௨
6—2—1974 புதன்கிழமை தைப்பூசம்

தேவார இன்னிசை வாணர்கள்:

1. சுரலய இசைவள்ளல் திரு M கனகசபைப் பிள்ளை,
ஸ்ரீகாசிமடம் சிவசிவ ஒலிமண்டப ஓதுவார், சிதம்பரம்.
2. சங்கீதபூஷணம் திரு M. சுப்பிரமணிய முதலியார்,
தேவார ஆசிரியர், திருப்பனந்தாள்.
3. சங்கீதபூஷணம் திரு P. சாமிநாத முதலியார்; சென்னை.
4. தமிழ்மறை இன்னிசைப் பண்மணிகள் திரு.
விசுவலிங்கம் சபாபதி சகோதரர்கள் திருவாவடுதுறை.
5. ஆடல்மாமணி திரு S. சட்டைநாத முதலியார்,
திருமுறைப்பணி, திருப்பனந்தாள்.
6. திரு. T. M. கிருஷ்ணன் பிடில், கும்பகோணம்.
7. திரு. S. A. கோபாலன் வேய்ங்குழல், ஆசிரியர்,
செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்.
8. திரு. கோ. வேங்கடராமன், மிருதங்க ஆசிரியர்' ஷை

இடைமருதுறையும் எந்தாய் போற்றி! பரவுக திருமுறை உலகெலாம்!

SRI KASIMUTT
Religious Charities
திருப்பனந்தாள்

By Order of His Holiness
K. M. Venkataramiah, M.A.,
Manager,

குறிப்பு: 1. திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களின் திருவுளப்பாங்கின் வண்ணம் ஷை நாளில் திருவிடைமருதூரில் ஏழைகளுக்கு அன்னம்பாலிப்பு நடத்தப் பெறும், கஞ்சிவார்த்தலும் நடைபெறும்.

2. ஷை தைப்பூசத் திருநாளில் இரவு 8 மணிக்கு வீரசோழ ஞற்றங்கரையில் ஸ்ரீ மாகலிங்கசுவாமி எழுந்தருளியிருக்கும் புஷ்ய மண்டபத்திலிருந்து தொடங்கி இரவு முழுவதும் சிவமே நிலவும் திரு வீதியில் ஓதுவார்களால் தேவாரம் ஓதப்பெற்று விடியல் 6 மணிக்குக் கோயில் சந்நிதியில் பூர்த்தி செய்யப்பெறும்.

3. மதுரையில் சொக்கலிங்கம் சந்தனமெய்ப்பூச்சு, சீர்காழி ஸ்ரீ சட்டைநாதர் புழுகுநெய் சார்த்துதல், சிவாசார்யர் வகையரு படிக்காசு.

உ

சிவ சிவ

## திருஞானசம்பந்தர் தேவாரம்

திருச்சிற்றம்பலம்

எண்ணும் அடியார்கள், அண்ணல் மருதரைப்
பண்ணின் மொழிசொல்ல, விண்ணுந் தமதாமே.
இருவர்க் கெரியாய, உருவ மருதரைப்
பரவி யேத்துவார், மருவி வாழ்வரே.

## திருநாவுக்கரசர் தேவாரம்

கனியி னுங்கட்டி பட்டக ரும்பினும்
பனிம லர்க்குழல் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித் தாளு மரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே.

பாசம் ஒன்றில ராய்ப்பல பத்தர்கள்
வாச நாண்மலர் கொண்டடி வைகலும்
ஈசன் எம்பெரு மான்இடை மருதினில்
பூசம் நாம்புகு தும்புனல் ஆடவே.

திருச்சிற்றம்பலம்

## க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ்

உருச்சிகர தரிசனஞ் செய்தோர் பிறப்பொழித்
துயர்முத்தி யுதவுசயிலம்
உனக்குமயில் தந்திடக் காசிபன் தனைமுன்னம்
உயிரினை விடுத்தசயிலம்
கருச்சுமையி தென்றுடலை யருவருத் திடுபெரியர்
காயங்கள் நீக்குசயிலம்
கந்தநீ தந்தையைப் பூசித்த சயிலமும்
கங்கைசூழ் காசிமகிமை
அருச்சனை செயுந்தலைவி மகிழவே கும்பமுனி
அன்போ டுரைத்த சயிலம்
அனந்தமடி யார்சிறிய சிலையெலாம் சிவலிங்க
மாமென் றணிந்தசயிலம்
திருச்சயில மலைவா ழுருட்டரும நாயகா
சிறுதே ருருட்டியருளே
தென்மருதி லிடைமருதில் வடமருதில் வாழ்முருக
சிறுதே ருருட்டியருளே

## திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் 'திருமுறை வெளியீடுகள்'

| | | ரூ. பை. |
|---|---|---|
| 1 | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர்குறிப்புரையுடன் (புதிய பதிப்பு) ... | 3 50 |
| 2 | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்த காசிக்கலம்பகம் மூலமும் அரும்பதக்குறிப்பும் ... | 0 40 |
| 3 | ,, சிதம்பர மும்மணிக்கோவை ,, ... | 0 20 |
| 4 | ,, மதுரைக்கலம்பகம் ,, ... | 0 40 |
| 5 | ,, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் ,, ... | 0 60 |
| 6 | திருச்செந்தூர்க் கந்தர்கலிவெண்பா—மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்—மதுரைக்கலம்பகம்—நீதிநெறி விளக்கம்—மதுரை மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை மதுரை மீனாட்சியம்மை குறம ... | 2 70 |
| 7 | திருவாரூர் நான்மணிமாலை—முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் ... | 1 25 |
| 8 | திருவாரூர் நான்மணிமாலை உரையுடன் ... | 0 50 |
| 9 | சிதம்பர மும்மணிக்கோவை-சிதம்பரச் செய்யுட்கோவை தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை ... | 1 00 |
| 10 | பண்டார மும்மணிக்கோவை-காசிக்கலம்பகம் சகலகலாவல்லி மாலை ... | 1 00 |
| 11 | நீதிநெறி விளக்கம்-ஆங்கிலமும், ஹிந்தியும் ... | 0 50 |
| 12 | ,, மூலம் ... | 0 10 |
| 13 | நீதிநெறி விளக்கமும் நன்னெறியும்—மூலம் ... | 0 15 |
| 14 | கந்தர்கலிவெண்பா மூலம் மட்டும் ... | 0 10 |
| 15 | கந்தர்கலிவெண்பா (புதிய பதிப்பு) ... | 0 05 |
| 16 | அபிராமியந்தாதி மூலம் ... | 0 15 |
| 17 | திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் (புதிய பதிப்பு) ... | 4 25 |
| 18 | திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் (புதிய பதிப்பு) ... | 2 75 |
| 19 | சுந்தரர் தேவாரம் (புதிய பதிப்பு) ... | 1 75 |
| 20 | திருவாசகம் (மூலம்) ... | 0 75 |
| 21 | திருக்கோவையார் (பேராசிரியருரையும் பழையவுரையும்) ... | 3 50 |
| 22 | 9-ம் திருமுறை-திருவிசைப்பா திருப்பல்லாண்டு மூலம் ... | 0 56 |
| 23 | ,, ,, தெளிவுரை ... | 1 50 |
| 24 | திருமந்திரம் (மூலம்) புதிய பதிப்பு ... | 2 50 |
| 25 | பதினோராந் திருமுறை (புதிய பதிப்பு) ... | 2 50 |
| 26 | பேரூயிரப் பனுவல்கள் ... | 0 10 |
| 27 | திருத்தொண்டர் புராணசாரம் ... | 0 40 |
| 28 | அம்மையார் அற்புதத் திருவந்தாதி ... | 0 25 |
| 29 | திருக்கைலாய ஞானவுலா-உரையுடன் ... | 0 50 |
| 30 | திருக்கயிலைத் திருமுறை ... | 0 37 |
| 31 | பழமொழித் திருமுறை ... | 0 25 |
| 32 | உப்பர்விழா வெளியீடு ... | 0 25 |
| 33 | Hymns and Proverbs ... | 0 35 |
| 34 | திருவாரூர்-திருப்பனுவல்கள் ... | 0 10 |

Registered With the Registrar of Newspapers for India
Under No. R No 1485/57.
Regd No. M. 5574 குமரகுருபரன்

| | | | |
|---|---|---|---|
| 35 | குமரகுருபரர் வரலாறும், அற்புதத்தேவாரத்திரட்டும் | ... | 0 30 |
| 36 | கந்தபுராணச் சுருக்கம் (மூலம் மட்டும்) | ... | 1 75 |
| 37 | திருவாசகம் தேனும் கனியும் | ... | 0 15 |
| 38 | தேவாரம் பாடும்பயன் | ... | 0 15 |
| 39 | காசிக்கலம்பகம் உரை நடை | ... | 0 15 |
| 40 | தாழைத் திருமுறை | .. | 0 15 |
| 41 | ஐந்து நீதி நூல்கள் | .. | 0 10 |
| 42 | நவக்கிரகமாண்பு | .. | 0 25 |
| 43 | ஸ்ரீ சைலம் | ... | 0 10 |
| 44 | திருவுசாத்தானக் கல்லெழுத்துகள் | ... | 0 37 |
| 45 | திருவெம்பாவை - திருப்பள்ளியெழுச்சி | ... | 0 10 |
| 46 | செந்திலாண்டவன் மகிமை | ... | 0 15 |
| 47 | திருக்குறள்-உரைக்கொத்து-அறத்துப்பால் (4-ம் பதிப்பு) | ... | 2 00 |
| 48 | திருமுருகாற்றுப்படை | .. | 0 15 |
| 49 | தேவார வைப்புத்தல விளக்கம் | ... | 0 15 |
| 50 | திருக்குறள் மணக்குடவர் உரை (முப்பாலும் சேர்ந்தது) | ... | 2 00 |
| 51 | திருக்குறள் மூலம் | ... | 0 25 |
| 52 | திருக்குறள்-அறத்துப்பால்-சிற்றுரை | .. | 0 20 |
| 53 | திருக்குறள்-பொருட்பால்-பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம் | .. | 0 13 |
| 54 | முதுமொழிமேல்வைப்பு (குறிப்புரை) | .. | 0 60 |
| 55 | திருக்குறள் அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும் ஹிந்தி மொழிபெயர்ப்பும் | .. | 1 50 |
| 56 | திருக்குறள்-பொருட்பால் ,, | .. | 2 50 |
| 57 | திருக்குறள்-காமத்துப்பால் ,, | .. | 1 00 |
| | ஷெ 53, 54, 55 திருக்குறள் 3 புத்தகமும் | ... | 4 00 |
| 58 | கந்தர்கலிவெண்பா, சகலகலாவல்லிமாலை ஆங்கிலம் ஹிந்தி மொழிபெயர்ப்புடன் | ... | 1 25 |
| 59 | திருவருட்பயன் மூலம் இந்தி, ஆங்கிலமொழிபெயர்ப்புடன் | .. | 1 00 |
| 60 | சிவகொழுந்து தேசிகர் பிரபந்தம் | ... | 3 00 |
| 61 | அகத்தியர் தேவாரத்திரட்டு (புதிய பதிப்பு) | ... | 0 50 |
| 62 | மங்கலம் | .. | 0 20 |
| 63 | திரு ஆனைத் திருமுறையும் உருத்திராக்க விதானமும் | .. | 0 20 |
| 64 | கோதனத் திருமுறை | .. | 0 10 |
| 65 | தோடுடைய செவியன் கோவண ஆடையன் | ... | 0 15 |
| 66 | பண்டார மும்மணிக்கோவை உரை நடை | ... | 0 15 |
| 67 | மகேசுவரபூசை | ... | 0 15 |
| 68 | கந்தர் அநுபூதி-சுவாமிமலை கும்பாபிஷேக நினைவு மலர் | ... | 0 10 |
| 69 | திருவிசைப்பா தேனும் கனியும் | ... | 0 10 |

மேலே கண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

**1 ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்**

**2. "தியாகராஜ விலாசம்"** 53. பிள்ளையார் கோவில் தெரு,
திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை-5

அச்சிட்டது:- குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம் 74